கோகுலம்

GOKULAM

ஜனவரி '88 விலை ரூ. 3.





லூயி கரால்

தோற்றம்: 27-1-1832 மறைவு: 14-1-1898



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்.

கோகுலம்

1988 ஜனவரி மாத இதழ்
மலர் 5 : இதழ் 12
தனிப்பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா



புகைப்படம்: எஸ். ஜி. சேஷகிரி.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

ஆங்கிலப் புத்தாண்டு பிறக்கப் போகிறது. பொங்கல் திருநாளும் நெருங்கி வருகிறது. இரண்டிற்கும் சேர்த்து இப்போதே எங்களின் நல்வாழ்த்துக்களை, கோகுலம் வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பல நாடுகளில் அறுவடைத் திருநாள் (Harvest Festival) என்று கொண்டாடினாலும், தமிழகத்தில் நாம் கொண்டாடுவது போல, 'பொங்கல் விழா' என்று தொடர்ந்து மூன்று நாட்கள் கொண்டாடுவதில்லை.

வயல்கள் சூழ்ந்த இடத்தை மருதம் என்பார்கள். மருதநில மக்களின் தெய்வம் இந்திரன். ஆகவே இந்திரனை வழிபடும் நாளை போகி என்கிறோம்.

மழை வளம் தருவது ஞாயிறு. ஞாயிற்றை வழிபடும் நாளை பெரும் பொங்கல் என்கிறோம்.


உழவருக்குப் பயிரிடப் பயன்படுவது மாடுகள். மாடுகளுக்கு நன்றி செலுத்தும் நாளை மாட்டுப் பொங்கல் என்கிறோம்.

பால் பொங்குவது போல், நம் உள்ளத்திலே இன்பம் பொங்க வேண்டும்; நாட்டிலே மகிழ்ச்சி பொங்க வேண்டும். பஞ்சம் இன்றி, பட்டினி இன்றி, உலக மக்கள் அனைவரும் இன்பமாக, அமைதியாக, எல்லா நலன்களும் பெற்று வாழப் பிரார்த்திப்போமாக!


கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் தொகை இருபதாயிரத்தைத் தாண்டி விட்டது! மனு அனுப்பி, இதுவரை உறுப்பினர் அட்டை பெறாதவர்களுக்கு விரைவிலே அனுப்ப ஏற்பாடு செய்து வருகிறோம். தாமதம் ஏற்பட்டது குறித்து மிகவும் வருந்துகிறோம்.

— அழ. வள்ளியப்பா.

இந்த இதழ் எழுத்தாளர்கள்



* சீர்காழி சாமா



கி. சீனிவாசன்



உ. வெங்கடேசன்



பரிதி இரா. வெங்கடேசன்



எஸ். மஞ்சு




இ. பட்டாபிராமன்


பிருந்தாவனக் கவிஞர்கள் • பிருந்தாவனக் கதாசிரியர்கள்



இரா. பரமசிவம்



ராஜ். திருப்பதி



சி. எல். சரவணன்



எஸ். உமா

அட்டை வண்ணப்படம்: ராஜா பொன்சிங்.



கோகுலம் சிறுவர் சங்க 20,001—வது உறுப்பினர்

சிவ. பூங்குன்றன், த/பெ. சிவகுருநாதன், ஆசிரியர்,
மெயின் ரோடு, பூரணாங்குப்பம்,
புதுவை — 605 007.



என் குழந்தைப் பருவம்

டாக்டர் பி. ராமமூர்த்தி

தமிழ்நாட்டிற்கு உலகப் புகழைத் தேடித் தருபவர் டாக்டர் பி. ராமமூர்த்தி அவர்கள். நரம்பியல் மருத்துவத்திலே பல சாதனைகள் புரிந்தவர். இவர் பெற்றுள்ள பட்டங்களையும், பரிசுகளையும், பாராட்டுக்களையும் எழுதுவதற்கு இங்கே இடம் போதாது.

நம் குடியரசுத் தலைவரின் கௌரவ மருத்துவராகத் திகழும் இவர், பத்மஸ்ரீ, பத்மபூஷண் விருதுகளைப் பெற்றவர். இந்தியப் படை வீரர்களின் கௌரவ பிரிகாடியர். ராயல் காலேஜ் ஆஃப் சர்ஜன்ஸ் (எடின்பர்க்), இன்டர்நேஷனல் காலேஜ் ஆஃப் சர்ஜன்ஸ், அமெரிக்கன் காலேஜ் ஆஃப் சர்ஜன்ஸ், நேஷனல் அகாடமி ஆஃப் மெடிகல் சயின்ஸ் ஆகியவற்றில் கௌரவ உறுப்பினர் (Fellow) ஆக இருப்பவர்.


நான்கு வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் 12 இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் வருகைதரும் பேராசிரியராகப் (Visiting Professor) பணிபுரிபவர்.

சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வராக இருந்த இவர், பல மருத்துவ நிறுவனங்களை நிறுவியும், உறுப்பினராக இருந்தும் திறம்பட இயக்கி வருபவர். 200 க்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டவர்.

தற்போது, அடையாற்றிலுள்ள வாலன்டரி ஹெல்த் சர்வீஸ் நடத்தும் மருத்துவ மனையில், நரம்பியல் துறைத் தலைவராக விளங்குகிறார்.

இவருடைய துணைவியார் டாக்டர் இந்திரா ராமமூர்த்தி அவர்களும் புகழ்பெற்ற ஒரு மருத்துவர் என்பது குறிப்பிடத்தக்கது.


சின்னஞ்சிறு பருவம் எல்லாம் திருச்சியில். தகப்பனார் பிரபல டாக்டர் பாலசுப்ரமண்யம். எங்கள் குடும்பத்தில் ஆதி முதல் சீர்திருத்தக் கொள்கைகள். தாத்தா கீதையைப் பின்பற்றி சடங்குகளில் அர்த்தமில்லை என்பார். அவர் தமையன் ஜி. சுப்ரமணிய அய்யர் அரசியல்வாதி. நூறு வருடங்களுக்கு முன்பு–மகாத்மா காந்திக்கு முன்பு, ஆங்கிலேயருடன் போராடியவர். சுப்ரமண்ய பாரதியாரை ஊக்குவித்தவர். இந்து சுதேசமித்திரன் பத்திரி



கைகளை ஆரம்பித்தவர். போன நூற்றுண்டிலேயே,விதவையான மகளுக்கு மறுவிவாகம் செய்து, சமூகத்திற்கு எதிராகப் புரட்சி செய்தவர். அவருடைய சீர்திருத்த எண்ணங்கள் இன்னும் தமிழ்நாட்டில் உருவாகவில்லை. ஆனால், இதெல்லாம் எங்கள் மாதிரிச் சிறுவர்களுக்கு அப்போது தெரியாது. வேற்றுமை உணர்ச்சி இல்லாது வளர்ந்த குடும்பம்.

என் தாயார் 5 வயதிலேயே காலமாகி விட்டார்கள். தாயார் நினைவு எனக்கு அதிகமில்லை. ஏனெனில், என் சிறிய தாயார் திருமதி சாவித்திரி அம்மாள் எங்கள் மூவரையும் (ஒரு அக்கா, ஒரு தம்பி) தாயாருக்கு மேல் பார்த்துக்கொண்டு அன்பு மழை பெய்து வளர்த்தார்கள். தியாகமும் தன்னலம் பார்க்காததுமே அவர்கள் அவதாரம். இம்மாதிரித் தாயார் கிடைப்பதற்கு எவ்வளவோ புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

இளமைப் பருவத்தின் முக்கியமான நினைவு, ஜன நெருக்கடி இல்லாமல் பரந்த வெளிகள். போக்குவரத்து நெருக்கடி இல்லாமல் எங்கே வேண்டுமானாலும் எளிதாகச் செல்லலாம். ரயில்கள் குறைவாக இருந்தாலும் ஜனநெருக்கடி, (விழா நாட்கள் தவிர) கிடையாது. 60 ஆண்டுக்குப் பின் நோக்குவதில் முதல் இம்ப்ரெஷன் எனக்கு இதுதான் ஏற்படுகிறது.



பள்ளிப் படிப்பு ஈ. ஆர், உயர்நிலைப் பள்ளியில். ஆசிரியர்கள் அன்பும் அதிகம் கண்டிப்பும் உடையவர்கள். ஒரு வகுப்பில் 35 மாணவர்கள். ஒவ்வொரு மாணவனையும் அரவணைத்து, அவன் திறமைக்கேற்றவாறு உதவி செய்யும் ஆசிரியர்கள். தலைமை ஆசிரியர் இ. ஆர். நடராஜ அய்யருக்கு 'மானேஜர்' என்ற பட்டம். அதே டைட்டிலில்தான் திருச்சி நகரம் முழுவதும் அவரை அறிவார்கள். ஆங்கிலேயர் ஆண்ட காலம். ஆசிரியர்கள் தலைப்பாகை, நீண்ட கோட், அங்கவஸ்திரம் அணிந்துதான் பள்ளிக்கு வருவார்கள்.

என் தகப்பனார் பிரபல மருத்துவர், மானேஜருக்கு ஆழ்ந்த நண்பர். இருந்தபோதிலும், குறும்பு அதிகமானால் பிரம்படி நன்றாகக் கையில் விழும். வாங்கிக் கொண்டு கையை ஊதி ஊதி நிஜாரில் துடைத்துக் கொள்ள வேண்டியதுதான். வீட்டில் போய்ச் சொன்னால்,வீட்டிலும் உதை கிடைக்கும். பெற்றோருக்கு ஆசிரியர்கள் மீது அபார நம்பிக்கை. ஆசிரியர்கள் மாணவர் மீது அளவற்ற அன்பு. கையில் பிரம்படி, பெஞ்சு மேல் நிற்கிறது எல்லாம் குழந்தை நல்ல பையனாக முன்னுக்கு வரவேண்டுமே என்ற தீவிர ஆசையால்தான்.

9-வது படிவம் விஞ்ஞானப் பாடம். பக்கத்து நண்பனுடன் எச்சரிக்கைக்குப் பிறகு கூடப் பேசியதால், சைன்ஸ் மாஸ்டர் இருவரையும் பெஞ்ச் மேல் நிற்க வைத்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு மறுபடி பேசியதால், ஆசிரியர் அரை நிமிடம் யோசனை செய்து, இருவரையும் டெஸ்க் மேல் நிற்க வைத்தார். அதிலிருந்து 'டெஸ்க் மேல் நின்ற மாணவன்' என்ற பெயர் வந்து விட்டது! பெருமை ஒருபுறம்; அவமானம் ஒருபுறம்.

அநேகமாக வகுப்பில் முதல் மார்க் வந்து விடும். தகப்பனாரிடம் சொன்


னால் அவருக்கு உள்ளூர மிக மகிழ்ச்சி; பெருமை. ஆனால், அப்போது நான் அவரிடம்சொல்லவில்லை.. சொன்னால், ''முதல் மார்க் வாங்கினதன் பொருள் என்னவென்றால், அடுத்த ஆண்டில் அதிக முயற்சி. அப்போதுதான் தொடர்ந்து முதலிடம் நிற்கும்'' என்பார்.

தன்முயற்சி, விடா உழைப்பு—இவையெல்லாம் இருந்தால், கட்டாயம் முன்னேற முடியும் என்ற நம்பிக்கையுள்ள காலம் அது. இப்போது மாணவர்களுக்கு இந்த நம்பிக்கை போய் விட்டது. 'ஏண்டா படிக்கக் கூடாதா?' என்று கேட்டால், ''முயற்சி முக்கியமில்லை. உழைப்பு அவசியமில்லை. சரியான இடத்து உறவுகள்தான் முக்கியம்'' என்று சிறிய மாணவர்கள்கூடப் பதில் அளிக்கிறார்கள்.

நாடு முன்னேற இந்நிலை மாறி, உழைப்பில் பூரண நம்பிக்கையை மாணவர்கள் வைக்க வேண்டும். இது அவர்கள் பொறுப்பு மட்டும் அல்ல, நமது பொறுப்பு; சமூகத்தின் பொறுப்பு.

எங்கள் சிறு வயதில் ரயில்வேயில் திருச்சி—விழுப்புரம் குறுக்குப் பாதை (Chord Line) அமைத்துக் கொண்டிருந்தார்கள். காவேரிப் பாலம் பார்க்க வேண்டியது. பிறகு, ரயில்கள் ஓட ஆரம்பித்தவுடன் இஞ்சினையும், ரயில் வண்டியையும் கண்மூடாமல் பார்ப்பது. 'இஞ்சின் டிரைவராக வரமாட்டோமா!' என்று ஏங்குவது. ரயில் தண்டவாளத்தில் ஒரு தம்பிடி வைத்தால், அது அழுத்தத்தால் பெரிதாகி காலணா மாதிரி ஆகிவிடும். தம்பிடியை ஜாக்கிரதையாகத் தண்டவாளத்தில் வைக்க வேண்டும், ரயில் சிறிது தூரத்தில் வந்துகொண்டிருக்கும் போது. இல்லாவிடில் அது வழுக்கிக் கீழே விழுந்துவிடும்!


தெப்பக் குளத்தில் நிறைய ஜலம். காவேரியில் கோடைக் காலத்தில் கூடத் தண்ணீர் நிறைய இருக்கும். மேலச் சிந்தாமணி என்னும் இடத்தில் ஓர் உடைந்த மண்டபம்தான் மாணவர்கள் கூடும் இடம். 'கழுதை மண்டபம்' என்று அதற்குப் பெயர். அது நாங்கள் அங்கு போனதாலா? அல்



லது, சில நிஜக் கழுதைகளும் அங்கு வந்ததாலா, தெரியாது. எங்கள் தமிழ் வாத்தியார் பெரியசாமிப் பிள்ளை அவர்களின் உறுதியான நம்பிக்கை, மண்டபத்தின் பெயர் மாணவர்களால்தான் வந்தது என்று. மண்டபத்தின் மேலே இருந்து காவேரியில் குதித்து நீந்துவோம். உயரத்தில் இருந்து குதிப்பதாலும், மேல் காற்று வேகத்தாலும், கீழ்ப்பகுதியில் குளிப்பவர்கள் மீது நீர்த்துளிகள் தெறிக்கும். அப்போது, நன்றாகத் திட்டு விழும், வயதானவர்களிடமிருந்து. சிறிது திடகாத்திரமாய் இருப்பவர்கள் கோபத்துடன் துரத்துவார்கள். சிறுவர்கள் ஓடினால் பிடிக்க முடியுமா? ஆண்டார் தெரு வரை ஓட்டம் பிடிக்க வேண்டியதுதான். இப்போது மாதிரி ஜனங்கள், வாகனங்கள் நெருக்கடி இல்லாததால், நன்றாக விபத்து வராமல் ஓட முடியும்.

மலைக் கோட்டையைச் சுற்றியுள்ள பெரிய தெருக்களில் ஆண்டார் தெருவும் ஒன்று. எப்போதும் கலகலப்பு. தினம் ஏதாவது ஊர்வலமோ, கட





வுள் புறப்பாடோ நடந்து கொண்டேயிருக்கும். நாதஸ்வரம், மற்றும் தொண்டைக் காலத்து வாத்தியங்கள் எல்லாம் ஒலிக்கும். சிறுவர்களுக்கு ஒரே கொண்டாட்டம். இந்த ஊர்வலங்களில் முக்கியமானது புலி வேடம். பார்த்தால் நிஜப் புலி போல ஆவேசமாக இருப்பார்கள். எல்லோரும் கலந்து கொள்வார்கள். இது மொகரம் பண்டிகையில். சிறுவர்களான எங்களில் பலர் உடம்பில் கலரைப் பூசிக் கொண்டு பின்னால் ஒரு வாலைப் பொருத்திக் கொண்டு கூட ஓடுவோம். ''இந்துவும் முஸ்லீமும் வேறு வேறு; அவர்களுக்குள் பிரிவு உண்டு, சண்டை உண்டு'' என்றெல்லாம் இல்லாத காலம்.

பள்ளிக்கூட வாசலில் தம்பிடி ஐஸ்கிரீம், காலணா ஐஸ்கிரீம் என்று கிடைக்கும். துண்டு இலையில் போட்டு சேட்ஜி கொடுப்பார். தம்பிடி ஐஸ்கிரீம் நீராக ஓடும். காலணா ஐஸ்கிரீம் கெட்டியாக இருக்கும். ஆனால், காலணா எங்கிருந்து கிடைக்கும்? தம்பிடி ஐஸ்கிரீம் சாப்பிட்டு விட்டு, காலணா ஐஸ்கிரீம் சாப்பிடுகிறவர்களைச் சுற்றி நிற்பது. வெளியே ஐஸ்கிரீம் சாப்பிடக் கூடாதென்று வீட்டில் உத்தரவு. பள்ளி உத்தரவுங்கூட. ஆனால் எல்லா உத்தரவுக்குமா கீழ்ப்படிவார்கள்.? சேட்ஜிக்கு நல்ல வியாபாரம்!

பள்ளிக்கூட வாசல் பக்கத்தில் ஒரு அனுமார் கோவில். பக்கத்தில் பிள்ளையார். சாயங்காலம் பள்ளி விட்ட பிறகு, அனுமார் கோயிலில் யாராவது வடை மாலை சாற்றினால், பிரசாதம் அரை வடை கிடைக்கும். அதைப் போல ருசி எங்கே இருக்கும்? பிள்ளையாரை அப்போது யார் கவனித்தார்கள்? பள்ளி மணி அடித்தவுடன் அவசரமாக உள்ளே ஓடும் போது ஒரே ஒரு குட்டு நெற்றியில். ஆனால், ஆண்டுப் பரீட்சையோ, நடுவில் ஏதாவது பரீட்சையோ வந்தால், நிறையக் குட்டு, நிறையத் தோப்புக்கரணங்கள் போடுவோம் பிள்ளையாருக்கு.

பிள்ளையாருக்கா தெரியாது? நமது பையன்கள்தானே என்று கருணை பொழிந்து கொண்டேயிருந்தார் என்று நம்புகிறேன். அப்பொழுது பிள்ளையாரை உடைக்கும் காலம் வரவில்லை.

மோட்டார் கார்கள் மிகக் குறைவு. ஒற்றை மாட்டு வண்டி, இரட்டை மாட்டு வண்டி, குதிரை வண்டி, குதிரை பூட்டிய கோச்சு வண்டி — இவைகள்தான் அப்போது உண்டு. கோச் அல்லது பீடன் என்ற வண்டிக்குப் பின்னால் உட்கார இடம் இருக்கும். இதில் உட்கார்ந்து, கோச் ஓட்டுபவருக்குத் தெரியாமல் எவ்வளவு தூரம் செல்ல முடியுமென்று சிறுவருக்குள் கடும் போட்டி. கோச் ஓட்டுநருக்குத் தெரிந்து விட்டால், நீளச் சாட்டையால் சுளீர் என்று விழும். உடனே குதித்து ஓடிவிட வேண்டியதுதான்! இந்த மாதிரி இலவசக் கோச்சு சவாரி சிறுவர்களிடம் மிகப் பிரபலம். சாட்டை அடி விழுந்தால், அதையும் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்.


சில சமயம் பொறாமையுற்ற சில சிறுவர்கள், நாங்கள் செல்வதைப் பார்த்து, ''சவுக்கு'' என்று கத்துவார்கள். இந்தக் கூச்சல் கேட்டால், சவுக்கு பின்னாலே வருவதற்குள் இறங்கி ஓடி விடுவதில் மிகவும் சாமர்த்தியம் வேண்டும். தாமதித்தால் சவுக்கடி நிச்சயம்!

இது மாதிரி எவ்வளவோ நினைவுகள்; விளையாட்டுகள்.

ஒருநாள் குதிரைச் சவாரி செய்து கொண்டு ஒரு வெள்ளைக்காரர் வந்தார். அவர் பின்னால் மரியாதையுடன் பலபேர் வந்தார்கள். சிறுவர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம். கட்டுப்பாடாக ஓரமாக நின்று பார்த்தோம். அவர் ஏதோ அதிகாரமாக வார்த்தைகள் சொல்லிவிட்டு, குதிரையிலே

சென்று விட்டார், பரிவாரங்களோடு.

பிறகு தகப்பனாரைக் கேட்டேன். "அவர் தான்டா கலெக்டர். இந்த ஜில்லா அதிகாரி." என்றார். உடனே, கலெக்டர் என்றால், அதிகாரம், குதிரை எல்லாம் கிடைக்கிறதே! நாமும் கலெக்டர் ஆக வேண்டும் என்று அவா. பிறகு கலெக்டர் ஆவதற்கு ஐ.சி.எஸ். வேண்டும் என்று தெரிந்தது. உடனே ஐ.சி.எஸ். படிக்க வேண்டும் என்று ஒரு ஆசை. சின்ன வயதில் எந்தக் கோட்டையைத்தான் பற்ற முடியாது?



ஈ. ஆர். ஹை ஸ்கூலில் முதல் மார்க் வந்தவுடன் புனிதர் ஜோசப் கல்லூரியில் இண்டர்மீடியட் படிக்கச் சேர்ந்தேன். ஆசிரியர்கள் முதல் தரம். பள்ளிக்கூடம் மாதிரியே காலேஜில் கண்டிப்பு, அரவணைப்பு. ஆங்கிலம் கற்றுக் கொடுத்தவர்கள், கல்வி உலகிலே முதலிடம் பெற்ற பாதர் ஜெரோம் டிசௌசா, பாதர் பிண்டோ, பாதர் லாரன்ஸ். ஆங்கில மொழியின் அழகு திறமை எல்லாவற்றையும் நேராக வகுப்பில் அனுபவித்தோம். **Fr. Jerome D'souza** அவர்கள் **Merchant of Venice** என்ற **Shakespeare** நாடகத்தைக் கற்றுக் கொடுத்தார். வகுப்பறையில் ஷைலாக்கும், போர்ஷியாவும், அண்டோனியாவும் நேரே வந்து பேசுகிறது போல் இருக்கும்.

இதே மாதிரி கணக்கிலும், சமஸ்கிருதத்திலும், சைன்ஸிலும் ஆசிரியர்கள். இப்படிப்பட்ட உயர்ந்த கல்வியையும், நேர்மையான வாழ்க்கையையும் கற்றுத் தந்தவர்களுக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்ய முடியும்?

அந்த வயதில் அடிமைத்தனமோ அரசியல் கொந்தளிப்போ எங்களுக்குச் சரியாக விளங்கவில்லை. கல்லூரியில் படிக்கும் போது கோடைக் காலத்தில் மாலை நேரம் காவேரிக்குச் சென்று ஓரமாக ஓடும் ஓடையில் நீந்தி விட்டு மணலில் உட்கார்ந்து சிநேகிதர்கள் வாதாடுவோம். சூரியன் மறையும் நேரத்தில் காவேரி மணலில் ஒரு பக்கம் நீரோட்டத்தின் சளசள என்று மெல்லிய சத்தம் கேட்கும். மேற்கிலிருந்து காற்று, பக்கத்துக் கோயில்களில் இருந்து நாதஸ்வர ஒலி எப்பொழுதும் கேட்கும். கல்யாணி ராகமும், அஸ்தமன நேரமும், காவேரி மணலும், நீரோடையின் சளசளப்பும் எவ்வளவு மனச் சாந்தியையும் இன்பத்தையும் கொடுத்தன!

இன்டர்மீடியட் பரீட்சையில் நிறைய மார்க் வாங்கினதால் ஐ. சி. எஸ். படிக்கலாமென்று சொன்னேன். என் தகப்பனார் தீர்க்கதரிசி. அவர் "இந்த அதிகாரம் நிற்காது. பிற்காலத்தில் ஐ. சி. எஸ். படித்தாலும் ஒரு சேவகனாய்த்தான் வேலை செய்ய வேண்டும். (அப்போது ஐ. ஏ. எஸ். கிடையாது) நீ டாக்டருக்குப் படி. மரியாதை கிடைக்கும்; பணி செய்யும் வாய்ப்பும் கிடைக்கும். எவர் கையையும் நோக்க வேண்டியதில்லை" என்றார். உடனே மெடிகல் காலேஜுக்கு விண்ணப்பம் அனுப்பி, அட்மிஷன் கிடைத்து, சென்னைக்கு வந்து, சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தேன். அப்போது வயது பதினாறு. பிறகு நடந்ததெல்லாம் வேறு கதை.




அடுத்த இதழில்

என் குழந்தைப் பருவம்

மீ.ப.சோமு

மின்மினிக் கதைகள்



குறுக்கு வழி

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் தந்தை அவனைப் படிக்க வைக்கப் பலவகையில் முயன்றார். ஆனால் அவனோ படிப்பில் சிறிதும் நாட்டமின்றி இருந்தான்.

இப்படியே சில ஆண்டுகள் கழிந்தன. அவன் கல்வியறிவில்லாதவனாகவே வளர்ந்தான். இதனால் ஊர் மக்களும் உற்றார் உறவினர்களும் அவனைப் பற்றிக் கேலியாகப் பேசினார்கள்.

இதைக் கேட்டு மனம் உடைந்த அவன், ''கடுந்தவம் புரிந்தாவது கல்வி அறிவு பெற்றுத் திரும்புவேன்'' என்று உறுதி செய்தான்.

காட்டிற்குச் சென்ற அவன் அங்கே தவத்தில் ஆழ்ந்தான். அருகே கங்கையாறு ஓடிக் கொண்டிருந்தது.

அவனுக்கு நல்லறிவை உணர்த்த வேண்டுமென்று நினைத்தார் இந்திரன். ஒரு முதிய அந்தணர் வடிவம் கொண்டு அவனிருக்கும் இடத்திற்கு வந்தார். பிறகு தம் கையால் மண்ணை அள்ளி அள்ளிக் கங்கையாற்றில் போட்டுக் கொண்டு இருந்தார்.

இதைக் கண்ட சிறுவன், ''ஐயா! எதற்காக இப்படி மண்ணை அள்ளி அள்ளிப் போடுகின்றீர்?'' என்று கேட்டான்.

அதற்கு அந்தணர், ''மனிதர்களும், விலங்குகளும் ஆற்றைக் கடப்பதற்குப் பாலம் கட்டுவதற்காக மண்ணைப் போட்டுக் கொண்டிருக்கிறேன்,'' என்று பதில் தந்தார்.

''வெறும் மணலால் கங்கையில் பாலம் கட்ட முடியுமா? நீங்கள் போடும் மண்ணை எல்லாம் நீர் அடித்துக் கொண்டு சென்றிருக்குமே! முதியவரான நீர் அறிவில்லாத இந்தச் செயலைச் செய்யலாமோ? இனியாவது ஏதாவது பயனுள்ள செயலில் ஈடுபடுங்கள்'' என்றான் சிறுவன்.

அந்தணர் தம் உண்மையான இந்திர வடிவினர் ஆனார். "நீயும் என்னைப் போலப் பயனற்ற செயல்தானே செய்தாய்? எழுத்துக்களைத் தெரிந்து கொள்ளாமலும், பாடம் படிக்காமலும், ஆசிரியரிடம் கேட்காமலும் வெறும் தவம் இருப்பதால் அறிவு கிடைக்காது. மேலும் இன்னும் காலங்கடந்துவிட வில்லை. நல்ல ஆசிரியரை நாடி முனைப்புடன் கல்வி கற்க முயற்சி செய். நீ சிறந்த அறிஞனாவாய்" என்று அவனை நோக்கிக் கூறி மறைந்தார்.



எளிதும் அரிதும்

துறவி ஒருவரின் மதிப்பைக் குறைக்கும் வண்ணம் அவரைப் பற்றித் தாறுமாறான பொய்ச் செய்திகளை அவதூறாகப் பரப்பிக் கொண்டிருந்தான் ஒருவன். இப்படியே சிறிது காலம் சென்றது.

நாளாக ஆக அவன் மனச்சாட்சியே அவனைத் துன்புறுத்தியது. எப்படியேனும் துறவியிடம் உண்மையைச் சொல்லி மன்னிப்பும் பெற வேண்டும் என்று நினைத்தான் அவன்.

ஒருநாள், துறவியிடம் வந்த அவன், தான் செய்ததை எல்லாம் அவரிடம் கூறி என்ன தண்டனை தந்தாலும் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னான்:

துறவி அவனைப் பார்த்து, "ஊரில் எல்லோரும் கூடும் பொது இடத்திற்கு உன் வீட்டிலிருந்து தலையணை ஒன்றை எடுத்துச் செல். அதைக் கிழித்து அதனுள்ளிருக்கும் பஞ்சை எல்லாம் அங்கேயே பறக்க விட்டுவிட்டு இங்கே திரும்பு" என்றார்.

"தான் செய்த பாவத்திற்கு இவ்வளவு எளிமையான பரிகாரமா?" என்று நினைத்த அவன், துறவி சொன்னவாறே செய்துவிட்டு அவரிடம் திரும்பினான்.

துறவியைப் பார்த்து, "ஐயா! நீங்கள் சொன்னவாறே செய்துவிட்டேன். இன்னும் ஏதேனும் செய்ய வேண்டுமா?" என்று பணிவாகக் கேட்டான்.

அதற்குத் துறவி, "நீ பஞ்சினைப் பறக்கவிட்ட இடத்திற்கு மீண்டும் செல். காலித் தலையணை உறையில் அவற்றைப் பழையபடி அடைத்துக் கொண்டு வா" என்றார்.

"ஐயா! யாராலும் செய்ய முடியாத செயலல்லவா இது? அந்தப் பஞ்சுத் துகள் யாவும் இந்நேரம் எல்லா இடங்களுக்கும் பறந்து சென்றிருக்குமே! என்றால் எப்படி மீண்டும் அவற்றை ஒன்று சேர்க்க முடியும்?" என்று கேட்டான் அவன்.

உடனே துறவி, "தலையணையிலிருந்து பஞ்சுத் துகள்களைப் பறக்க விடுவது எளிது. மீண்டும் ஒன்று சேர்ப்பது கடினம். அதே போல ஒருவரைப் பற்றிப் பொய்யாக அவதூறு பரப்பி விடுவது எளிது. அந்த அவதூற்றினைத்

துடைப்பது மிகக் கடினம். இதை இப்பொழுது நன்கு புரிந்து கொண்டிருப்பாய். இனியாவது பிறரைப் பற்றி அவதூறு பேசாதே'' என்று அறிவுரை கூறி அனுப்பி வைத்தார் துறவி.

எறும்பு வித்தை!

ஒருவனுக்குப் பத்தாண்டுச் சிறைத் தண்டனை கிடைத்தது. சிறையிலிருந்த அவன் எப்படிப் பொழுதைக் கழிப்பது என்று சிந்தித்தான். அவன் அருகே எறும்பு ஒன்று வந்தது. அதைப் பார்த்ததும், ''இந்த எறும்பிற்குப் பயிற்சி தந்து இதை நான் சொன்னபடி எல்லாம் செய்ய வைக்கிறேன். விடுதலையானதும் இதைக் கொண்டே நான் பெரிய பணக்காரனாவேன்'' என்று முடிவு செய்தான்.

அன்றிலிருந்து எறும்பிற்குப் பயிற்சி தரத் தொடங்கினான். இரண்டாண்டுகளில் அந்த எறும்பு இரண்டு கால்களால் அவன் முன் நடந்து காட்டியது. ஐந்தாண்டுகளில் அவன் சொன்னபடி குட்டிக்கரணம் போட்டது. பயிற்சி இல்லாத நேரங்களில் அவன் அதை ஒரு தீப்பெட்டிக்குள் போட்டு வைத்தான்.

அந்த எறும்பு இப்பொழுது அவன் எது சொன்னாலும் செய்யக் கூடிய பயிற்சியைப் பெற்றுவிட்டது. வெளியுலகில் தனக்குக் கிடைக்கப் போகும் மதிப்பையும் பாராட்டையும் எண்ணிப் பூரிப்படைந்தான், அவன்.

விடுதலை நாளும் வந்தது. வெளி உலகத்திற்கு வந்த அவன், சாப்பிடுவதற்காக ஓர் உணவு விடுதியை அடைந்தான், பரிமாறுபவனை அழைத்து, ''சாப்பிடுவதற்கு ஏதாவது கொண்டு வா'' என்று கட்டளையிட்டான்.

பரிமாறுபவன் வரத் தாமதமாயிற்று. அவனால் ஆர்வத்தை அடக்க முடியவில்லை. தன் பைக்குள்ளிருந்த தீப்பெட்டியை எடுத்தான். அதிலிருந்த



எறும்பை எடுத்து மேஜையின் மேல் வைத்தான். அதை இரண்டு கால்களால் நடக்கச் சொன்னான். அப்படியே அது செய்தது.

அப்பொழுது பரிமாறுபவன் சாப்பாட்டுடன் அங்கு வந்தான். அவனிடம் பெருமையாக, ''மேஜையின்மேல் உள்ள எறும்பைப் பார்த்தாயா?'' என்று கேட்டான்.

உடனே பரிமாறுபவன், ''ஐயா! நாங்கள் எவ்வளவோ சுத்தமாகத்தான் இந்த விடுதியை வைத்திருக்கிறோம்; எப்படியோ தெரியவில்லை, ஒன்றிரண்டு எறும்புகள் வந்துவிடுகின்றன, மன்னியுங்கள்'' என்று கூறிவிட்டு அந்த எறும்பைக் கையால் நசுக்கித் தூக்கித் தள்ளினான்.

— பேராசிரியர் எ. சோதி தொகுத்த 'சின்னச் சின்ன நன்னெறிக் கதைகள்' என்ற புத்தகத்திலிருந்து. வெளியிட்டவர்: நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி — 1.



மயிலை சிவமுத்து

சென்னையிலுள்ள மாணவர் மன்றத்தைப் பலரும் அறிவார்கள். ஆண்டுதோறும் அந்த மன்றம் நடத்தும் முன்மாதிரித் தமிழ்த் தேர்வுகளில் ஒன்றரை லட்சம் மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெறுகிறார்கள். தமிழ்த் தேர்வுடன் கதை, கட்டுரைப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள், ஓவியப் போட்டிகள் என பல போட்டிகள் நடத்திப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கி வருகின்றது. சுருங்கச் சொன்னால், இதை ஒரு 'குட்டிப் பல்கலைக் கழகம்' என்றே கூற வேண்டும். மன்றத்துக்குச் சொந்தமாக மூன்று மாடிக் கட்டடம் ஒன்றும் இருக்கிறது.

இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணமாக இருந்தவர் பேராசிரியர் மயிலை சிவமுத்து ஆவார். இவர் பள்ளியில் படித்தது ஏழாம் வகுப்பு வரைதான். பிறகு சொந்த முயற்சியால் பல நூல்களைக் கற்றார். அறிஞர்கள் பலரைக் கண்டு அவர்கள் உதவியால் மேலும் மேலும் அறிவை வளர்த்துக் கொண்டார். ஓர் ஆரம்பப் பள்ளியில் சில காலம் பணியாற்றிய இவர், பிறகு சென்னையிலுள்ள முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார்.

இவர் பல நூல்களை இளைஞர்களுக்காக எழுதியிருக்கிறார். இவரது முதல் நூல் 'என் இளமைப் பருவம்' என்பது.

இவர் சிறுவருக்காக எழுதிய பாடல்கள், 'முத்துப் பாடல்கள்' என்ற பெயரில் வெளிவந்து, இந்திய அரசினர் பரிசைப் பெற்றது.

வாழ்நாள் முழுதும் மாணவர்கள் நலனுக்காகவும் தமிழாசிரியர்கள் உயர்வுக்காகவும் பாடுபட்ட இவருக்கு 'தமிழ் நெறிக் காவலர்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப் பெற்றது.



லூயி கரால்

அதிசய உலகில் ஆலிஸ்' (Alice in Wonderland) என்ற கதையைப் படித்திருப்பீர்கள். அல்லது, அதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். உலகப் புகழ் பெற்ற அந்தக் கதையை எழுதியவர்தான் லூயி கரால்.

இவர் ஒரு கணிதப் பேராசிரியர். இவரது இயற்பெயர் சார்லஸ் லட்ஜ் விஜ் டாட்ஜன் என்பது. இந்தப் பெயரில் இவர் பல கணித நூல்களை எழுதிப் பிரபலமானார். ஆயினும் இவருக்கு அதிகமான புகழைத் தந்த நூல் 'ஆலிஸ் இன் ஒண்டர் லாண்ட்' என்பதுதான்.

இவர் திருமணமாகாதவர். குழந்தைகளிடத்திலே மிகுந்த அன்புடையவர். இவருடைய நண்பருக்கு மூன்று பெண் குழந்தைகள் இருந்தனர். அந்த மூவரும் இவரிடம் அடிக்கடி வந்து கதை கேட்பார்கள். அவர்களை அழைத்துக் கொண்டு மாலை வேளைகளில் தேம்ஸ் நதிக்குச் செல்வார். நால்வரும் படகிலே ஏறி உல்லாசமாகச் சுற்றி வருவார்கள். அப்போதெல்லாம் அந்தக் குழந்தைகள், கதை சொல்லும்படி இவரைத் தொந்தரவு செய்து கொண்டேயிருப்பார்கள். இவரும் அலுக்காமல் சலிக்காமல் கதை சொல்லுவார். அந்த மூவரில் ஒருத்தி பெயர் ஆலிஸ் லிட்டெல் என்பது. அந்தப் பெண்ணையே கதாநாயகி வைத்து ஒருநாள் இவர் கதை சொல்லத் தொடங்கி விட்டார். கதை மிகச் சுவையாகவும் வேடிக்கையாகவும் இருந்தது.

குழந்தைகளின் விருப்பப்படி அக்கதையை இவர் எழுதி, புத்தகமாக வெளியிட்டார். வெளியான சில நாட்களுக்குள், இவரது பெயர் இங்கிலாந்து முழுதும் பரவிவிட்டது! பிறகு உலகம் முழுவதும் பரவியது.

குழந்தை இலக்கிய மாநாட்டில் கூறக்கேட்டவை

மாயன்

(நேருஜியின் பிறந்த நாளான குழந்தைகள் தினத்தையொட்டி எட்டாவது குழந்தை இலக்கிய மாநாட்டை மிகவும் கோலாகலமாகக் கோவையில் கொண்டாடியது, குழந்தை எழுத்தாளர் சங்கம்.)

* "பேசாமல் புதுவை மாநிலத்திற்கே டிரான்ஸ்ஃபர் வாங்கிக் கொண்டு போய் விடலாமா என்று யோசிக்கிறேன். இங்கே பாருங்க. பல இடங்களிலிருந்தும் வந்திருக்கிற 180 பிரதிநிதிகளிலே புதுவையிலிருந்து வந்திருக்கிற 10 பேர் ஏ.வி.எம். தங்கப் பதக்கம் அல்லது வெள்ளிப் பதக்கம் பெற்றவர்களாகவே இருக்கிறார்களே!

— மாநாட்டுக்கு வந்த பிரதிநிதிகள் அறிமுகத்தில், சங்கச் செயலாளர் திரு. எச். கிருஷ்ணமூர்த்தி.



* குழந்தைப் புத்தகக் காட்சியையும், குழந்தை எழுத்தாளர் புகைப்படக்காட்சியையும் திறந்து வைக்கிறார் டாக்டர் சந்திரகாந்தி கோவிந்தராஜுலு. அவரது வலப்புறம் வரவேற்புக் குழுத் தலைவர் கவிஞர் செல்லகணபதி: இடப்புறம் காட்சி அமைப்பாளர் விஜயா பதிப்பகம் திரு. மு. வேலாயுதம்.

* "என்னய்யா சுப்ரபாலன், இங்கே 250 குழந்தை எழுத்தாளர் புகைப் படங்களைக் காட்சியாய் வச்சிருக்கிறீர். இங்கே ருத்ர துளசிதாஸ் படத்தைக் காணோமே! அவரு மாநாட்டுக்கு வந்திருக்கிறாரு. இங்கு வந்து அவர் பார்த்தால், உம்மைச் சும்மா விடுவாரா? சரியா மாட்டிக்கப் போகிறீர்"

"அவர்தான் நேரே வந்திருக்கிறாரே புகைப்படத்துக்குப் பதிலா அவரையே இங்கே நிற்க வச்சாப் போச்சு."

—குழந்தை எழுத்தாளர் புகைப்படக் காட்சி அமைப்பாளர் திரு. சுப்ரபாலனை ஓர் எழுத்தாளர் கேட்டதற்கு அவர் அளித்த பதில்.



* குழந்தை இலக்கியப் போட்டியில் பரிசுபெற்ற திரு. மு. லை. அரவிந்தனுக்கு ஏவி. எம். தங்கப் பதக்கம் வழங்குகிறார் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம்.

* "நம் சங்கத் தலைவரைக் காணோமே!"

"குழந்தைக் கவிஞர் எங்கே?"

"வள்ளியப்பா ஏன் மேடையிலே இல்லை. உடம்புக்கு ஏதாவது....?"

மாநாட்டுத் தொடக்க விழாவிற்கு முன்பு, காலையில் குழந்தைப் புத்தகக்

காட்சியைத் திறந்து வைத்துப் பலர் மேடையில் பேசிக் கொண்டிருந்தனர். குழந்தை எழுத்தாளர் சங்கத் தலைவரை அப்போது மேடையில் காணாததால் இந்தப் பரபரப்பு!

அரை மணி நேரத்தில் வள்ளியப்பா வந்து விட்டார்! எல்லாருக்கும் ஒரே மகிழ்ச்சி. இவ்வளவு நேரமாக அவர் எங்கே ஒளிந்திருந்தார்?

எங்கும்-ஒளிந்திருக்கவில்லை. மாலையில் மாநாட்டைத் தொடங்கி வைக்க விமானத்திலே வந்த அமைச்சர் எஸ். இராமச்சந்திரனை வரவேற்க விமான நிலையம் சென்றிருந்தார்.

* "டீச்சர், இந்த உலகத்தின் எடை என்ன?"

"எடையா...? தெரியவில்லை. நாளை தெரிந்து கொண்டு வந்து சொல்கிறேன்."

மறுநாள் ஆசிரியர் சில விஞ்ஞான நூல்களைப் பார்த்து வந்து விடை கூறினார். அப்போது ஒரு மாணவன்: சார், ஒரு சந்தேகம்.. இந்த எடை ஜனங்களையும் சேர்த்தா? சேர்க்காமலா?

— இப்படி இங்கிலாந்தில் ஒரு பள்ளியில் நடந்தது. குழந்தைகளிடையே கேள்வி கேட்கும் ஆர்வத்தைத் தூண்டி, பொறுமையாகப் பதில் சொல்லும் வழக்கத்தை அங்கே ஆசிரியர்கள் மேற்கொள்ளுகிறார்கள்.

— 'Who's Who of Tamil Writers for Children' என்ற ஆங்கில நூலை வெளியிட்டுப் பேசிய பேராசிரியர் சை.வே. சிட்டிபாபு அவர்கள்.



* நேருஜியின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாடகம். மிகச் சிறப்பாக அமைந்தது.

* கோவை நகரக் குழந்தைகள் மிகவும் அதிர்ஷ்ட சாலிகள்! ஒரே சமயத்தில் அவர்களுக்காக எழுதும் ஏராளமான எழுத்தாளர்களைப் பார்க்க முடிகிறதே!

— வரவேற்புக் குழு உறுப்பினர்களில் ஒருவரான திரு. எல். சோமு— தமது இல்லத்தில் விருந்தளித்த போது.

* அன்று முழு நிலா நாள். வழக்கம் போல் அந்தப் புலவர் வீட்டு மாடியில் கதையும் பாட்டும் கேட்கக் குழந்தைகள் கூடி விட்டனர். ஆனால், புலவரோ கலங்கிய கண்களுடன் இருந்தார். காரணம் என்ன? அங்கு வழக்கமாக வரும் பொன்னன், பொன்னி என்ற இரு பூனைகளும் வரவில்லை. அவை இறந்து விட்டன! செய்தி கேட்டுக் குழந்தைகளும் வருந்தினர். பூனைகளின் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி, புலவருடன் குழந்தைகளும் மௌனமாக எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர். எல்லா உயிர்

* வாண்டுமாமாவும், தணிகை உலகநாதரும் ஆற்றியுள்ள குழந்தை இலக்கியப் பணியைப் பாராட்டி, அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் கேடயம் வழங்கிக் கௌரவிக்கிறார்.



களிடத்திலும் அன்பு காட்டும் அந்தப் புலவர்தான் தணிகை உலகநாதன்.

ஒரு பெண்ணுக்கு சைக்கிள் தயாரிக்கும் ஒரு நிறுவனத்தில் எளிதாக வேலை கிடைத்தது. மறுநாள் அப்பெண்ணிடம், "நேர்முகத் தேர்வில், சைக்கிளைப் பற்றிப் பல புதிய தகவல்களைக் கூறினாயே, அவற்றையெல்லாம் எந்த எந்தப் புத்தகங்களில் தேடித் திரட்டினாய்?" என்று கேட்டார் மேலாளர்.

"நான் படித்தது ஒரே ஒரு புத்தகம் தான். 'தோன்றியது எப்படி?' என்பதே அதன் பெயர். எழுதியவர் வாண்டுமாமா" எனப் பதிலளித்தாள் அப்பெண்.

—கேடயங்கள் பெற்ற எழுத்தாளர்களைப் பாராட்டிப் பேசிய திரு. சிறுவயல் ஜெயமணி.



* 45 புதிய குழந்தை நூல்களை வெளியிட்ட டாக்டர் நா. மகாலிங்கம், அவரது வலப்புறம் இருப்பவர் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம்; இடப்புறம் இருப்பவர் திரு. கவி சிவம்.

* இந்த ஒரே நாளில் 45 புதிய குழந்தைப் புத்தகங்கள் வெளியிடப்படுவது ஒரு சாதனை தான். ஆயினும், படங்கள் இல்லாத புத்தகங்களைக் காணும் போது வருத்தமாயிருக்கிறது. நிறையப் படங்களுடன் குழந்தைப் புத்தகங்கள் வெளிவர பெற்றோரும் அரசாங்கமும் தக்க ஆதரவு தர வேண்டும்.

—குழந்தைப் புத்தகங்களை வெளியிட்ட நா. மகாலிங்கம் அவர்கள்.

* 1956—ல் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தைப் புத்தகக் காட்சியைத் திறந்து வைத்த ராஜாஜி, "இந்தச் சங்கத்தில் எத்தனை அங்கத்தினர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்று பார்த்தேன். 107 பேர் இருக்கின்றனர். ஜெபம் செய்யும் போதுகூட 108 என்று சொல்வது நமது புராதனப் பழக்கம். ஆகையால், என்னையும் 108வது அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று பலத்த ஆரவாரத்திற்கிடையே கூறியது இன்றும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

—தலைமை உரையில், குழந்தைக் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா.

* துணிக்கடைக்குப் போனாலும், செருப்புக் கடைக்குப் போனாலும், குழந்தைகளின் வயதுக்கு ஏற்றவாறு

தயாரித்து வைத்திருப்பதைப் பார்க்கிறோம். குழந்தைகளின் வயதுப் பிரிவுக்கு ஏற்றவாறு புத்தகங்களும் வெளியிடப்பட வேண்டும்.

— நிறைவு விழாவில் மத்திய உள்துறை இணை அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள்.

* பொறியியல் கல்லூரியில் பயிலும் போது காலமான தன் மகன் நினைவாக, கவிஞர் செல்ல கணபதி ஏற்படுத்தியுள்ள கல்லூரி மாணவர்களுக்கான செல்லப்பன் நினைவுப் பரிசுப் போட்டியில் கலந்து கொண்ட 116 மாணவர், மாணவியரில் முதல் பரிசு பெற்ற மாணவர் ஜே. சீனுவாசன். செல்லப்பன் படித்த அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியற் கல்லூரியிலே இவரும் படிக்கிறார். என்னே பொருத்தம்!



* கருத்தரங்கிற்குத் தலைமை தாங்குகிறார் திருமதி அகிலா சிவராமன். வரவேற்புக் குழுத் தலைவர் கவிஞர் செல்ல கணபதி, திருவாளர்கள் சேவற்கொடியோன், பி. எல். மணி, டி. கணேசன், திருமதி விமலா ரமணி, திரு. மலையமான்.

* மாநாட்டில் வெளியிடப்பட்ட புத்தகங்களில் சிலவற்றை அமைச்சர் ப. சிதம்பரம் அவர்களிடம் கொடுத்தார் சங்கத் தலைவர் திரு. வள்ளியப்பா.

உடனே, அந்தப் புத்தகங்கள் ஒவ்வொன்றிலும், போட்டிருந்த விலையைப் புரட்டிப் பார்த்தார் அமைச்சர். மொத்தத் தொகையைக் கூட்டினார். பிறகு, தமது சட்டைப் பையிலிருந்து அந்தத் தொகையை எடுத்து நீட்டினார்.

''தங்களுக்கு அன்பளிப்பாகத் தானே இதைத் தருகிறோம்?''




* பாடலரங்கத்தில் சிறுமியர் பாடுகிறார்கள். தலைவர் தணிகை உலகநாதன் அருகிலே அமர்ந்திருப்பவர், சிறுவர் கலை நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தித் தந்த திரு ஜெ. கமலநாதன்.

''இல்லை. இல்லை. பணத்தைப் பெற்றுக் கொண்டால்தான், இந்தப் புத்தகங்களைப் பெற்றுக் கொள்வேன்'' — பிடிவாதமாகக் கூறி, அமைச்சர் பணத்தைக் கொடுத்துப் புத்தகங்களைப் பெற்றுக் கொண்டார்.

* மாநாடு முடிந்து குழந்தை எழுத்தாளர் சங்க நிர்வாகிகள் சென்னை திரும்பும் போது, அவர்களை வழியனுப்ப வந்த நண்பர்களில் ஒருவர், "அடுத்த மாநாடு இதை விடச் சிறப்பாக நடக்குமென எதிர்பார்க்கிறோம்" என்றார்.

''இதை விடச் சிறப்பாகவா? அப்படியானால், கோவையிலே செல்ல கணபதியை வரவேற்புக் குழுத் தலைவராகப் போட்டு நடத்த வேண்டியது தான்'' என்றார் சங்கத் தலைவர்!

பழையகதை, புதியபாடல்



"நான்தான் அழகி"
என்று சொன்னாள் ஸ்ரீதேவி.
"இல்லை, நான்தான் அழகி"
என்று சொன்னாள் மூதேவி.

× × ×

இரண்டு பேரும் தேவர் உலகில்
பலரைக் கண்டனர்.
"எங்களுக்குள் யார்தான் அழகி?"
என்று கேட்டனர்.

இருவருடைய உருவங்களையும்
அவர்கள் பார்த்தனர்.
"ஏனோ நமக்கு வம்பு?" என்றே
மவுன மாயினர்.

இறுதியாக நாரதரை
நியாயம் கேட்பது
என்று முடிவு செய்து கொண்டு
அவரை அணுகினர்.


கருத்துடனே அவர்கள் பேச்சைக்
கேட்டார் நாரதர்.
"கவலை வேண்டாம்" என்று சொல்லி
மேலும் கூறினார்.

"இரண்டு பேரும் சிறிது தூரம்
சென்று திரும்புவீர்;
எனது தீர்ப்பைப் பிறகு சொல்வேன்"
என்றார் அவருமே.

சிறிது தூரம் நடந்து சென்று
திரும்பி வந்தனர்.
தீர்ப்பை உடனே நாரதரும்
வழங்க லாயினர்:

தீர்ப்பு:

"ஸ்ரீதேவி வரும்போது
அழகா யிருக்கிறாள்.
செல்லும்போது மூதேவி
அழகா யிருக்கிறாள்."






மேலே உள்ள ஒவ்வொரு படமும் ஒரு பழமொழியை நினைவூட்டு கின்றது. எந்த எந்தப் பழமொழிகள்?

விடை 19 ஆம் பக்கம்.

நீதியின் வெற்றி

பூர்து எஸ். ராஜ்



அது ஒரு சிறிய நாடு. அந்நாட்டின் குடிமக்களில் சுட்டி என்ற இளைஞனும் ஒருவன். அவன் கல்வி, கலை, ஒழுக்கம், உடற்பயிற்சி, விளையாட்டு போன்ற பல துறைகளில் வல்லவன்.

அந்நாட்டு மக்கள் அனைவரும் சுட்டியின் மேல் மிகுந்த அன்பு கொண்டிருந்தனர்; அவன் முன்னேறி உயர்ந்த நிலையை அடைய வேண்டுமென்று மனதார விரும்பினர். அவ்வாறே சுட்டியும் நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தான்; எதையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தான்.

இப்படிப்பட்ட சிறந்த குணநலன்கள் வாய்க்கப் பெற்ற இந்தச் சுட்டிக்குத்தான் அன்று பேராபத்து வந்து சேர்ந்தது. நாட்டு மக்கள் அனைவரும் இதை எண்ணி மிகவும் வருந்தினர்.

சுட்டி சிறந்த ஓட்டக்காரன். நடைபெறுகின்ற எல்லா ஓட்டப் பந்தயங்களிலும் அவன் கலந்து கொள்வான். அவைகளில் அவன்தான் முதற் பரிசும் பெறுவான். இவ்வாறு அவன் பெற்ற கோப்பைகளும், பதக்கங்களும், நற்சான்றிதழ்களும் ஏராளமாக இருந்தன.

அங்கு நாடு தழுவிய விளையாட்டுப் போட்டி ஒன்று விரைவில் நடைபெற இருந்தது. அதில் பல ஓட்டப் பந்தயங்களில் பங்கேற்க வேண்டுமென அவன் முடிவு செய்திருந்தான். எனவே நாள்தோறும் அதற்கான உடற் பயிற்சிகளைச் செய்து கொண்டிருந்தான். தினமும் காலையிலும் மாலையிலும் நீண்ட தொலைவு ஓடிப் பயிற்சி செய்தான்.

அன்று அவன் காலையிலே எழுந்து ஓடிக் கொண்டிருந்தான். அப்போது எதிர்பாராத விதமாக ஒரு கிழவர் வந்து அவன் மேல் மோதி விட்டார். மோதிய வேகத்தில் தடாலென கீழே விழுந்தார்; மயக்கமடைந்தார். எனவே சுட்டியும் பிற இளைஞர்களும் பக்கத்திலுள்ள மருத்துவ மனைக்கு அவரை எடுத்துச் சென்றனர்.

மருத்துவ மனையில் நூறு வயதான அக்கிழவருக்குத் தீவிரமான சிகிச்சை அளிக்கப்பட்டது. சுட்டியின் மேல் காவலர்கள் வழக்குப் பதிவு செய்தனர்.

கிழவருக்கு மூர்ச்சை தெளிந்தது. ஆனாலும் மருத்துவ மனையிலேயே

அவர் தங்கியிருந்து சிகிச்சை பெற்றார். மூன்று நாட்களுக்குப் பின் மீண்டும் மயக்கமடைந்தார். மருத்துவர்களின் தீவிர சிகிச்சை பலனளிக்காமல் உயிர் நீத்தார்.

அந்நாட்டின் அரசன் குழந்தையன், அவன் சுட்டியின் மேல் பொறாமை கொண்டிருந்தான்; சுட்டியின் புகழ் வளர்ந்து வருவது அவனுக்குப் பிடிக்கவில்லை. எனவே எப்படியாவது அவனைப் பழிவாங்க வேண்டும் என்று எண்ணி இருந்தான். இப்போது அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

சுட்டி கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டான். கிழவரைக் கொலை செய்ததாக அவன் மேல் குற்றம் சுமத்தப்பட்டது.

சில நாட்களுக்குப் பின் சுட்டியின் வழக்கு மன்னர் முன் விசாரணைக்கு வந்தது. வழக்கை அரை குறையாக விசாரித்த அரசன் அவனுக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தான்.

'சுட்டிக்கும் அப் பெரியவருக்கும் முன் பகை இல்லை. அவரைக் கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணமும் அவனுக்கு இல்லை; எனவே இது தற்செயலாக நடந்தது. கொலையல்ல; சுட்டி குற்றமற்றவன் என்பதை மக்கள் அறிந்திருந்தனர். எனவே மன்னனது நீதியற்ற தீர்ப்பைக் கேட்டுக் கலங்கினர். கொடுங்கோலனான குழந்தையனை எண்ணி அஞ்சினர். எனவே வெளிப்படையாக எந்தவிதமான எதிர்ப்பையும் காட்டாமல் மனத்துக்குள் புழுங்கினர்.

மரண தண்டனைத் தீர்ப்பைக் கேட்ட சுட்டியின் மனம் சொல்லொண்ணா வேதனை அடைந்தது. 'என் தாய் நாட்டை நான் நேசித்தேன். அதன் பெருமையை வானளாவ உயர்த்த நாள்தோறும் முனைந்தேன். அதற்காக எந்தவிதமான தியாகத்தையும் செய்யத் தாயராய் இருந்தேன். எனக்கா மரண தண்டனை? கொடுங்கோலனான குழந்தையனுக்கு முடிவு காலம் வராதா? தற்செயலாக நேர்ந்த விபத்தை, கொலை என வர்ணிக்கும் இம்மன்னனின் மடமையை என்னென்பேன்? எனக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதை அறிந்த இம்மக்களும் வாளாதிருக்கின்றனரே? இப்படிப்பட்ட கோழை மக்களால் என்னை மீட்க முடியாது. இப்படிப்பட்ட கோழைகள் வாழும் நாட்டில் இனி உயிர் வாழும் ஒவ்வொரு கணமும் வீணே. எனவே இறப்பதே நல்லது. ஆனாலும், நீதியற்ற அரசனுக்கு அஞ்சி வாழும் மக்களைக் கொண்ட இந்த நாட்டில் இறப்பதை விட வேறு நாட்டில் இறப்பதே சிறப்பு' என அவன் எண்ணினான்.

அவனது சார்பாக மன்னனுக்கு விண்ணப்பம் ஒன்று அனுப்பப்பட்டது. அரசவையிலுள்ள பலர் சுட்டிக்கு ஆதரவாக மன்னனிடம் பேசினர். எனவே சுட்டியின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது; அண்டை நாட்டின் அரசனான தசமனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தசமன், தருமபுரி நாட்டைப் பத்தாண்டுகளாகச் சீரும் சிறப்புமாக ஆண்டு வரும் மாவீரன், நீதி தவறாதவன்; நேர்மையாளன். கிழவனைக் கொலை செய்ததாகக் கூறப்படும் சுட்டிக்கு தன் நாட்டில் குடியுரிமை வழங்கவும், குழந்தையனின் தீர்ப்பில் குறிப்பிட்டபடி குறிப்பிட்ட காலத்தில் அவனுக்குத் தூக்கு தண்டனை நிறைவேற்றவும் அவன் ஒப்புக் கொண்டான்.

சுட்டி, மன்னன் தசமனிடம் ஒப்படைக்கப்பட்டான். சுட்டியையும் தூக்கு தண்டனை உத்தரவையும் தசமன் ஏற்றுக் கொண்டான். குறித்த காலத்

பழமொழிப் புதிர்

விடை — புதிர்: 27

ஒண்ணும் தெரியாத பாப்பா
தாளைப் போட்டுக்கிச்சாம் தாழ்ப்பா.

புதிர்: 28

ஆழம் தெரியாமல் காலை விடாதே.

உலகப் பயணம்



மூன்றே கால்கள் உடையதுவாம்
மூலையி லேயே தூங்கிடுதாம்!
தீண்டு வார்களே இல்லாமல்
சிதைந்து கிடக்கும் நாற்காலி!

பத்திர மாய்அதன் மேலேறிப்
பக்குவ மாக இடம்பிடித்தேன்
எத்திசை வழியும் பாய்வதனால்
இதுவென் வான ஊர்தியடா!

சென்னை, பம்பாய், கல்கத்தா,
தில்லி, மாஸ்கோ, வாஷிங்டன்
பின்னும் இலண்டன் பாரீசு
பிய்த்துக்கொண்டேபாய்வதுபார்!

எங்கும் மனிதர் இருக்கின்றார்,
இனிதாய் அன்பைப் பொழி
கின்றார்;
பொங்குக மகிழ்வில் ஒற்றுமையே!
பூத்திட உலகில் சமதர்மம்!

உலகப் பயணம் சென்றிடுவோர்
உட்கார்ந் திடுங்கள் பின்னாலே.
உலகற் றிடலாம்; கேட்டிடலாம்
பணமோ காசோ வேண்டாமே!

—ப்ரிதி. இரா.வேங்கடேசன்

தில் குறிக்கப்பட்ட முறைப்படி சுட்டிக்குத் தூக்கு தண்டனை நிறைவேற்றி வைப்பதாக உறுதியளித்தான்.

தசமன் சுட்டியைப் பற்றி ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தான்; அவனுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்ற இன்னும் ஒரு சில மாதங்கள் இருந்தன. எனவே, இந்த இடைப்பட்ட காலத்தில் சுட்டியை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவன் தீர்மானித்தான்.

சுட்டியுடன் தசமன் நீண்ட நேரம் உரையாடினான். பழகுதற் கினியவனை சுட்டி நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் என அறிந்தான். அரசவை அறிஞர்களின் கருத்துப்படி சுட்டியைச் சிறையிலடைக்கும் எண்ணத்தைக் கை விட்டான். ஓட்டத்தில் ஆர்வமுள்ள பல இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தான். அப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான் சுட்டி; தனது தூக்குத் தண்டனையையும் மறந்து இளைஞர்களுக்கு நன்கு பயிற்சி அளித்தான்.

அவனிடம் பயிற்சி பெற்ற இளைஞர்கள் குறுகிய காலத்திலேயே பல திறமைகளைக் கற்றுக் கொண்டனர். குறுகிய ஓட்டம், நீண்ட தொலைவு ஓட்டம், தடை ஓட்டம், குழு ஓட்டம் போன்ற பல ஓட்டங்களிலும் திறமை பெற்றனர். பக்கத்து நாடுகளில் நடைபெற்ற பல போட்டிகளில் பங்கு கொண்டனர். பொற்பதக்கங்களும் வெள்ளிப் பதக்கங்களும் பெற்று நாட்டுக்குப் பெருமை சேர்த்தனர். மன்னன் தசமன் மிகவும் மகிழ்ந்தான்; இளைஞன் சுட்டிக்கு நன்றி கூறினான்; அவனைப் பலவாறு பாராட்டிக் கௌரவித்தான்.

நாட்கள் சென்றன. சுட்டிக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டிய நாள் நெருங்கி வந்து கொண்டிருந்தது. தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் இடம் தூய்மை செய்யப்பட்டது; தூக்கு மரம் சரி செய்யப்பட்டது.

அன்று மார்ச்சு 15; சுட்டி தூக்கிலிடப்பட வேண்டிய நாள். மன்னன் தசமன் மிகவும் வருந்தினான். சுட்டியைத் தூக்கிலிட வேண்டியுள்ளதை


புதியவை
கேம்ப்கோ
அளிக்கும்
சாக்கலேட் கொழிக்கும்
எக்ளேர்கள்
புதிய கேம்ப்கோ சாக்கலேட் எக்ளேர்—
பேக்கைப் பிரித்தது தான் தாமதம், பறந்துவிடும்
அருஞ்சுவை எக்ளேர்கள். நண்பர்கள் மத்தியில் உங்கள்
புகழோ நிறைந்து விடும். உங்களது சரியான தேர்விற்குக்
கிடைப்பதோ நிறைவான
பாராட்டு.
கேம்ப்கோ
சாக்லேட் எக்ளேர்கள்
உன்னதமான சுவையைப்
பகிர்ந்து கொள்ளுங்கள்
Chocolate Eclairs
Campco
இந்தியாவின் மிகப்பெரிய
நவீன ஆலை அளிப்பது
கேம்ப்கோ லிமிடெட், மங்களூர்

எண்ணி, சொல்லிலடங்காத வேதனை யுற்றான். 'மன்னன் குழந்தையனுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டுமே; என்ன செய்வது?' அவனது நிலை இருதலைக் கொள்ளி எறும்பு போலாயிற்று.

தசமனும் அவனது அதிகாரிகளும் தூக்கு மேடையின் முன் வந்து நின்றனர். சுட்டி தூக்கு மேடையில் ஏறி நின்றான்; மன்னனுக்கும், அதிகாரிகளுக்கும் வணக்கம் தெரிவித்தான். மன்னனும் அதிகாரிகளும் பதில் வணக்கம் செய்தனர்.

நீதித் துறைத் தலைவர் மன்னன் குழந்தையனின் உத்தரவை வாசிக்குமாறு கேட்டுக் கொண்டார். அதிகாரி ஒருவர் அவ்வாணையை வாசித்தார். "கொலைக் குற்றம் செய்த சுட்டி மார்ச்சு மாதம் 15 ஆம் நாள் காலை 11 மணிக்குத் தூக்கிலிடப்பட வேண்டும்," என்றார்.

காலை 11 மணி என்ற சொற்களைக் கேட்டதும் அதிகாரிகள் அனைவரும் அருகில் தொங்கிய பெரிய கடிகாரத்தை உற்றுப் பார்த்தனர். மன்னரும் அதிகாரிகளும் அதிர்ச்சியடைந்தனர். ஏனென்றால், அவர்கள் நாட்டில் காலை 11 மணி என்பது கிடையாது. ஏனென்றால் உலகத்தில் முதன் முதலாக அவர்கள் நாட்டில் கால அளவையையும் தசம முறையில் மாற்றி அமைத்திருந்தனர். பத்தின் மடங்குகளும் அடுக்குகளும் கொண்ட ஒரு புதிய முறையில் கால அளவை அங்கு மாற்றி அமைக்கப்பட்டிருந்தது.

அந்நாட்டில் ஒருநாள் 20 மணி நேரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பகல் பொழுது 10 மணி நேரம் இரவு 10 மணி நேரம். அந்நாட்டுக் கடிகாரங்களில் ஒன்று முதல் 10 மணி வரையே குறிக்கப்பட்டிருந்தது. எனவே அவர்கள் நாட்டில் காலை 11 மணி என்பது இல்லாத பொழுதேயாகும்.

நீதித் துறைத் தலைவர் சுட்டியின் தூக்குத் தண்டனையை ரத்து செய்தார். மன்னனும் அதை ஆமோதித்து ஏற்றுக் கொண்டான். மன்னனும் அதிகாரிகளும் மகிழ்ச்சியடைந்தனர். சுட்டியும் தசமனும் கட்டிப் பிடித்து மகிழ்ந்தனர். நாட்டு மக்கள் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தனர். இளைஞர்கள் அந்நாளை ஒரு பெரிய விழாவாகக் கொண்டாடினர்.

வளரும் பயிர்



9 வயதுச் சிறுமியான செல்வி வெ. லெட்சுமி, (த/பெ. பூ. மு. வெங்கட்டரமணி, முதல்வர், 7, வ. உ. சி. நகர், தென்பாதி—609 111, சீர்காழி தாலுகா.)


1987 ஆம் ஆண்டுக்கான, பெர்னில் உள்ள உலக அஞ்சல் ஒன்றியமும், யுனெஸ்கோவும் இணைந்து நடத்திய 'சர்வதேசக் கடிதம் எழுதும் போட்டி'யில் முதல் சுற்று (First Mention) தகுதியைப் பெற்றுள்ளாள். இவ்வாண்டில் தகுதிபெறும் எட்டுப் பேரில் இந்தியர் (தமிழ்நாடு) இவள் மட்டுமே. இப்போட்டி 15 வயது வரம்புடையதாகும். 43 நாடுகளிலிருந்து சிறுவர் சிறுமியர் அவரவர் தேச அஞ்சல் துறை மூலம் போட்டியிட்டனர். உலக அஞ்சல் ஒன்றியம் ஒரு டிப்ளமோவும், ஓர் ஆல்பமும், இயக்குனரின் பாராட்டுக் கடிதமும் பரிசாக வழங்கியுள்ளது. யுனெஸ்கோவும் ஓர் ஆல்பம் பரிசளித்தது. இப்பரிசுகள் தமிழ்நாடு அஞ்சல் துறை முதன்மை அதிகாரி (P.M.G.) மூலம் பெறப்பட்டன. 1987 சர்வதேச அளவில் வீடில்லாதோருக்கு உறைவிடம் அமைக்கும் ஆண்டாக அனுசரிக்கப்பட்டு 12.4.87 திருச்சியில், இந்த வட்டாரத்துக்கான போட்டி நடைபெற்றது.

தலைப்பு: "வீடற்ற ஒரு குழந்தைக்கு கடிதம் எழுதுதல்"

நாடகம்

ஆள் உயர மாலை

கமலவேலன்



காட்சி — 1

இடம்: வீடு.
காலம்: காலை நேரம்.
பாத்திரங்கள்: குமாரசாமி, வடிவு, தங்கராஜ்.

(வெற்றிலை, சீவல், சுண்ணாம்பு, புகையிலை வகையறாக்கள் நிறைந்திருக்க... மிக சுவாரஸ்யமாக வெற்றிலை போடுகிறார் குமாரசாமி.)

(பக்கத்தில் ஒரு மேஜையில் வைக்கப்பட்டுள்ள டிபனை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான் அவர் மகன் தங்கராஜ்.)

வடிவு: (தோசையுடன் வருதல்) இந்தத் தோசையை வெச்சுக்கடா...

தங்கராஜ்: அம்மா... போதும்மா, இனிமேல் ஒரு துண்டு கூடச் சாப்பிட முடியாது.

வடிவு: முறுகல் தோசைடா...சாப்பிடுடா...

குமாரசாமி: (அந்தக் காட்சியைக் கவனியாது பேசுகிறார்.) வடிவு, கடவுளோட திருவிளையாடல் மகிமையைப் பார்த்தியா...?

தங்க: கலி காலத்துல அப்படி என்னப்பா திருவிளையாடல்?!

குமார: இந்தக் கும்பகோணம் துளிர் வெத்தலை; தஞ்சாவூர் நெய் சீவல்... திண்டுக்கல் வாசனைப் புகையிலை... ஆஹா... வாய்க்கு ருசியா... எப்படிப் படைச்சிருக்கிறான் பார்த்தியா?

வடிவு: இதுவரைக்கும் நீங்க வெத்தலை பாக்குக்காகச் செலவு பண்ணின காசிருந்தால்... நாம ஒரு மூணு அடுக்கு மாளிகையே கட்டியிருக்கலாம்!

தங்கராஜ்: அம்மா சொல்றது சரி. (சொல்லிக் கொண்டே தட்டில் கைகழுவி விட்டு எழுந்திருக்கிறான்.)

குமாரசாமி: தட்டுல கைகழுவக் கூடாதுன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன். உம்... இதெல்லாம் கைகழுவ வேண்டிய கேஸு.

வடிவு: சும்மா... காலையிலே அவனை ஏங்க கரிச்சுக் கொட்டுறீங்க? பி. ஏ. படிச்ச பையன், அன்பாத்தான் பேசுங்களேன்.

குமார: ஆமாம்... உலகத்துலேயே இவர் ஒருத்தர்தான் அதிசயமா...பி. ஏ. படிச்சிருக்காரு... படிப்பு முடிச்சு ஒரு வருஷம் ஆச்சு... வேலைக்கு முயற்சி பண்ற வழியைக் காணோம்...

தங்கராஜ்: அப்பா... எனக்கு இந்த அடிமை உத்தியோகம் எல்லாம் வேண்டாம். நான் ஒரு லட்சியவாதி. மேடையிலே அழகாகப் பேசி... ஆள் உயர மாலையை எனது தோள்கள் தாங்க வேண்டும்... "செஞ்சொற் கொண்டல்" என்ற பட்டத்தையும் பெற வேண்டும். இதுவே என் லட்சியம்.

வடிவு: ஏண்டா தங்கராஜ்... நாலு பேரைப் போல உத்தியோகம் பார்த்து... நீ சம்பாதிச்சுப் பெரிய மனுஷனா வரணுங்கறதுதாண்டா... எங்க ஆசை.

குமாரசாமி: இவனாவது... சம்பாதிக்கிறதாவது... கஷ்டம்... கஷ்டம்,

கபாலீஸ்வரா!

தங்கராஜ்: அப்பா, அம்மா... உங்க ரெண்டு பேருக்கும் ஒரு வேண்டுகோள். சிறந்த மேடைப் பேச்சாளனாகி... ஆள் உயர மாலையை இந்தத் தோள்கள் தாங்கும் வரை உத்தியோகம் வேண்டேன்; உறக்கம் வேண்டேன்.

குமாரசாமி: எந்த மேடையிலே, என்னிக்குப் பேசி, இவனுக்கு ஆள் உயர மாலையை யார் போடப் போறாங்க? கஷ்டம்... கஷ்டம் கபாலீஸ்வரா!

வடிவு: நேரம் வந்தால் எல்லாம் நடக்கும்ங்க.

குமார: எனக்குக் கடைக்கு நேரமாச்சு. நான் புறப்படறேன். ஆமா... ரெண்டாவது டிக்கெட் எங்கே?

(அப்பொழுது குழந்தை போல் கத்திக் கொண்டே பாபு உள்ளே வருகிறான்.)

குமாரசாமி: ஏண்டா... ஏன்...? என்ன ஆச்சு?

பாபு: பலகுரலிலே பேசி... பாடிப் பழகுறேன் அப்பா... எங்க பள்ளி ஆண்டு விழாவிலே நான் "பல குரலிசை" செய்து காட்டப் போகிறேன். அந்தக் கலையை இப்பவே வளர்த்துக்கிட்டா... அப்புறம் ஒரு வேளை சினிமாவிலே "சான்ஸ்" கிடைச்சாலும் கிடைக்கலாம் இல்லே?

குமார: வாடா... என் மன்மதா! தமிழ்த்திரையுலகம்பெற்றெடுத்ததவப் புதல்வா! அடச்சீ...! 'ரேஷன்'லே ரவா போடறாங்களாம். போயி வாங்கிக்கிட்டு வா...

வடிவு: பாபு... சாப்பிட்டுட்டுப் போடா...

(மீண்டும் கிளி மாதிரி குரல்கொடுத்துக் கொண்டே சாப்பிட உட்காருகிறான்.)

குமார: கஷ்டம்! கஷ்டம். கபாலீஸ்வரா! இப்படி ரெண்டு கிறுக்கு எனக்கு. சரி... சரி... வடிவு நேரமாச்சு. நான் வர்றேன்.

காட்சி — 2

இடம்: வீடு.

காலம்: மாலை நேரம்.

பாத்திரங்கள்: தங்கராஜ், தனசேகர், பாபு, அப்பா, அம்மா.

தனசேகர்: சார்... சார்...

தங்கராஜ்: யாரு நீங்க...? என்ன வேணும்?

தனசேகர்: என் பேரு தனசேகர்... எங்க தெருவிலே 'இளைஞர் நற்பணி மன்றம்'ன்னு நாங்க ஒரு மன்றம் நடத்தி மன்றம்'ன்னு நாங்க ஒரு மன்றம் நடத்தறோம். அதுல பொங்கல் விழாவை முன்னிட்டு, உங்க சொற்பொழிவை வெச்சுக்கலாம்னு நினைக்கிறேன்.

தங்கராஜ்: ஆஹா...! அற்புதம்! ரொம்ப மகிழ்ச்சி... தேதி சொல்லுங்க...

தனசேகர்: 17.1.1988.

தங்கராஜ்: என்னது? பதினேழாம் தேதியா?

தனசேகர்:ஏங்க?அன்னிக்குவேறே எங்கேயும் நிகழ்ச்சியிருக்குங்களா?

தங்க: ஆமாங்க! இருந்தாலும் பரவாயில்லே. நீங்க உள்ளேரு. நான்... அந்தத் தேதியை மாத்திக்கிறேன். கட்டாயம் உங்க நிகழ்ச்சிக்கு வந்துடறேன்.

தனசேகர்:ரொம்பசந்தோஷம்ங்க.

தங்க: அப்புறம்... விழாவில இந்த மாலை மரியாதையெல்லாம் உண்டுல்லே...?

தனசேகர்: அதெல்லாம் நாங்க

அன்னை தெரேஸாவின் இயற் பெயர் அக்னெஸ் கோன்ஸ்ஹா பெஜாக்ஸ்யூ (Agnes Gonxha Bojaxhiu) ஆகும். இவர் 1910—ஆம் ஆண்டு, ஆகஸ்டு 27—ந் தேதி அல்பேனியாவில் 'ஸெகாப்ஜி' என்ற சிறு கிராமத்தில் பிறந்தவர். இவருக்கு ஒரு சகோதரனும், ஒரு சகோதரியும் உண்டு. 27.8.1980—ல் கல்கத்தாவில் அன்னை தெரேஸா இடம் பெற்ற தபால் தலை வெளியிடப்பட்டது. உயிருடன் இருக்கும் ஒருவருக்குத் தபால் தலை வெளியிடப்பட்டது இதுவே முதல் தடவை. கல்கத்தாவில் அன்னையின் 'நிர்மல் ஹிருதயம்' இதுவரை சுமார் 25,000 பேருக்குப் புகலிடமளித்துள்ளது.

— ஆர்.எஸ். சுப்பிரமணியன்.





ஜமாய்ச்சிடுவோம்ங்க... அப்போ நான் வர்றேன்.

தங்க: வாங்க... வாங்க...

(அவர் சென்ற பிறகு...)

தங்க: இப்பத்தான் முதன் முதல்ல... ஒரு கூட்டத்துல பேசப் போறேன். எனது தோள்கள் ஆள் உயர மாலையைத் தாங்கப் போகின்றன. கொஞ்சம் நல்லாவே தயாரிச்சுட்டுப் போகணும்.

(புத்தகத்தை எடுத்துக் கொண்டு படிக்க உட்காருகிறான்.)

பாபு: (அந்தச் சமயம் பூனை மாதிரி குரல் கொடுக்கிறான்.) மியாவ்... மியாவ்... மியாவ்...

தங்க: அபசகுனம்... நான் முதன் முதல்ல பேசப் போறேன். அபசகுனம் மாதிரி கத்தாதே...

பாபு: நானும் முதன் முதல்ல... பல குரல் இசையிலே கலந்துக்கப் போறேன். அப்படித்தான் கத்திப் பழகுவேன். மியாவ்... மியாவ்... மியாவ்...

தங்க: (கோபத்துடன்) அம்மா... இவனைப் பாருங்க அம்மா... இடைஞ்சல் பண்றான்.

பாபு: அப்பா... அண்ணனைப் பாருங்க அப்பா... இடைஞ்சல் பண்றான்.

அப்பா: அடாடா... உங்க ரெண்டு பேர் சண்டையைத் தீர்க்கறதுக்கு ஐ. நா. விலேயிருந்து அமைதிப் படை வரணும் போலேயிருக்கு.

அம்மா: சண்டையில்லாம சமாதானமாப் போங்கடா. (கணவர் பக்கம் திரும்பி) என்னங்க... நான் ஒண்ணு கேட்கட்டுமா?

அப்பா: என்ன விஷயம்? கேளு...


அம்மா: முதன் முதலா நம்ம பையன் மேடையிலே பேசப் போறான். நாம அவசியம் போய்க் கேட்டு... அவனை உற்சாகப்படுத்துவோம்ங்க...!

அப்பா: சரி... உன் இஷ்டம். போய்த்தான் பார்ப்போமே...

பாபு: அப்பா... நானும் கூட வர்றேன்.

அப்பா: வா... வா... அங்கே வந்தும் பூனை மாதிரி... நாய் மாதிரி கத்தாம மனுஷன் மாதிரி நடந்துக்கணும்!

அம்மா: ஆமாண்டா. சமர்த்தா



சீனர்கள் கோவில்களில் பெரிய, பெரிய வத்திகளை ஏற்றி வைக்கிறார்கள். வத்திகளின் அளவு என்ன தெரியுமா? இரண்டடி சுற்றளவு, ஆறடி நீளம்!

— ஆர்.எஸ். சுப்பிரமணியன்.

நடந்துக்கணும்.

தங்க: ஆஹா... என் சொற்பொழிவைக் கேட்க... எங்கள் குடும்பமே வரப் போகுது... வெற்றி! வெற்றி!

காட்சி — 3

இடம்: விழா மேடை.

காலம்: காலை நேரம்.

பாத்திரங்கள்: தங்கராஜ், வடிவு, குமாரசாமி, பாபு, தனசேகர் மற்றும் விழா அமைப்பாளர்கள்.

விழாத் தலைவர்: பெரியோர்களே! இப்பொழுது சிறப்புச் சொற்பொழிவாளர் திரு. தங்கராஜ் அவர்கள் உரையாற்றுவார்கள்.

தங்க: (கம்பீரமாக எழுந்து 'மைக்' முன்னர் வருதல். தனக்குத் தானே பேசுதல்.)

இன்று என் வாழ்விலே ஒரு பொன்னாள்; நன்னாள்! எனது தோள்கள் இன்று ஆள் உயர மாலையைத் தாங்கப் போகின்றன.

தனசேகர்: சார்... என்ன அப்படியே நின்னுட்டீங்க? பேசுங்க.

தங்க: (சுயநிலைவு பெற்று) தலைவர் அவர்களே! மற்றும் இங்கு திரளாகக் குழுமியிருக்கும் பெரியோர்களே!

பாபு: (தனக்குள் முணுமுணுத்தல்) மொத்தமே 33 பேர்தான் வந்திருக்காங்க... திரளான கூட்டமாம்!

அம்மா: டேய்... முணுமுணுக்காமல் அண்ணன் பேசறதைக் கேளுடா...

தங்க: இன்று நான் பேச எடுத்துக் கொண்ட பொருள்...

நபர் 1: கைத்தறி ஆடையுடன் வருதல்) சிறப்புச் சொற்பொழிவாளர் தங்கராஜ் அவர்களுக்கு, இந்தக் கைத்தறி ஆடையை அணிவிக்கிறேன்.

தங்க: (எரிச்சலுடன் துண்டைச் சுழற்றி வைக்கிறான்) தமிழர் திருநாளான பொங்கல்...

நபர் 2: அண்ணன் தங்கராஜ் அவர்களுக்கு மாலைக்குப் பதிலாக ரூபாய் ஐந்தை அன்பளிப்பாக அளிக்கிறோம்.

தங்க: (கோபத்துடன்) பொங்கல் விழா... தமிழகம் முழுவதும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

நபர் 3: அண்ணன் தங்கராஜ் அவர்களுக்கு... விழாக் குழுவின் சார்பாக மாலைக்குப் பதிலாக இந்தப் புத்தகம் அன்பளிப்பாக அளிக்கப்படுகிறது. (புத்தகத்தைத் தருதல்)

தங்கராஜ்: அடப்பாவிகளா! ஒருத்தர் கூட மாலையே போடலையே? அப்போ என் லட்சியமான ஆள் உயர மாலை... ஆள் உயர மாலை... என் தோள்கள் தாங்க வாய்ப்பே கிடைக்காதா?

(மேடையில் மயங்கி விழுகிறான்.)

குமாரசாமி: பார்த்தியா, வடிவு? வீண் கற்பனைகளோட வாழ்ந்தால்... இப்படித்தான் அல்லல்பட நேரிடும். பாராட்டுக்களையும், மாலைகளையும் எதிர்பார்க்காமல்... கடமை ஆற்றக் கூடிய மனப்பக்குவம் வளரணும்.

பாபு: அப்பா சொல்றது உண்மை. நம்முடைய உழைப்பு நாட்டு முன்னேற்றத்துக்காகப் பயன்படணும். நானும் அதை உணர்ந்துவிட்டேன்.

அம்மா: எல்லோரும் வேடிக்கை பார்க்கிறாங்க... சீக்கிரம் ஒரு குதிரை வண்டிக்கு ஏற்பாடு பண்ணுங்க...

அப்பா: கஷ்டம்! கஷ்டம்! கபாலீஸ் வரா! குதிரை வண்டி கூப்பிடறதுக்காகத்தான் நான் இந்த விழாவுக்கு வந்தேன் போலேயிருக்கு...!

தங்க: மாலை... ஆள் உயர மாலை. (மயக்கத்திலும் உளறுகிறான்.)

(திரை)

"எல்லா கணக்கையும் சரியா போட்டா உனக்கு ட்ரை-மி தருவேன்!"



"ட்ரை-மி என்றால் கணக்கில்லாமல்
சாப்பிட்டு விடுவேன்!"



PARRY'S
பாரிஸின் தரமான தயாரிப்புகள்

காரமில்க் • சாக்லேட் எக்லேர்ஸ் •
ட்ரை-மி • கோகனட் கிரீம் • சாக்லேர்ஸ்
லாலிபாப்ஸ் • காஃபி பைட்

Parry's
The King of Sweets

HTA 7036

குருபக்தி

சீர்காழி சாமு

"கும்பகோணத்திலுள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியிலிருந்து சமீபத்தில் ஓய்வு பெற்ற முன்னாள் தலைமையாசிரியர் கணபதிக்கு உடனடியாக சிறுநீரகம் ஒன்று தேவைப்படுகிறது. நாற்பதிலிருந்து நாற்பத்தைந்து வயதுக்குட்பட்ட ஆண்கள் யாராவது தங்களுடைய சிறுநீரகத்தில் ஒன்றைக் கொடுத்து உதவ விரும்பினால், உடனே தெரியப்படுத்தவும். அல்லது, நேரில் வரவும். மேற்படி ஆசிரியர் வறுமையில் இருப்பதால்-பிரதிபலனாகப் பணம் எதுவும் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்." இந்தச் செய்தியை அனைத்து தினசரிகளும் வெளியிட்டிருந்தன.

கணபதியை கும்பகோணத்தில் யாருக்கும் தெரியாமல் இருக்க முடியாது. பஞ்சகச்சம் வைத்து வேட்டி கட்டி, கோட்டு அணிந்து, தலையில் டர்பன் கட்டியிருப்பார். ஆசிரியர்களிடமும், பள்ளி மாணவர்களிடமும் அன்போடு பழகுவார். அதே நேரத்தில் கண்டிப்பு மிக்கவரும்கூட. ஒரு மாணவன் கூட பள்ளிக்குத் தாமதமாக வரக் கூடாது. வகுப்பு ஆசிரியர்கள் அனாவசியமாக வெளியில் போய் வர முடியாது. ஏழை மாணவர்களுக்குச் சட்டை, கால்சட்டை வாங்கிக்கொடுப்பார். புத்தகங்கள் நோட் புத்தகங்கள் வாங்க வசதி இல்லாதவர்களுக்கு வாங்கி வழங்குவார். ஏன், பல தடவை பட்டினி கிடந்த மாணவர்களைத் தம் வீட்டுக்கு அழைத்துப்போய்ச் சாப்பாடு கூடப் போட்டிருக்கிறார். கணபதி வேலையிலிருந்து ஓய்வு பெற்றதும் சம்சாரியான அவருக்கு வாங்கும் ஓய்வு ஊதியம் போதவில்லை. என்ன செய்வது? வருகிற பணத்தில் கௌரவமாகக் குடும்பம் நடத்தி வந்த கணபதி படுக்கையில் விழுவார் என யாருமே எதிர்பார்க்கவில்லை. முதலில் சாதாரணக் காய்ச்சல்தான் எனக் கருதிய வைத்தியர்கள், கணபதி ஒரு சிறுநீரகத்தை இழக்க இருக்கிறார் என்பதைக் கண்டறிந்து சென்னை அரசாங்க ஆஸ்பத்திரிக்குப் போகச் சொல்லி அனுப்பி விட்டார்கள்.

சென்னைக்கு வந்து ஆஸ்பத்திரியில் சேர்ந்தவுடன் தான் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுக்கப்பட்டது. எப்படியும் பத்து நாட்களுக்குள் கணபதிக்குப் புதிய சிறுநீரகம் ஒன்று பொருத்தப்பட வேண்டும், தவறினால் உயிருக்கே அபாயம் நேரிடலாம் என்று டாக்டர்கள் உணர்ந்திருந்தார்கள். பெரிய மனம் படைத்த கணபதி கண்ணீர் மல்க டாக்டரிடம் கூறினார்: "தயவு பண்ணி நான் சொல்வதைக் கேளுங்க டாக்டர்! நான் பிழைக்கப் போறது சந்தேகம்தான். நான் உயிரோடு இருக்கும் போதே நல்லா இயங்கிவர என்னுடைய மற்றொரு சிறுநீரகத்தை வேற யாருக்காவது பொருத்தமாயிருந்த துன்னா பொருத்திடுங்க! என் வாழ்நாளிலே கடைசியாத நான் செய்த உதவியாக இருக்கட்டும். எனக்காக யார் சிறுநீரகம் தர முன்வரப் போறாங்க?" என்றார்.

கணபதியின் பெருந்தன்மையான பேச்சு டாக்டரை நெகிழ வைத்தது. சிபிச் சக்கரவர்த்தியும், கண்ணப்பரும் ஒரு விநாடி டாக்டர் கண்முன்னே தோன்றி மறைவதை உணர்ந்தார். கணபதியின் மற்றொரு சிறுநீரகமும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றவிவரம் டாக்டருக்கு மட்டும் தானே தெரியும்!

இதை எப்படிக் கணபதியிடம் கூற முடியும்? இந்த நிலைமையிலும் உதவ வேண்டும் என்ற கணபதியின் பெருந் தன்மையான குணத்தைநினைத்து, கண் கலங்கிய டாக்டர், ''கவலைப்படாதீங்க சார்! கடவுள் உங்களை நிச்சயமாகக் கைவிட மாட்டார்.'' எனக் கூறி, கைக் குட்டையால் கண்களைத் துடைத்த வண்ணம் வெளியே சென்று விட்டார்.

மறுநாள் காலை தன் மனைவியைக் கூப்பிட்டார் கணபதி. ''வீட்டிலே பீரோ விலே இருக்கிற புத்தகங்களை ஏதாவது நூலகத்திலே சேர்த்து விடு. வீட்டிலே இருப்பதைவிட நூலகத்திலே இருந் தால் நாலு பேருக்குப் படிக்க வசதியா யிருக்கும். உனக்குன்னு நான் ஒன்றுமே சேர்த்து வைக்காமல் போயிட்டேன். ஊரார் பையனை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானா வளரும்னு பழ மொழி சொல்லுவாங்க. ஆனால், என் விஷயத்திலே என்னவோ இது பொய்யா போயிடுத்து..! நமக்கிருக் கற ஒரே மகனும் தன் மனைவியை அழைச்சுக்கிட்டு, தனியா ஜாகை போயிட்டான். பரவாயில்லே! எங்கே இருந்தாலும் அவங்க புள்ளை குட்டி யோட செளக்கியமாயிருக்கட்டும். நீ கிராமத்துக்குப் போய் உன்னோட தம் பிகிட்டே இரு. என்னைக்காவது ஒரு நாள் மனம் திருந்தி நம் மகன் உன்னைக் கூப்பிட்டுக்கொள்வான்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு.'' என்று கூறிய கண பதி தொடர்ந்து பேசியதாலோ என் னவோ மயக்கமாகி விட்டார். கணபதி யின் மனைவி வாயைப் பொத்திக் கொண்டு விசும்பி அழுதாள். 'என் அருமைக் கணவருக்கு ஏதாவது நேர்ந் தால், நான் வாழ்ந்துதான் ஆக வேண் டுமா?' என்ற கேள்வி அவர் மனத்தில் எழுந்தது.

இன்னும் இரண்டு நாளில் கணப திக்கு மாற்று சிறுநீரகம் பொருத்தியாக வேண்டும். இல்லாவிட்டால், அவரு டைய உயிருக்கே ஆபத்து ஏற்பட லாம். பத்திரிகைகளில் கொடுத்த விளம்பரத்திற்குப் பலன் இருந்ததா கவே தெரியவில்லை. சிறுநீரகம் தருகி றேன் என்று யாருமே முன் வந்து சொல்லவில்லை. அடிக்கடி டாக்டர்கள் கணபதியைச் சோதித்து விட்டுச் சென்றபடி இருந்தார்கள். கணபதி





தபால் தலை வெளியிடுவது மூலமாக காந்திஜியை முதன் முதலாக கௌரவித்த அந்நிய நாடு அமெரிக்கதான். இங்கிலாந்தில் ஆங்கிலேயர் அல்லாத ஒருவரை தபால் தலை வெளியிடுவது மூலமாகக் கௌரவித்ததும் காந்தியை மட்டும்தான்.

— ஆர்.எஸ். சுப்பிரமணியன்.

தன் நினைவு இல்லாமல் கிடந்தார்.

இரவு மணி பத்து இருக்கும். உத்திரப் பிரதேசத்தில் இருக்கும் கான்பூரிலிருந்து ஒரு டிரங்கால். டாக்டரிடம் அவசரமாகப் பேசினார் ஒருவர். தான் உதவிக் கலெக்டராக அங்கு இருப்பதாகவும், கணபதி சாருக்குச் சிறுநீரகம் கொடுக்கச் சென்னைக்குக் கிளம்பிக் கொண்டிருப்பதாகவும், இரவு டெல்லியிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டுச் சென்னைக்கு வந்து நேராக ஆஸ்பத்திரியை அடைந்து விடுவதாகவும் கூறினார்.

டாக்டருக்கு ஒரே ஆச்சர்யம்! சிறுநீரகம் கொடுக்கத் தமிழ்நாட்டில் யாரும் தயாராக இல்லாத நேரத்தில் கான்பூரிலிருந்து உதவிக் கலெக்டர் கொடுக்கிறேன் என்கிறாரே! டாக்டருக்கு உண்மையிலேயே வியப்பாகத்தான் இருந்தது.! மறுநாள் சிறுநீரக அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்கச் சொல்லி ஜூனியர் டாக்டர்களைக் கேட்டுக் கொண்டார்.

சொன்னபடியே காலை ஆறுமணிக்கெல்லாம் கான்பூரிலிருந்து உதவிக் கலெக்டர் ஆஸ்பத்திரிக்கு வந்து விட்டார். டாக்டர்கள் உதவிக் கலெக்டரை அன்புடன் வரவேற்றார்கள். அவர் பெயர் நடராஜன். கும்பகோணத்தில் கணபதி தலைமையாசிரியர் பொறுப்பில் இருக்கும் சமயம் படித்தவர். வசதிக் குறைவான குடும்பத்தில் பிறந்த நடராஜனை மேலே படிக்கச் சொல்லி, படிப்பில் ஊக்கம் ஏற்படுத்தியதும், நல்ல ஒழுக்கமான மாணவன் என்ற முறையில் அவருக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வாங்கித் தந்ததும் தலைமையாசிரியர் கணபதிதான்! செய்திப் பத்திரிகையில் விவரத்தைப் படித்ததும், தன்னை முன்னுக்குக் கொண்டு வந்த தலைமையாசிரியருக்குத் தன்னாலான உதவியைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தினால் உடனே புறப்பட்டுச் சென்னை வந்திருக்கிறார் நடராஜன்!

"நான் இங்கு வந்திருக்கும் விவரத்தையோ, சிறுநீரகம் கொடுத்ததையோ தயவு செய்து கணபதி சாரிடம் கூற வேண்டாம். எத்தனையோ ஏழை மாணவர்களை மேல் நிலைக்குக் கொண்டு வந்து விட்டவர். பிரதிபலனாக எதையுமே அவர் எதிர்பார்த்ததில்லை. கணபதி சார் என்னைப் பொறுத்த வரை ஒரு தெய்வம்! என்னுடையே தோலையே அவருக்குச் செருப்பாகத் தைத்துப் போடலாம்! சிறுநீரக மாற்று ஆபரேஷன் முடிந்து அவருக்கு நினைவு திரும்பியவுடன் நான்தான் சிறுநீரகம் கொடுத்தேன் என அவரிடம் சொல்லாதீர்கள்" என்று உதவிக் கலெக்டர் நடராஜன் கூறியதும் டாக்டர்கள் நன்றி உணர்வோடும் வியப்போடும் உதவிக் கலெக்டரைப் பார்த்தார்கள்.

அன்றே அறுவைச் சிகிச்சை நடந்தது. உதவிக் கலெக்டர் நடராஜனின் ஒரு சிறுநீரகம் கணபதிக்குப் பொருத்தப் பட்டது. கணபதி சகஜ நிலைமைக்குத் திரும்பி விட்டார். உதவிக் கலெக்டர் நடராஜன் கூறியதை டாக்டர்கள் கடைப் பிடித்தார்கள். கணபதி ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகிப் போகும் வரை அவரை அன்புடன் கவனித்துக் கொண்டார்கள். உதவிக் கலெக்டரை டாக்டர்களும் மற்றவர்களும் மெச்சினார்கள். அந்த வருடம் நல்லாசிரியருக்கான விருது கிடைத்திருப்பதை செய்திப் பத்திரிகையில் பார்த்த உதவிக் கலெக்டர் நடராஜன் இரு கரம் கூப்பி, தாம் இருந்த இடத்திலேயே கணபதிக்குத் தன் வாழ்த்துக்களைத் தெரியப்படுத்திக் கொண்டார்!



தூரன் வரைந்த கார்ட்டூன்கள்

"நான் இந்தக் குதிரைக்கு முன்னதாகவே பணம் தந்துடணுமா? ஏன், குதிரையை வீட்டிலே விட்டுட்டு நான் மட்டும் வருவேன்னு பயமா?"

அந்த பயம் இல்லை. குதிரை உங்களை விட்டுட்டு இங்கே பத்திரமா திரும்பி வந்து சேர்ந்திடும்"



"உயிரோட 1000 கொசுக்கள் கிடைக்குமா?"

"எதுக்காக?"

"நான் குடியிருந்த அறையைக் காலி பண்ணப் போறேன். வீட்டுக்கார அம்மாள் அந்த் அறையை முன்பு இருந்த மாதிரியே வச்சிட்டுப் போகச் சொல்றாங்க."



"இந்த உலகத்திலேயே நீதான் மிகப் பெரிய முட்டாள்"

"ஏன் சார், உங்களை மறந்திட்டீங்களே!"



"நான் அவரைத் தொடவே இல்லை, கையாலே, ஓங்கிக் குத்தவும் இல்லை."

"இல்லை இல்லை இவர் பொய் சொல்றாரு.

"வாயை மூடு. இல்லாத போனால், 'இன்னொரு குத்து உனக்குக் கிடைச்சிடும்"



இந்தப் பேராசிரியர் மழை பெய்யும் போது மறக்காமல் குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு, செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுகிறார்.



பத்துக் காசுதானே!

சங்கர் ஒன்பதாம் வகுப்பு படிப்பவன். பணக்காரக் குடும்பத்தின் ஒரே வாரிசு. அவன் எதுகேட்டாலும் அவன் பெற்றோர் மறுக்காமல் வாங்கித் தந்தார்கள். சங்கரும் பணத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஜாலியாகச் செலவு செய்து வந்தான்.

ஒரு நாள் சங்கரும் அவன் நண்பன் சிவாவும் துணிக் கடைக்குச் சென்றனர். பில்படி துணியின் விலை ரூபாய் 49.20. சங்கர் அலட்சியமாக ஐம்பது ரூபாயை நீட்டி, "மீதியை நீயே வச்சுக்கோப்பா." என்று கடைக்காரரிடம் கூறிவிட்டு வெளியில் வந்தான். சிவாவிற்கு இவன் போக்கு விசித்திரமாக இருந்தது.

"சங்கர்! ஆத்துலே போட்டாலும் அளந்து போடணும்னு சொல்வாங்க. ஐந்து பைசாவோ பத்துப் பைசாவோ சம்பாதிக்கணும்னுக்கூட உழைச்சுத்தான் சம்பாதிக்கறோம். நீ என்னடான்னா...."

சங்கருக்குக் கோபம் வந்தது.

"டேய்! எங்கப்பாதானே சம்பாதிக்கிறாரு. நீ இல்லையே! பேசாமல் இரு. போயும் போயும் எண்பது காசு. பிச்சைக் காசு. தொலையட்டுமேடா. இதுக்கெல்லாம் கணக்குப் பார்ப்பாங்களா?"— என்று கேலியுடன் சொன்னான்.

சிவா ஒன்றும் பேசவில்லை. சங்கருக்கு எதிலும் பொறுப்புணர்ச்சியின்மை, அலட்சியம். அவனாகத் திருந்தட்டும் என்று விட்டுவிட்டான்.

"சங்கர்! உனக்கு ஏதோ கவர் வந்திருக்குதாம், தபால்காரர் கூப்பிடுகிறார்" பங்கஜம் அவனிடம் கூறினாள்.

தபால்காரர் அவனிடம் ஒரு கவரை நீட்டினார்.

அவன் என்ஜினியரிங் காலேஜிற்கு அனுப்பியிருந்த அப்ளிகேஷன்தான் திரும்பி வந்திருக்கிறது. ஏன்?

"தம்பி, நீ பத்துப் பைசா குறைச்சு ஒட்டியிருக்கிறாய். அதனாலே திரும்பி வந்துடுத்து. அபராதம் ஒரு ரூபாய் தரணும்" என்றார் தபால்காரர்.



உரிய நேரத்தில் போய்ச்சேர வேண்டிய கவர் இவனது பொறுப்பின்மையால் சேரவில்லை. இனி அனுப்பியும் பலனில்லை.

போயும் போயும் பத்துப் பைசா அவன் விதியுடன் விளையாடி வாழ்க்கையின் எதிர்காலத்தையே நாசமாக்கும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.

தன் அலட்சியப் போக்கையும் பொறுப்பின்மையையும் எண்ணி எண்ணிக் கண்ணீர் விட்டான்.

எஸ். மஞ்சு


1
பரீட்சைக்குப் படிச்சு மண்டையே கலங்குது! இந்த மனுஷனாப் பிறக்கறதைவிட பேசாமல் புல்லாகப் பிறந்திருக்கலாம்!
1
2
ஐய்யோ! புல்லை மாடு தின்னுடுத்தே! அப்போ மாடாவே பிறந்திருக்கலாம் போலிருக்கே!
2
3
இதென்ன கூத்து! மாட்டைக்கறந்து பாலெல்லாம் மனுஷன் குடிக்கக் கொண்டு போயிடறானே? மனுஷனா இருக்கறதே தேவலை போலிருக்கே!
3
4
நாம மனுஷனாகவே இருந்துடுவோம்பா! பாலைக்குடிச்சுட்டு நிம்மதியாகப் பரீட்சைக்குப் படிப்போம்
மாலா-
4

பிரான்ஸ் நாட்டுக் கதை

கடைசிப் பாடம்



தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரான்ஸுக்கும், ஜெர்மனிக்கும் நடந்த போரில் பிரான்ஸ் தோற்றுச் சரண் அடைந்தது. சமாதான உடன்படிக்கையின்படி, தன் சொந்த மாநிலமான அல்ஸாஸ் — லோரியான் பகுதியை ஜெர்மனிக்கு விட்டுக் கொடுத்தது. அந்தப் பகுதி மக்கள் பிரான்ஸைத் தங்கள் தாய் நாடு என்று சொல்ல முடியாத நிலையும், தாய்மொழியைக் கற்க முடியாத நிலையும் ஏற்பட்டன. அத்தகைய சூழ்நிலையை மையமாக வைத்து எழுதப்பட்ட கதை இது:

அன்று காலை மிகவும் தாமதமாகப் பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டேன். ஆசிரியர் ஆமெல் பெயரெச்சம், வினையெச்சங்களைப் பற்றி வகுப்பில் அன்று கேள்விகள் கேட்கப்போவதாகச் சொல்லியிருந்தார். பிரெஞ்சு மொழி இலக்கணத்தின் முதல் பாடமே எனக்குத் தெரியாது. ஆகவே, ஆசிரியர் என்னை வையப் போகிறாரே என்று எண்ணி மிகவும் பயந்தேன். பள்ளிக்கூடத்திற்கு மட்டம் அடித்துவிட்டு, ஆற்றங்கரைத் தோப்பில் அன்றைய பொழுதைச் சந்தோஷமாகக் கழிக்கலாமா என்று ஒரு நிமிஷம் யோசித்தேன்.

நீல வானில் சூரியன் தகதகவெனப் பிரகாசித்துக் கொண்டிருந்தான். தோப்பிலிருந்த பறவைகள் 'கீச், கீச்' சென்று இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தன. ஆனால் அருகில் இருந்த மைதானத்தில் ஜெர்மன் நாட்டுப் போர் வீரர்கள் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தனர்.

இலக்கண வகுப்பைவிட அந்தக் காட்சிகள் எல்லாம் என் மனத்தைப் பெரிதும் கவர்ந்து இழுத்தன. இருந்தபோதிலும், மன உறுதியால் அந்த ஆசைகளை அடக்கிக் கொண்டு, பள்ளிக்கூடத்தை நோக்கி ஓடினேன்.

ஊர் மண்டபம் வந்தது. அதையும் கடந்து ஓடினேன். மண்டபத்திலிருந்த அறிவிப்புப் பலகையின் முன்னால் அப்போது ஒரு பெரிய கூட்டம் கூடியிருப்பதைக் கண்டேன். எதிரிகளின் படையெடுப்பு, தோற்றுப் பின்வாங்குதல், கட்டாய ராணுவ சேவை, போர்த் தளபதிகளின் உத்தரவுகள் — முதலிய கெட்ட செய்திகளெல்லாம்

அந்த அறிவிப்புப் பலகை மூலம் தான் கடந்த சில மாதங்களாக வெளியாயின.

"இன்றைக்கு என்ன புதிய செய்தி வந்திருக்கும்?" என்று எண்ணிக் கொண்டே, நான் நிற்காமல் தொடர்ந்து ஓடினேன்.

தன் உதவியாளர்களோடு கூடிக் கருமான் ஐசக் அந்த அறிவிப்பைப் படித்துக் கொண்டிருந்தார். அவர் என்னைக் கூவி அழைத்தார். "தம்பி, பிரான்ஸ்! ரொம்ப வேகமாகப் போகிறாயே! பள்ளிக்கூடத்திற்கு இன்னும் நிறைய நேரம் இருக்கிறது!" என்று சொன்னார்.

"என்னை அவர் கேலி செய்கிறாரோ" என்று எண்ணிக் கொண்டே நான் ஓடினேன். தலை தெறிக்க ஓடியதால், எனக்கு மூச்சுத் திணறியது. ஒருவாறு நான் பள்ளியின் தோட்டத்தை அடைந்தேன்.

பள்ளிக்கூடம் தொடங்கும் போது, வழக்கமாக ஒரே கூச்சலும், குழப்பமுமாக இருக்கும். எழுது மேசையைத் திறப்பதும், மூடுவதுமான 'பட் பட்' என்ற ஒலிகள், நன்றாகப் புரிய வேண்டும் என்பதற்காகச் சிறுவர்கள் தங்கள் கைகளால் இரு காதுகளையும் மூடிக் கொண்டு உரத்த குரலில் உச்சரிக்கும் பாடங்கள், தன் நீண்ட பிரம்பால், ஆசிரியர் அவ்வப்போது மேசையைத் தட்டும் 'டக் டக்' என்ற சப்தம் — இப்படிப் பள்ளியிலிருந்து வரும் பலவிதமான சப்தங்களைத் தெருமுனையை அடைந்ததுமே கேட்கலாம். ஆனால், அன்றைக்கு ஒரே நிசப்தம்.

குழப்பங்களுக்கு இடையே யாரும் காணாதவாறு, நான் என் இருப்பிடத்திற்குப் போய்விடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால், ஞாயிற்றுக்கிழமையையும், மற்ற விடுமுறை நாட்களையும் போலப் பள்ளிக்கூடத்தில் ஓர் அலாதி அமைதி குடிகொண்டிருந்தது!

பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்து கொண்டே, ஜன்னல்கள் வழியாக வகுப்பறையின் உள்ளே நோக்கினேன். என் தோழர்கள் முன்னதாகவே வந்து தங்கள் இடங்களில் உட்கார்ந்திருந்தனர். கையில் நீண்ட பிரம்புடன் ஆசிரியர் ஆமெல் அவர்கள் குறுக்கும், நெடுக்குமாக வழக்கம் போல வகுப்பறையில் நடந்து கொண்டிருந்தார்.

"கதவைத் திறந்து கொண்டு, எல்லோருக்கும் முன்னால் நான் தாமதமாகப் போய் நிற்க வேண்டுமே," என்று எண்ணி எண்ணி நான் எவ்வளவு வெட்கப்பட்டேன், எவ்வளவு பயப்பட்டேன் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளலாம்.

ஆனால், நான் பயந்த அளவுக்கு அன்று ஒன்றும் நடக்கவில்லை. ஆசிரியர் ஆமெல் அவர்கள் அன்போடு என்னைப் பார்த்தார். "குழந்தாய் பிரான்ஸ்! நீ வருவதற்கு முன்பே நாங்கள் தொடங்கிவிட்டோம். சீக்கிரம் உன் இடத்திற்குப் போய் உட்கார்!" என்று கனிவோடு கூறினார்.

நான் பெஞ்சின் மேல் தாவிக் குதித்தேன். என் வழக்கமான இடத்தில் அமர்ந்தேன். என்னுடைய பயம் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிந்தது. பிறகுதான், ஆசிரியர் அன்று விசேஷ உடைகள் அணிந்திருப்பதைக் கவனித்தேன்.

பளபளக்கும் பச்சைக் கோட்டு, ஓரங்களில் பூ இழைகள் பின்னப்பட்ட சட்டை, கறுப்பு நிறத்தில் ஒரு சின்னப் பட்டுத் தொப்பி — ஆகியவற்றைக் கல்வி அதிகாரிகள் வரும் நாட்களிலோ

ஒருவர்: அங்கே என்னங்க கூட்டம்?

மற்றவர்: அங்க ஒருத்தர் 'கிளி ஜோசியம்' மாதிரி குட்டி 'ரோபா'வை விட்டு சீட்டு எடுக்கச் சொல்லி ஜோஸ்யம் சொல்றார்.

—எம்.பி. ராஜசேகரன்.



அல்லது பள்ளி ஆண்டு விழாக் களிலோதான் அவர் அணிவது வழக் கம்.

மேலும், பள்ளிச் சூழ்நிலை வழக்கத் திற்கு மீறிய அமைதியுடனும், பயபக்தி உணர்வுடனும் காணப்பட்டது.

வகுப்பின் கடைசிப் பெஞ்சுகள் எப்போதும் கரலியாகவே இருக்கும். ஊரிலுள்ள பல பெரிய மனிதர்கள் எங்களைப் போலவே அடக்கத்தோடு அங்கு அமர்ந்திருந்தது எனக்குப் பெரும் ஆச்சரியத்தை அளித்தது.

மாஜி மேயர் ஓசர், ஓய்வு பெற்ற தபால் அதிகாரி, இன்னும் பல முதிய பிரமுகர்களையும், வியாபாரிகளையும் அங்கு கண்டேன். ஓரங்கள் மடிந்து போன பழைய அரிச்சுவடி ஏடுகளை மடியில் வைத்துக் கொண்டு ஓசரும், மற்றவர்களும் ஆசிரியரைப் பயபக்தி யுடன் நோக்கிக் கொண்டிருந்தனர்.

அந்தக் காட்சிகளைக் கண்ட நான் ஆச்சரியத்தால் வாயடைத்துப் போனேன். ஆசிரியர் ஆமெல் மேடை யில் ஏறி அமர்ந்தார். தமக்கே உரிய வழக்கமான கனிவும், அழுத்தமும் கலந்த குரலில் அவர் பேசத் தொடங் கினார்:

''குழந்தைகளே! இது நான் நடத்தப் போகும் கடைசிப் பாடம். நமது அல் ஸாஸ், லோரியான் பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங்களில் இனிமேல் ஜெர் மன் மொழி மட்டும்தான் கற்பிக்கப் பட வேண்டும் என்று பெர்லின் நகரிலி ருந்து உத்தரவு வந்துள்ளது. புதிய ஆசிரியர் நாளை வருகிறார். இதுவே உங்களுடைய கடைசிப் பிரெஞ்சு மொழிப் பாடம். நீங்கள் இதை மிகுந்த கருத்துடன் கவனிக்க வேண்டும் என்று நான் வேண்டுகிறேன்,'' என்றார் ஆசிரியர்.

''என் இனிய தாய்மொழியில் நான் கேட்கப் போகும் கடைசிப் பாடம் இதுதான்!'' என்ற சொற்கள் இடி யோசையைப் போல என்னைத் தாக் கின. நான் அதிர்ச்சியுற்றேன்.

''ஓ! அந்த சனர்கள்! இதைத்தான் அந்த மண்டபத்தின் பலகையில் அறி வித்திருந்தார்களோ?''

இதுதான் எனக்குக் கடைசிப் பாட மாமே! இதுவரையில் எழுதுவதற்கே நான் இன்னும் சரியாகக் கற்றுக்





கொள்ளவில்லை! இனிமேலும் நான் அதைக் கற்றுக் கொள்ளக் கூடாதாமே! என் தாய்மொழிப் பாடங்களை நான் அப்படியே நிறுத்திவிட வேண்டியதுதானா என்ன?

என் சொந்த மொழியில் ஒரு பாடத்தைக்கூட நான் இதுவரையில் படிக்கவில்லையே! தோப்புக்களில் நான் மனம் போன படி சுற்றினேன்! பறவை முட்டைகளைத் திருடினேன்! பனிக் காலத்தில் உறைந்து போன ஸார் நதியில் சறுக்கி விளையாடினேன்! 'இலக்கணம்,' 'திருத்தொண்டர் சரிதம்' — ஆகிய புத்தகங்கள் இவ்வளவு நாட்களும் எனக்கு எவ்வளவு சுமையாகத் தெரிந்தன. அவற்றை என்னால் தூக்கவே முடியவில்லை. ஆனால் இப்போது? நான் அவற்றை விட்டு விட முடியாது என்று தெரிந்ததும், அவை எவ்வளவு நெருங்கிய நண்பர்களாகத் தோன்றுகின்றன! ஆசிரியர் ஆமெல் அவர்களும் கூடத்தான். 'அவர் பள்ளிக்கூடத்தை விட்டே போகிறார். அவரை மறுபடியும் பார்க்க முடியாது!' என்ற எண்ணம் வரும்போது, அவருடைய நீண்ட பிரம்பை மறக்கிறேன்; சில சமயங்களில் அவர் எவ்வளவு கடுமையாக நடந்து கொண்டார் என்பதையும் மறக்கிறேன்.

பாவம், ஆமெல்! இந்தக் கடைசிப் பாடத்தைக் கௌரவிக்கும் விதத்தில் அவர் தம் விசேஷ ஆடைகளை அணிந்துள்ளார். ஊர் முதியவர்கள் ஏன் அங்கு உட்கார்ந்துள்ளனர் என்பதும் இப்போதுதான் புரிந்தது. ஏனென்றால், "தங்களுடைய இளமைப் பருவத்தில் ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்லவில்லையே!" என்று எண்ணி அவர்களும் வருந்தினர். தன் தாய் மொழிக்காக. நாற்பது ஆண்டுகள் உண்மையான தொண்டாற்றிய ஒரு நல்லாசிரியரைப் போற்றி நன்றி சொல்லும் வகையிலும், இனிமேல் தங்களுடையது அல்ல என்று ஆகிவிட்ட தாய் நாட்டைப் போற்றும் வகையிலும் அவர்கள் அங்கு அமர்ந்திருந்தனர்.

நான் இந்த விஷயங்களைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்த போது, என் பெயர் அழைக்கப்பட்டது. ஒவ்வொரு சிறுவனும் பாடத்தை மனப்பாடமாக ஒப்புவித்தான். இப்போது என்னுடைய முறை.

ஒரு பிழை கூட இல்லாமல், தெளிவாகவும், உரத்த குரலிலும், அந்தப் பயங்கரமான பெயரெச்ச, வினையெச்ச இலக்கண விதிகளைக் கடகடவென்று என்னால் சொல்ல முடிந்தால் — அதற்கு ஈடாக நான் எதைத்தான் தர மாட்டேன்?

தொடக்கத்திலேயே நான் உளறிக் கொட்டினேன். பிறகு மேசையைப் பிடித்துக் கொண்டு மௌனமாக நின்றேன். என்ன நேருமோ என்ற அச்சத்தால் என் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

ஆசிரியர் ஆமெல் என்னை நோக்கினார்: "குழந்தாய், பிரான்ஸ்! நான் உன்னை வையப் போவதில்லை. உன் தவறை நீயே உணருகிறாய் இல்லையா? அது போதும். 'ஓ! நிறைய நேரம் இருக்கிறது. நாளை படிக்கலாம்!' என்று ஒவ்வொருவரும் நமக்கு நாமே சொல்லிக் கொண்டிருந்தோம். இப்போது என்ன ஆயிற்று, பாருங்கள்! இந்த அல்ஸாஸ் பிரதேசத்தின் கஷ்டமே இதுதான்! இங்குள்ளவர்கள் கல்வி கற்கும் வேலையை மட்டும் 'நாளைக்கு!' என்று ஒத்திப்போடுகின்றனர். 'நீங்கள் பிரெஞ்சுக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறீர்கள். ஆனால், உங்களால் உங்கள் தாய்மொழியில் பேசவும் முடியவில்லை; எழுதவும் முடிய

வில்லை. அது எப்படி?' என்று இங்கு வந்துள்ள அயல்நாட்டவர் உங்களைப் பார்த்துக் கேட்கலாம், இல்லையா? ஆனால், குழந்தாய் பிரான்ஸ்! உன்னை மட்டும் நான் குறை சொல்லப் போவதில்லை. நம்மை நாமேதான் குறை சொல்லிக் கொள்ள வேண்டும்!'' என்று அவர் பேசினார்.

மேலும் அவர், ''நீ நன்றாகப் படிக்க வேண்டும் என்று உன் பெற்றோர்கள் போதிய அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. நாலு காசு கிடைக்கிறது என்ற காரணத்திற்காக அவர்கள் உன்னைத் தோட்ட வேலைக்கும், தொழிற் சாலைக்கும் அவ்வப்போது அனுப்பி விட்டனர். நான் மட்டும் என்ன? என்னையும் குறை சொல்ல வேண்டியதுதான். பாடம் படித்துக் கொண்டிருந்த உங்களைப் பார்த்து, 'என் தோட்டத்துப் பூச்செடிகளுக்கு நீர் ஊற்றுங்கள்!' என்று சொல்லி நான் அனுப்பவில்லையா? நான் பொழுது போக்காக விளையாடப் போனபோதெல்லாம், உங்களுக்கு விடுமுறை அளிக்கவில்லையா?'' என்று சொல்லி வருந்தினார்.

இவ்வாறு ஆசிரியர் ஆமெல் ஒவ்வொரு விஷயமாகச் சொன்னார். பிரெஞ்சு மொழியின் பெருமைகளைப் பற்றிப் பேசும் போது, ''உலகிலேயே சிறந்த மொழி பிரெஞ்சு மொழி. நாம் அதைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். மறக்கவே கூடாது. ஒரு நாட்டு மக்கள் அடிமைப் படும்போது, அவர்கள் தங்கள் தாய்மொழியைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டிருந்தால், அதுவே அன்னியர் ஆட்சி என்னும் சிறைக் கூடத்தின் திறவு கோலாகும்,'' என்று அவர் விளக்கினார்.

பிறகு ஆமெல் இலக்கண நூலைத் திறந்து, எங்கள் பாடத்தைப் படித்தார். நான் எவ்வளவு தெளிவாகப் புரிந்து கொண்டேன் என்று பார்க்கும் போது, எனக்கே அது ஆச்சரியமாக இருந்தது. அவர் சொல்லுவதெல்லாம் எளிமை, எளிமை, எளிமை! நான் அவருடைய பாடங்களை இதுவரை அவ்வளவு அக்கறையோடு கேட்டதும் இல்லை, அவரும் இதுவரை அவ்வளவு பொறுமையோடு சொல்லியதும் இல்லை.

''பாவம், ஆமேல்! பள்ளியை விட்டுப் போவதற்கு முன்னால் தனக்குத் தெரிந்த விஷயங்களை எல்லாம் அவர் எங்களுக்கு அளிக்க விரும்பியது போலத் தோன்றியது. எல்லாவற்றையும் அவர் ஒரே மூச்சில் எங்கள் தலையில் திணிக்க விரும்பினார்.


இலக்கண வகுப்பிற்குப் பிறகு கையெழுத்து வகுப்பு. அன்றைக்கு அவர் எங்களுக்குப் புதிய கையெழுத்துப் பயிற்சிகளை அளித்தார். ''பிரான்ஸ், அல்ஸாஸ், பிரான்ஸ், அல்ஸாஸ்,'' என்ற சொற்கள் பயிற்சி ஏட்டில் அழகாக, குண்டு குண்டாக எழுதப்பட்டிருந்தன. ஒவ்வொரு சொல்லும் ஒரு சிறிய கொடியாக மாறி, எங்கள் மேசையின் உச்சியிலிருந்து கிளை கிளையாகப் பிரிந்து, பள்ளிக் கூடம் முழுதும் தோரணங்களாகிப் பறப்பது போல எனக்குத் தோன்றியது.


ஒவ்வொருவரும் அந்த இனிய சொற்களை எவ்வளவு கவனமாக எழுதினார்கள், எவ்வளவு அமைதியாக எழுதினார்கள் என்பதை நேரில் கண்டால்தான் புரியும். காகிதத்தின் மேல் பேனாவால் எழுதும் ஒலியைத் தவிர வேறு எந்த சப்தமும் கேட்கவில்லை. தோட்டத்திலிருந்து சில வண்டுகள் உள்ளே பறந்து வந்தன. ஆனால், யாருமே அவற்றைக் கவனிக்கவில்லை. கூரையில் இருந்த சில புறாக்கள் மென்

அம்மா: தீபா! உனக்கு இன்று வயது ஐந்து. பிறந்த நாளைக் கொண்டாட ஐந்து மெழுகுவர்த்திகளும் ஒரு 'கேக்'கும் தரட்டுமா?

தீபா: வேண்டாம் அம்மா! ஐந்து 'கேக்'குகளும் ஒரு மெழுகு வர்த்தியும் போதும்!

— எஸ்.பிரியதர்சினி.





மையாகக் கூவின. 'அந்தப் புறாக்கள் கூட இனிமேல் ஜெர்மன் மொழியில் தான் கூவ வேண்டும் என்று அவர்கள் கட்டாயப் படுத்துவார்களோ?'' என்ற சந்தேகம் என் மனத்தில் எழுந்தது.

பயிற்சி ஏட்டிலிருந்து தலையை நிமிர்த்தி நான் ஆமெல் அவர்களைப் பார்க்கும்போதெல்லாம், அவர் நாற்காலியின் மேல் அசையாமல் உட்கார்ந்திருந்தார். வகுப்பில் இருந்த ஒவ்வொரு பொருளையும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தச் சின்ன அறையில் இருந்த பொருள்களின் உருவங்களை எல்லாம் தம் மனத்தில் பதிய வைத்துக் கொள்ள அவர் விரும்பினாரோ என்னவோ?

ஓ! இந்த நாற்பது ஆண்டு காலமாக அவர் இதே இடத்தில் அமர்ந்து கொண்டு, தனக்கு முன்னால் உள்ள வகுப்பையும், ஜன்னலுக்கு வெளியே உள்ள தோட்டத்தையும் பார்த்துக் கொண்டு எவ்வளவு அமைதியாக இங்கு வாழ்ந்திருக்கிறார்! பெஞ்சுகளும், மேசைகளும் மட்டுமே கொஞ்சம் தேய்ந்து போய் வழவழப்பாக மாறியிருக்கின்றன.

ஆசிரியர் ஆமெல் அடுத்த நாளே நாட்டை விட்டுப் போய்விட வேண்டுமாம். வகுப்புக்கு மேலே இருந்த மாடி அறையில் அவருடைய சகோதரியார் தங்கள் உடைமைகளை மூட்டை கட்டிக் கொண்டிருந்தார். இந்தப் பள்ளியையும், இங்குள்ள ஒவ்வொரு பொருளையும் விட்டுப் பிரிந்து போக வேண்டுமென்றால், ஆசிரியர் ஆமெலின் உள்ளம் துயரத்தில் மூழ்கி எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கும்!

ஆனால், நாங்கள் சொன்ன ஒவ்வொரு பாடத்தையும் கடைசி வரி வரையிலும் கேட்கக் கூடிய பக்குவமும், தைரியமும் ஆமெல் அவர்களிடம் இருந்தன. கையெழுத்திற்குப் பிறகு சரித்திரப் பாடம் எடுத்தார்.

வகுப்பின் கடைசி பெஞ்சில் இருந்த வயது முதிர்ந்த ஓசர் மூக்குக் கண்ணாடி அணிந்து, கையில் முதற்

பாட நூலைப் பிடித்திருந்தார். எங்களோடு கூடவே அவரும் பாடங்களைச் சொல்லிக் கொண்டு வந்தார். அவரும் அழுதார். உணர்ச்சி வேகத்தால் அவருடைய குரல் நடுங்கியது. ''நாமெல்லாம் சிரித்துக் கொண்டே அழ விரும்புகிறோம். அழுது கொண்டே சிரிக்க விரும்புகிறோம்,'' என்று அவர் கூறியது எனக்கு விளங்காத புதிராக இருந்தது. ஓ! அந்தக் கடைசிப் பாடம் எவ்வளவு பசுமையாக என் நினைவில் உள்ளது!

திடீரென மாதா கோவில் கடிகாரம் பன்னிரண்டு மணி அடித்தது. அதே சமயத்தில் ஜன்னலுக்கு வெளியே ஒரு காட்சி தெரிந்தது. உடற்பயிற்சிகளை முடித்துவிட்டு ஜெர்மன் நாட்டுப் போர்வீரர்கள் அணிவகுத்துச் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் இசைக் கருவிகளை முழக்கிக் கொண்டு, பள்ளிக்கூடத்தைக் கடந்து சென்றனர்.

ஆசிரியர் ஆமெல் நாற்காலியிலிருந்து எழுந்து நின்றார். அவர் முகம் வெளிறி இருந்தது. என் கண்களுக்கு அவர் மிக மிக உயரமாகத் தோன்றினார்.

''என் அருமை நண்பர்களே! நான் ... நான் ...'' அவருடைய தொண்டையை ஏதோ அடைத்துக் கொண்டது. அவரால் பேச முடியவில்லை.

எழுதுகோலை எடுத்துக் கரும் பலகையின்மேல் கொட்டை எழுத்துக்களில் ''பிரான்ஸ் வாழ்க!'' என்ற வாசகத்தை அழுத்தமாக எழுதினார்.

அவரால் எங்களை நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை. சுவர்ப் பக்கம் திரும்பி தலையைக் குனிந்து, சுவர் மீது தலையைச் சாய்த்துக் கொண்டார்.

''பள்ளிக்கூடம் கலைந்தது. நீங்கள் போகலாம்!'' என்ற கருத்தை அறிவிக்கும் ஒரு சைகையை அவர் மௌனமாகத் தம் கையால் உணர்த்தினார்.

செக்கிழுத்த செம்மல்



செக்கிழுத்த செம்மலென்ருல்
சிறுவருக்கும் தெரியுமன்ரே?
எக்காலும் மறக்கவொண்ணு
ஏந்தலவன் புரியுமன்ரே?

வக்கீலாய்ப் படித்திருந்தும்
வ. உ. சி. மாடாகச்
செக்கிழுத்தார் சிறையினிலே
தேசத்தின் விடுதலைக்கே!

அந்நியர்கள் இங்குவந்து
அரசாட்சி செய்திடவோ?
இந்தியர்கள் நாமிங்கே
ஏமாளி ஆகிடவோ?

என்னஇது நீதியென்றே
எக்காள மிட்டாராம்!
சொன்னபடி நாட்டிற்காய்
சொத்துசுகம் துறந்தாராம்!

கப்பலோட்டி வெள்ளையனைக்
கதிகலங்கச் செய்திட்ட
செப்பரிய தியாகசீலர்
சிதம்பரனார் வாழ்கவென்போம்!


— ஜி. பிரபா (18,540), அருப்புக்கோட்டை.


முன்னொரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போட்டி உண்டாயிற்று.....
இந்திரன்.....
நமது குரு பிரகஸ்பதி இருக்கும் வரை நம்மை யார் வெல்ல முடியும்? மூவுலகங்களையும் நாமே ஆள்வோம்!
அசுரர்கள் அரசன் விருஷபர்வன்.....
பிரகஸ்பதியை விடச் சிறந்த ஒரு குரு நமக்குத் தேவை. இல்லையென்றால் தேவர்களை வெல்ல முடியாது...
மிருத சஞ்சீவினி மந்திரம்
கதை: ஆனந்தி
படம்: வினு
அசுரர்கள் சுக்கிராச்சாரியாரை வணங்கி.....
அபயம்!
அளித்தேன்!
தாங்களே எங்கள் குரு; எங்களைக் கைவிடலாகாது...
தேவாசுர யுத்தம் நடந்தது.....


அசுரர்கள் தோல்வி கண்டு திரும்பி...
குருவே! ஆயிரக் கணக்கான அசுரர்கள் இன்றையப் போரில் மடிந்தனர், என்ன செய்வோம்?
சுக்கிராச்சாரியார் மனமிரங்கி....
கவலை வேண்டாம்! சஞ்சீவினி மந்திரம் ஜபித்து மாண்டவர்களைப் பிழைத் தெழச் செய்வேன்!
அசுர குருவின் தவ வலிமையால் மாண்டவர் மீண்டு வர...
நம் குரு உள்ளவரை நமக்கென்ன கவலை...!
... ஒரே கொண்டாட்டம்..
தேவ குரு பிரகஸ்பதி நமது குருவுக்கு ஈடாக மாட்டார்!
யுத்தம் தொடர்ந்தது. நடந்ததை அறிந்த அக்னி...
தேவேந்திரா! சஞ்சீவினி வித்தையால் சுக்கிராச்சாரியார் அசுரர்களைக் காப்பாற்றி வருகிறார். தேவர்களின் எண்ணிக்கையோ நாளுக்கு நாள் குறைகிறது!


மந்திராலோசனை நடத்தினான் இந்திரன்....
இந்தக் கஷ்டத்திலிருந்து மீள, யாராவது வழி சொல்லுங்கள்!
வாயு பகவான் எழுந்து...
அரசே! நம் குருவின் மகன் கசன், மகா அறிவாளி. நல்ல நடத்தை உள்ளவன். அவனை சுக்கிராச்சாரியாரிடம் அனுப்பி...
வாயுவின் யோசனை ஏற்கப்பட்டது...
கசனே! சுக்கிரனின் சீடனாகப் பணியாற்றி சமயம் பார்த்து சஞ்சீவினி மந்திரத்தைத் தெரிந்து கொண்டு திரும்பி வந்துவிடு!
இந்திரனிடம் விடை பெற வந்தான் கசன்...
சுக்கிராச்சாரியாரை மகிழ்விப்பதோடு அவர் மகள் தேவயானியையும் திருப்தி செய்ய வேண்டும். சுக்கிரனுக்கு மகளிடம் ரொம்பப் பிரியம்!
உன்னுடைய அடக்கமும் நல்ல நடத்தையும்தான் காரியத்தைச் சாதித்து, தேவர்களைக் காப்பாற்ற வேண்டும்...
உங்களுக்கு ஏமாற்றம் அளிக்க மாட்டேன். சென்று வருகிறேன்!


விருஷபர்வனின் நகரத்துக்குக் கசன் வந்து சேர்ந்தான்....
ஐயா, சுக்கிராச்சாரியாரின் வீடு எது?
அதோ, அந்தப் பெரிய தோட்டத்தின் மத்தியில் உள்ள சின்ன வீடுதான்!
தோட்டத்தில் ஓர் அழகிய பெண், செடிகளுக்கு அன்புடன் நீர் விட்டுக் கொண்டிருந்தாள்....
இவள்தான் தேவயானியோ?
கசன் சுக்கிராச்சாரியாரை அணுக...
யாரப்பா நீ? என்ன வேணும்?
குருவே! நான் பிரகஸ்பதியின் மகன்.....
...என்னைச் சீடனாக ஏற்க வேண்டும்!
அப்படியே ஆகட்டும்! உன் தந்தை மட்டுமல்ல, உன் தாத்தா அங்கிரஸ் மகரிஷியும் மதிப்புக்குரிய பெரியவர்.
கசன், பிரும்மசரிய விரதம் கடைபிடித்து, குருவுக்குப் பக்தியோடும் அன்போடும் பணிவிடை செய்தான்....


கசனுடைய பண்பும் அடக்கமும் சுக்கிராச் சாரியாரை மகிழ்வித்தன.
உபதேசிக்கிறேன், கேட்டுக் கொள்...
கசனுடைய அறிவாற்றல் குருவை மேலும் சந்தோஷத்தில் ஆழ்த்தியது...
இன்று புதிய மந்திரங்களைக் கற்றுத் தருகிறேன்...
தந்தையின் அன்பைப் பெற்ற கசனை, மகள் தேவயானியும் பிரியமாக நடத்தினள்...
ரொம்ப நேரமாகப் படிக்கிறீர்களே, கொஞ்சம் பால் சாப்பிடுங்கள்...
தேவயானிக்கு உதவியாக, தோட்டத்திலும் வேலை செய்வான் கசன்...
எப்போதும் வேலை; இல்லாவிட்டால் படிப்பு... ஓய்வே வேண்டாமா? ...பொழுது போக்காக....




குருவுக்குப் பணி விடை செய்வது பாக்கியம்... மனம் தவறான வழிகளில் செல்லாதிருக்க உழைப்பே உதவும்....
ஒரு நாள் சுக்கிராச்சாரியாரைச் சந்திக்க விருஷபர்வன் வந்தான்...
அசுரர்க்கரசே! வரவேணும்...
குருவிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு மன்னன் புறப்பட்ட போது....
குருவே, யார் இவன்? புதிய சீடனா?
சுக்கிராச்சாரியார், சாவதானமாக...
சாட்சாத் பிருஹஸ்பதியின் பிள்ளை! தேவ குருவின் மகனே பாடம் கேட்க என்னிடம் தான் வந்திருக்கிறான்!....
அரண்மனை திரும்பிய விருஷபர்வன் கலக்கமடைந்தான்...
பிருஹஸ்பதியின் மகனுக்கு சுக்கிராச்சாரியாரிடம் என்ன காரியம்...?
அரசே! இதில் ஏதோ சூழ்ச்சி இருக்க வேண்டும்!




அசுரர்கள் ஆலோசனைக் கொன்று கூடினர்...
சுக்கிராச்சாரியாருக்குச் சீடர்களுள் கசனிடம் தான் ரொம்ப அன்பாம்!
தேவயானியை அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்க எண்ணியிருக்கிறாராம்!
நாம் மோசம் போய் விடுவோம்! கசனை இந்திரன் தான் அனுப்பியிருக்க வேண்டும்.
நம் குருவை எச்சரிக்க வேண்டும்!
குருவை எச்சரிப்பானேன்? கசனைக் கொன்று விட்டால் தீர்ந்தது!
குருவுக்குச் சந்தேகம் ஏற்படாமல் கவனித்துக் கொள்ளுங்கள்!
காட்டில் கசன் மாடு மேய்த்துக் கொண்டிருந்த போது...
ஆ! ஐயோ!
இவன் உடலை வெட்டி நாய்களுக்குப் போட்டு விடலாம்: குருவுக்குத் தெரியவே செய்யாது!



மாலையில் பசுக்கள் மட்டுமே வீடு திரும்ப...
அப்பா! கசனுக்கு ஏதோ ஆபத்து!
ஞான திருஷ்டியால் நடந்ததை அறிந்தார் சுக்கிராச்சாரியார்...
இது அசுரர்களின் வேலைதான்! கசனைக் கொன்றிருக்கிறார்கள்...
ஐயோ, அப்பா! அவரில்லாமல் எப்படி வாழ்வேன்?
கவலைப் படாதே, அம்மா! சஞ்சீவினி மந்திரத்தைப் பிரயோகித்து அவனை அழைக்கிறேன்!
சுக்கிராச்சாரியார், நிஷ்டையில் ஆழ்ந்து தியானிக்க...
குருவே! வணங்குகிறேன்!
தேவயானி மகிழ்ந்து...
என்ன நடந்தது? விவரமாகச் சொல்லுங்கள்...
மாடு மேய்க்கையில் அசுரர்கள் என்னை அடித்துக் கொன்றார்கள். இப்போது எப்படியோ இங்கே நிற்கிறேன்!
சிலகாலம் சென்று...
கசனே! எனக்கு நல்ல மணமுள்ள மலர்கள் வேண்டும்.
விறகு, சமித்து, தர்ப்பை எல்லாம் காட்டில் சேகரிக்கும்போது மலர்களும் கொண்டு வருவேன்....


தேவயானிக்காக மணமுள்ள காட்டு மலர்களைச் சேகரித்தான் கசன். அப்போது...
இவனை மறுபடி கொன்றுவிட வேண்டும்!
அசுரர்கள் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றி னர்கள்...
கதையால் அடிக்கப் பெற்ற கசன் இறந்து விழுந்தான்...
சஞ்சீவினி மந்திரத்தைப் பிரயோகித்து இவனை மீண்டும் சுக்கிராச்சாரியார் உயிர் பிழைக்கச் செய்வார்...
அதற்கு இடம் தருவோமா? இம்முறை இவன் உடலை அரைத்துச் சமுத்திரத்தில் கரைத்து விடலாம்!
அப்படியே செய்தார்கள்...
இந்தத் தடவை நமது குருவினால் கூட கசனை உயிர்பெற்று எழச் செய்ய முடியாது!
எந்த மந்திரமும் பயன் படாது!



அசுரர்களின் அரசன் மகிழ்ச்சி அடைந்தான்.....
தேவர்களின் சூழ்ச்சியை முறியடித்து விட்டோம்!
சுக்கிராச்சாரியார் ஆசிரமத்தில்......
அப்பா! மலர்களைக் கொண்டுவரப் போன கசனை இன்னும் காணவில்லையே..
சுக்கிராச்சாரியார் மகளுக்கு அறிவுரை வழங்கினார்...
...நான் எத்தனை தடவை கசனை உயிர்ப்பித்தாலும் அசுரர்கள் அவனை மறுபடி கொல்வார்கள்...
தேவயானி! நீ ரிஷியின் புதல்வி. ஒருவரின் மரணத் துக்காகத் துக்கப் படக் கூடாது. மனோ பலத்தை வளர்த்துக் கொள்....
அப்பா! கசன் உங்களையே தஞ்சமென நம்பி வந்தவர். அவரை உயிர்ப்பிக்க வேண்டியது உங்கள் கடமை...



...மேலும் கசன் தங்களுடைய மிகச் சிறந்த சீடர்; தவசிரேஷ்டர்; பேரறிவாளி.....
சுக்கிராச்சாரியார் மீண்டும் சஞ்சீவினி மந்திரத்தைப் பிரயோகித்தார்....
சமுத்திரத்தில் கரைக்கப்பட்ட என் துகள்கள் ஒன்றாகி வந்திருக்கிறேன்!
உண்மைதான்....
குருவே! இரண்டாவது முறையாக எனக்கு உயிர் கொடுத்து விட்டீர்கள்!
என்ன அதிசயம்!
அசுரர்கள் மறுபடி சூழ்ச்சி செய்தார்கள்...
கசன் மீண்டும் உயிர் பெற்று வந்து விட்டானே...
இப்படிச் செய்தால் என்ன...
ஆ! பிரமாதமான யோசனை!
விறகு, சுள்ளி, தர்ப்பை முதலியன சேகரிக்கக் காட்டுக்கு வந்தான் கசன்.
இது தான் சமயம், வாளை உருவிக் கொல்லு!


கசன் மறுபடியும் இறந்தான்....
முதலில் இந்த உடலை எரித்துச் சாம்பலாக்கு வோம்....
சாம்பலை மதுபானத்தில் கரைப்போம்...
கசனுடைய சாம்பல் கலக்கப் பட்ட மதுபானத்துடன் சுக்கிராச்சாரியாரிடம் வந்தான் விருஷபர்வன்...
குருவே! மிக உயர்ந்த மது... உங்களுக்காகவே கொண்டு வந்தேன்....
மகிழ்ச்சியுடன் ஏற்கிறேன்!
அசுரர்கள் ஆனந்த மடைந்தனர்....
சுக்கிராச்சாரி யாரால் இப்போது எப்படி கசனை உயிர்ப்பிக்க முடியும்?
கசன் உயிரோடு வருவதென்றால் சுக்கிராச் சாரியார் வயிறு கிழியும்!
தந்தையைப் பறிகொடுத்து, கசனை அடைய, தேவயானி நினைக்கவே மாட்டாள்...
வெற்றி! வெற்றி!


இரவு வெகு நேர மாகியும்....
கசன் இன்னும் திரும்பவில்லையே? அவருக்கு என்ன ஆபத்தோ!
தந்தையிடம் சென்று கண்ணீர் உகுத்தாள் தேவயானி...
அப்பா! கசனை நான் விரும்புகிறேன்... அவரைக் காணமல் என் இதயம் வெடித்து விடும் போலிருக்கிறது...
அசுரர்கள் அவனை மறுபடியும் கொன்று விட்டார்களோ, என்னமோ! சஞ்சீவினி மந்திரம் ஜபிக்கிறேன்... கவலைப் படாதே!
நிஷ்டையில் அமர்ந்து சுக்கிராச்சாரியார் ஜபிக்க.....
குருவே, வணங்குகிறேன்!
இதென்ன! என் வயிற்றுக்குள்ளிருந்து கசனின் குரல்...!
குருவே! அசுரர்கள் என் உடலை எரித்து, சாம்பலை மதுபானத்தில் கரைத்து, உனக்குக் கொடுத்தார்கள்!
ஆகா! மதுபானம் செய்வதால் எப்பேற் பட்ட விபரீதங்கள் நிகழ்கின்றன! பெருந் தவறு செய்து விட்டேனே!


மகளே! கசன் உயிர் பெற்று வரவேண்டுமானால் நான் இறக்க வேண்டும்! என் உடலைக் கிழித்துக்கொண்டுதான் அவன் வெளியே வர முடியும்!
அப்பா! எனக்கு நீங்கள் இருவருமே வேண்டும்! ஏதாவது உபாயம் தேடுங்கள்!
சுக்கிராச்சாரியார் யோசித்து விட்டு....
கசனே! நீ வந்த காரியம் நிறைவேற மூட அசுரர்களே உனக்கு உதவி விட்டார்கள்! சஞ்சீவினி மந்திரத்தை உபதேசிக்கிறேன். கேட்டுக்கொள்!
கசன் சிரத்தையோடு மந்திரத்தைக் கூறுகிறான்... அவன் வெளியே வர....
ஐயோ, அப்பா!
அழாதே, தேவயானி! குருவை நான் உயிர்ப்பிக்கிறேன்!
சஞ்சீவினி மந்திரத்தைக் கசன் இப்போது ஜபிக்க, சுக்கிராச்சாரியார் உயிர் பெற்று எழுந்தார்...
குருவே! உங்கள் உடலிலிருந்து நான் உதித்ததால் எனக்குத் தாயும் ஆனீர்கள்!



தேவயானி கசனிடம் மனம் விட்டுப் பேசினாள்...
சகல சாஸ்திரங்களிலும் தேர்ச்சி அடைந்து விட்டீர்கள்! தேவலோகம் திரும்பும் முன் என்னை மணந்து கொண்டு உடன் அழைத்துப் போக வேண்டும்.
கசன் திடுக்கிட்டான்...
பெண்ணே! உன் தந்தையின் வயிற்றிலிருந்து நான் மறுபிறவி பெற்றபடியால் உனக்குச் சகோதரன் ஆகி விட்டேன். உன்னை மணப்பது சாத்தியமில்லை....
தேவயானி வருத்தமும் கோபமும் அடைந்தாள்...
அது அசுரர்களின் சூழ்ச்சி. அதற்கு முன் பல முறை உங்களுக்கு உயிர் கொடுக்கத் தந்தையிடம் நான்தான் வாதாடினேன். உங்கள் உடல், உயிர் இரண்டும் நான் கொடுத்தவை!
கசன் கருணையுடன் ஆனால் உறுதியாகப் பேசினான்...
அதற்கு நான் நன்றி கூறுகிறேன்... ஆனால் அதற்காக உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது.... எனக்கு விடை கொடு!
அசுரர்கள் சுக்கிராச்சாரியாரைக் காண வந்தனர்.....
குருவுக்குத் தெரியாமல் தீங்கு செய்பவர்கள் வெற்றி பெற மாட்டார்கள்....


அசுரர்கள் வெட்கித் தலைகுனிய...
உங்களுடைய வஞ்சகத்தாலேயே கசனுடைய காரியம் வெற்றி அடைந்தது. அவன் புகழ் என்றும் விளங்கும்....
கசன் சுக்கிராச்சாரியாரை வணங்கி....
குருவே! என் தந்தையைக் காண தேவலோகம் திரும்புகிறேன், விடை கொடுங்கள்.
உனக்கு மங்களம் உண்டாகும்...
போய் வாருங்கள்.
தேவருலகில் இந்திரன் வரவேற்று...
கசனே! உனக்குப் பெரிதும் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம்.
தேவர்களே! கசனுடைய நல்ல நடத்தையாலும் அறிவுக் கூர்மையாலும் அசுரர்களை வெல்லும் வல்லமை அடைந்தோம்!
கசன் வாழ்க!
வாழ்க! வாழ்க!
கசன், தந்தை பிருகஸ்பதியை நமஸ்கரித்தான்...
செல்வனே! தேவகாரியத்தைப் பூர்த்தி செய்தாய்! கீர்த்தி பெற்றாய்! எனக்கும் பெருமை சேர்த்தாய்! வாழ்க!

உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்



மா. சீனிவாசன் (11,907)



ப. பாலசுந்தரி (8270)

க. விஜய் ஆனந்த் (14,324)






எஸ். திருநாவுக்கரசு (16,350)

டாக்டர் பக்கம்

விஷக் காய்ச்சல்



டாக்டர் கு. கணேசன்

சாந்தியும் விவேகாவும் தோழிகள். இருவரும் எட்டாம் வகுப்பில் படிக்கிறார்கள். எனக்கு ஏற்கெனவே அறிமுகமானவர்கள். ஓய்வு நேரங்களில் அடிக்கடி என்னைச் சந்திக்க வருவார்கள்.

அப்படித்தான் சென்ற ஞாயிற்றுக்கிழமையும் வந்திருந்தார்கள்.

சாந்தி, விவேகா (இருவரும்): வணக்கம், டாக்டர்!

நான்: வணக்கம், வாருங்கள், அமருங்கள்.

இருவரும்: நன்றி டாக்டர்.

நான்: என்ன விஷயமாக வந்திருக்கிறீர்கள்? சாந்தி கையில் இன்றைய செய்தித்தாளை வைத்திருக்கிறாளே!... ஏதேனும் முக்கியமான செய்தி வந்திருக்கிறதா?

சாந்தி: ஆமாம் டாக்டர்... எங்களுக்குத் தெளிவாகத் தெரியாத செய்தி ஒன்று இதில் வந்திருக்கிறது. அதைப் பற்றி விளக்கம் கேட்கவே உங்களிடம் வந்திருக்கிறோம்.

நான்: அப்படி என்ன செய்தி அதில் வந்திருக்கிறது?


சாந்தி (செய்தியை வாசிக்கிறாள்): தமிழ்நாட்டில் விஷக்காய்ச்சல், ஆயிரக்கணக்கானோர் அவதி! குழந்தைகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்...

விவேகா (குறுக்கிட்டு): டாக்டர், விஷக்காய்ச்சல் என்றால் என்ன? நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?

நான்: ஒருவகை வைரஸ் கிருமிகளின் தாக்குதலால் மக்களுக்கு வரக்கூடிய காய்ச்சலுக்கு 'விஷக் காய்ச்சல்' என்று பெயர். இதைச் சாதாரணமாக 'புளுக் காய்ச்சல்' என்றும் சொல்வார்கள். மருத்துவர்கள் 'இன்புளுயென்சா' (**Influenza**) என்று கூறுவார்கள்.

சாந்தி: இந்த விஷக்காய்ச்சல் எப்படி டாக்டர் வருகிறது?

நான்: வைரஸ் என்று சொல்லக்கூடிய கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய கிருமிகள் அக்டோபர், நவம்பர், டிசம்பர் போன்ற மழைக் காலங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. இவை காற்று மூலம் நம் உடம்புக்குள் நுழைந்து சுவாசப் பையைத் தாக்கும். சுவாசப் பாதையின் உட்புறத்தை மூடியுள்ள மெல்லிய ஜவ்வில்



"நம்ம பாபு எருமை மாட்டை நிறுத்தி வைத்து ஓடிப் போய் அதை தாண்டுறானே! என்ன விஷயம்?"

"ஹை ஜம்ப் பிராக்டீஸ் பண்றான்!"
— மணியன் தர்மலிங்கம்.

இக்கிருமிகள் அதிகமாகப் பெருகும். பிறகு, நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருமும் போதும் தும்மும் போதும் இக்கிருமிகள் காற்றில் கலந்து அடுத்தவர்களுக்கும் பரவும்.

விவேகா: டாக்டர், விஷக்காய்ச்சலால் குழந்தைகள்தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகச் செய்தி சொல்கிறதே, அது உண்மையா டாக்டர்?

நான்: உண்மைதான்.

சாந்தி: அப்படியென்றால் குழந்தைகளை மட்டும் விஷக்காய்ச்சல் அதிகமாகப் பாதிப்பதற்கு என்ன காரணம் டாக்டர்?

நான்: குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருக்கும். அதனால் இந்த வைரஸ் கிருமிகள் அவர்களை எளிதில் தொற்றிக் கொள்ளும். அது மட்டுமல்லாமல் வைரஸ் கிருமிகளினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் சுவாசப் பாதையைச் சில வகை பாக்டீரியாக் கிருமிகளும் சேர்ந்து தாக்கும். இதனால்தான் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் அதிகமாகப் பாதிப்பு ஏற்படுகிறது.

விவேகா: நமக்கு வந்துள்ள காய்ச்சல் விஷக்காய்ச்சல் என்பதை எப்படி டாக்டர் தெரிந்து கொள்வது? இதற்கென்று ஏதேனும் அறிகுறிகள் உண்டா?

நான்: உண்டு. வைரஸ் கிருமிகள் நம் உடலில் புகுந்த இரண்டு நாட்களில் குளிருடன் கூடிய காய்ச்சல் வரும். சளி, இருமல், ஜலதோஷம் ஆகியவையும் ஏற்படும். தலைவலியும் உடல்வலியும் அதிகமாக இருக்கும். தொண்டையில் வலியும் கமறலும் இருக்கும். சாதாரணமாக இக்காய்ச்சல் மூன்றிலிருந்து ஐந்து நாட்கள் வரை நீடிக்கும். ஆனால், வைரஸ் கிருமிகளோடு பாக்டீரியாக் கிருமிகளும் சேர்ந்து தாக்கினால், மேலும் சிலநாட்களுக்குக் காய்ச்சல் நீடிக்கலாம்.

சாந்தி: இதை விஷக்காய்ச்சல் என்று சொல்கிறார்களே... அப்படியானால், நம் உயிருக்கு இதனால் ஆபத்து வருமா டாக்டர்?

நான்: பெரும்பாலும் உயிருக்கு ஆபத்து வராது.

விவேகா: சரி டாக்டர், விஷக்காய்ச்சல் வந்துவிட்டால், நாங்கள் என்ன செய்ய வேண்டும்? அதையும் எங்களுக்குச் சொல்லுங்களேன்...

நான்: சொல்கிறேன், கேளுங்கள். காய்ச்சல் வந்தவுடன் காலம் தாமதியாமல் மருத்துவரைச் சந்தித்து ஆலோசனை பெற வேண்டும். விஷக்காய்ச்சல் போன்ற வைரஸ் நோய்க் கிருமிகளைக் குணப்படுத்த இன்னும் சரியான மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை., ஆயினும், காய்ச்சலின் தீவிரத்தைச் சில மருந்துகளின் மூலம் கட்டுப்படுத்தலாம். சில வகை ஆன்டிபயாடிக் மருந்துகள் மூலம் ஏதேனும் பாக்டீரியாக் கிருமிகள் நம் உடம்புக்குள் தொற்றிக் கொள்ளாதபடி தடுத்துக் கொள்ளலாம்.

அதோடு விஷக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் முழுமையான ஓய்வு எடுக்க வேண்டும். வீட்டில் தனி அறையில் தங்கிக் கொள்ள வேண்டும்.

கொதித்து ஆற வைத்த தண்ணீரையே குடிநீராகப் பயன்படுத்த வேண்டும்.

எளிதில் ஜீரணிக்கக் கூடிய பால், குளுகோஸ், அரிசிக் கஞ்சி, பழச்சாறுகள் போன்ற ஆகாரங்களையே உணவாக உட்கொள்ள வேண்டும்.

ஜலதோஷம் அதிகமாக உள்ளவர்கள் வெந்நீரில் நீராவியை நுகரலாம்.

மருந்துவர் சொன்ன மாத்திரை, மருந்துகளைச் சரியான அளவில், சரியான நேரத்தில் உட்கொள்ள வேண்டும்.

மேற்சொன்ன முறைகளைக் கடைப்பிடித்தால் விஷக்காய்ச்சல் விரைவில் குணமாகிவிடும்.

சாந்தி: இந்த விஷக்காய்ச்சலை வரவிடாமல் தடுக்க முடியாதா டாக்டர்?

நான்: நம்மைச் சுற்றியுள்ள காற்று மிகவும் சுத்தமாக இருந்தாலொழிய இவ்விஷக் காய்ச்சல் வருவதை முழுமையாகத் தடுக்க முடியாது. ஆனால், நான் சொல்லும் சில வழிமுறைகளைக் கடைப்பிடித்தால் ஓரளவிற்கு விஷக் காய்ச்சல் மற்றவர்களுக்குப் பரவுவதைத் தவிர்க்கலாம்.

விவேகா: அவை என்ன வழிமுறைகள் டாக்டர்?

நான்: சொல்கிறேன். இந்த விஷக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் வீட்டில் உள்ள மற்றவர்களிடமிருந்து சில நாட்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்டு, தனி அறையில் தங்கிக் கொள்ள வேண்டும். இவர்கள் இருமும் போதும் தும்மும் போதும் சுத்தமான கைக்குட்டையால் மூக்கையும் வாயையும் முழுமையாக மூடிக் கொண்டால் விஷக்கிருமிகள் காற்றில் பரவாது.

நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உபயோகப்படுத்திய துண்டு, கைக்குட்டை போன்ற துணிமணிகளை மற்றவர்கள் உபயோகப்படுத்தக் கூடாது.

குழந்தைகளுக்கு விஷக்காய்ச்சல் வந்தால் உடல்நிலை பூரணமாகக் குணமாகும் வரை பள்ளிக்கு அனுப்பக் கூடாது. இதன் மூலம், மற்றக் குழந்தைகளுக்கு விஷக் காய்ச்சல் வருவதைத் தவிர்க்கலாம்.

பெரியவர்கள் கல்லூரி, அலுவலகம் செல்வதைத் தவிர்க்க வேண்டும். நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பொது மக்கள் நிரம்பி வழியும் பஸ் ஸ்டாண்ட், ரயில் நிலையம், சினிமாத் தியேட்டர் போன்ற இடங்களில் அதிக நேரம் இருக்கக் கூடாது.


சுற்றுப்புற சுகாதாரத்தைப் பாதிக்கிற மாதிரி இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கண்ட கண்ட இடங்களில் சளியைத் துப்புவதும், மூக்கைச் சிந்துவதும் கூடாது. இதனால் சுகாதாரம் கெடுவதோடு, மற்றவர்களுக்கும் நோய் பரவி விடும் அல்லவா?

சாந்தி: உண்மைதான் டாக்டர். நீங்கள் சொன்ன மாதிரி நம் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக் கொண்டாலே பல நோய்களைத் தவிர்க்கலாம் என்று என் அறிவியல் ஆசிரியர் கூடச் சொல்லியிருக்கிறார் டாக்டர்...

விவேகா: ரொம்ப நன்றி டாக்டர். விஷக்காய்ச்சல் பற்றி அதிகமாகவே தெரிந்து கொண்டோம். எங்களுக்கு விஷக்காய்ச்சல் வந்தாலும், கவலை கொள்ள மாட்டோம்.

சாந்தி: ஆமாம் டாக்டர், நீங்கள் தான் விஷக்காய்ச்சலைத் தவிர்க்க என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெளிவாகச் சொல்லி விட்டீர்களே! அதை நாங்கள் கடைப்பிடித்து விஷக் காய்ச்சலை விரட்டிவிட மாட்டோமா!

நான்: விரட்டுவதற்கு முன்னால், வர விடாமல் தடுங்கள். வணக்கம்.



கவிதை பிறந்த கதை:

எனக்கு மட்டும் சொல்லிடுவாய் பழனிவேலா



—திருச்சி பாரதன்

நாளைய தலைமுறைகளான இன்றைய குழந்தைகள் நல்லவர்களாக, வல்லவர்களாக விளங்க வேண்டும் என்று யார்தான் விரும்ப மாட்டார்கள்? தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்ற கவிஞர் திருச்சி பாரதனுக்கும் அந்த விருப்பம் — ஆசை மனத்தில் எழுகிறது.

குழந்தைகள் நல்லவர்களாக வாழ்வது சுலபமா? பொல்லாதவர்களாக வாழ்வது சுலபமா? இந்தக் கேள்விக்கு விடையாக, கவிஞர் மனத்தில் ஒரு பொம்மையும், ஒரு கட்டடமும் உருவாகிறது. அது கற்பனையாகவே மாறிக் கவிதையாக உருவெடுக்கிறது. அந்தக் கவிதை இதுதான்:

"மண்ணில் பொம்மை செய்யவே
மணியும் அதிகம் ஆகுமே
கல்லில் போட்டு உடைத்திட
காலம் தேவை இல்லையே!"



"வீட்டைக் கட்ட என்றுமே
வேண்டும் அதிக நாட்களே
வேட்டுப் போட்டுத் தகர்த்திடும்
வேலை மிகவும் சுலபமே!"

என்று எழுதிக் கொண்டே போகும் கவிஞரின் பேனா, கடைசியில் இப்படி எழுதி முற்றுப் புள்ளி வைக்கிறது —

"நல்ல பெயரைப் பெற்றிட
நாட்கள் மிகவும் ஆகுமே
பொல்லா தவனை ஆகிடப்
போதும் சிறிது நேரமே!"

இயற்கையின் படைப்பில், தீய பொருட்களிலும் நன்மை அடங்கி இருக்கிறது. கடல், பாம்பு, முட்செடி இவையெல்லாம் கவிஞரின் கண் முன் தெரிகின்றன. அவையே கவிதையாக மலர்கின்றன.



"கத்திப் பாயும் உப்புநீரின்
கடலில் முத்து உண்டு.
கொத்திக் கொல்லும் பாம்பின் கொடிய
நஞ்சில் ரத்தின முண்டு.
குத்தும் முள்ளின் செடியில் அழகு
குலுங்கும் ரோஜா உண்டு.
எத்தித் திரிவோர் இதயந் தன்னில்
ஏனோ இரக்க மில்லை?"

கடல் அலை, கரையை வந்து வந்து தொட்டுச் செல்கிறது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை கடலின் நீர் நிறைந்து இருக்கிறது. அவ்வளவு தண்ணீரும் பொங்கி எழுந்தால், உயிரினங்களின் நிலை என்ன ஆகும்? கவிஞர் கற்பனை செய்து பார்க்கிறார். அப்போது —

"கடலை நீயும் பார்த்த துண்டா
செல்லத் தம்பியே — அதன்
கரையில் நின்று மகிழ்ந்ததுண்டா
செல்லத் தம்பியே?"

என்று தமக்குத்தாமே பாடுகிறார். அந்தப் பாட்டு மேலும் தொடர்கிறது...

பொங்கிப் பொங்கி அமைதி அடையும்
செல்லத் தம்பியே — கடல்
பொறுமை யிழந்தால் என்னவாகும்
இந்த உலகமே!"

என்று கேட்டுவிட்டு, அதற்கு யாரும் அஞ்ச வேண்டாம் என்று தைரியமும் சொல்கிறார் கவிஞர் —

"எங்கும் நிறைந்த சக்தி ஒன்று
கடலைத் தடுக்குது — மக்கள்
இனிது வாழ வழியைச் செய்து
உலகைக் காக்குது!"

கவிஞர் சிறுவனாக இருந்தபோது எழுதிய பாடல் ஒன்றை இப்போது நினைவு கூர்கிறார். அதை அவரே சொல்லக் கேட்போம்:

"பள்ளிக்கூடத்தில் நான் படித்துக் கொண்டிருந்த காலம். ஒரு புதன் கிழமை வீட்டுப் பின்புறக் கொல்லைப் புறத்தில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து குளிப்பதற்காகத் தலையில் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தேன்.

"அப்போது பழனிவேலன் பற்றித் திடீரென்று ஒரு கற்பனை தோன்றியது. பழனிவேலனும் நம்மைப் போலச் சிறுவன் தானே! அவனுடன் பேசுவது போலப் பாடல் எழுத, இரு வரிகள் மனத்தில் எதிரொலித்தன.

"எண்ணெய்த் தலையுடன் பேனா, தாள்களை எடுத்தேன். கைகளைச் சோப்புப் போட்டு அலம்பிவிட்டுப் பாடல் எழுதத் தொடங்கினேன். அல்ல — பழனிவேலனைப் பாடலால் கேள்விமேல் கேள்வி கேட்டேன்!



"பாலனைப் போல் தோன்றுகின்ற பழனி
வேலா — நீயும்
பண்டாரம்போல் நிற்பதேனோ பழனிவேலா!
வேலேந்தும் கரங்களிலே பழனி
வேலா — அங்கே
வேறொரு குச்சியேனோ பழனிவேலா!"

— என்று மனக்கண்ணில் நிற்கும் பழனிவேலனைக் கேள்வி கேட்கிறார். பதில் வராததைக் கண்ட கவிஞர்,

"அப்பா உன்னைத் திட்டினாரோ பழனி
வேலா — உன்றன்
அன்னை வைப்பு செய்தனரோ பழனிவேலா!
எப்பொழுது வீடுசெல்வாய் பழனி
வேலா — விடை
எனக்குமட்டும் சொல்லிடுவாய்
பழனிவேலா!"

இப்படிக் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டே கவிதையை மேலும் தொடர்கிறார் கவிஞர்.

பேட்டி: பி. வி. கிரி

அனுபவம் தந்தது

உ. வெங்கடேசன்



முருகனும், கிருஷ்ணனும் ஒரே வகுப்பில் படித்து வருபவர்கள்.

கிருஷ்ணன் எல்லாப் பாடங்களையும் நன்றாகப் படிப்பான். நன்கு படிப்பதால் கர்வம் அதிகம். சுமாராகப் படிப்பவர்களைக் கிண்டல் செய்வான். பாடங்களை யாருக்கும் சொல்லித் தர மாட்டான். கெட்ட எண்ணமுடையவன். பிறருக்கு எந்த உதவியும் செய்ய மாட்டான்.

முருகன் படிப்பில் நடுத்தரம்தான். குறிப்பாக, கணக்கில் ரொம்ப 'வீக்'. ஆனால், விளையாட்டில் சூரன்; நீச்சல் போட்டியில் என்றும் முதலிடமே பெறுபவன், மற்றவர்களுக்குத் துன்பம் என்றால் தனக்கு வந்ததுபோல் வருத்தப்படும் இயல்புடையவன்.

கணக்குப் பரீட்சைக்காக முதல் நாள் கணக்குப் போட்டுப் பார்த்த போது, முருகனுக்குச் சில கணக்குகள் புரியவில்லை. உடனே, அருகில் இருந்த கிருஷ்ணன் வீட்டுக்குச் சென்று சொல்லித் தரும்படி கேட்டான்.

"எனக்கு ரொம்பத் தலை வலியாக இருக்கிறது. என்னால் சொல்லித் தர முடியாது" என்று பொய் சொன்னான் கிருஷ்ணன்.

பிறகு, சற்றுத் தொலைவில் இருந்த கணக்காசிரியர் வீட்டுக்குச் சென்று, முருகன் கணக்குகளைத் தெரிந்து கொண்டான்.

"ஏம்பா, உன் வகுப்பு கிருஷ்ணன் கணக்கு நல்லாப் போடுவானே, உன் பக்கத்து வீட்டில் வேறு இருக்கிறான்" என்றார் ஆசிரியர்.

"அவன் யாருக்கும் கற்றுத் தர மாட்டேங்கிறான், சார்!" என்றான் முருகன்.

ஒருநாள் ஆசிரியர்களுக்கான ஓய்வு அறையில், இருந்த கணக்காசிரியர் முருகன், கிருஷ்ணன் இருவரும் செல்வதைப் பார்த்து, இருவரையும் அழைத்து, "கிருஷ்ணா! நீ மற்ற மாணவர்களுக்கு உனக்குத் தெரிந்த பாடங்களைச் சொல்லிக் கொடு. பக்கத்து வீட்டு முருகனுடன் கணக்குகளைப் போடு. மற்றவர்களுக்குச் சொல்லித் தருவதால் உனக்கும் நன்கு புரியும்" என்றார்.

என்ன சொல்லியும் கிருஷ்ணன் மற்றவர்களுக்குச் சொல்லித் தருவதை விரும்பவில்லை. தான் சொல்லிக் கொடுத்தால் அவர்கள் அதிக மதிப்பெண் பெற்று விடுவார்களோ என்று வேறு பயம்!

ஒருநாள் கிருஷ்ணனும், முருகனும் குளத்தில் குளிக்கச் சென்றார்கள்.

முருகன் நன்றாக நீச்சல் அடித்தான்.

கிருஷ்ணனுக்கு நன்றாக நீந்தத் தெரியாத போதிலும், போட்டிக்காக நன்றாக நீச்சல் தெரியும் என்று சொல்லி, ஆழம் அதிகமுள்ள பகுதிக்குச் சென்று விட்டான். நீச்சல் நன்றாகத் தெரியாததால் நீரில் மூழ்கி ஒரு வாய் தண்ணீர் குடித்து விட்டான்.

உடனே முருகன் அங்கு சென்று கிருஷ்ணனை இழுத்துக் கரைக்குக் கொண்டு வந்து விட்டான்.

குளித்து முடித்து திரும்பும் போது, "உனக்குத் தெரிந்த பாடங்களை மற்றவர்களுக்குப் பயன்படுத்த நீ விரும்புவதில்லை, உன்னைப் போல் நானும் எனக்குத் தெரிந்த நீச்சலை, தக்க சமயத்தில் உனக்காகப் பயன்படுத்தியிருக்காவிட்டால், உன் நிலைமை என்ன ஆகியிருக்கும் என்று நினைத்துப்பார்!" என்றான் முருகன்.

"இனி எனக்குத் தெரிந்தவற்றை மற்றவர்களுக்காக நிச்சயம் பயன்படுத்துவேன். இன்றிலிருந்து நான் திருந்தி விட்டேன், என் பழைய செய்கைகளுக்காக நீ என்னை மன்னித்து விடு!" என்றான் கிருஷ்ணன்.



பாரதத் தாயின் மக்கள்

இ. பட்டாபிராமன்

நாட்டின் ஒருமைப் பாட்டினையே
நாமெல் லாரும் நாடிடுவோம்.
ஈட்டிடு வோம்நாம் இன்பமெலாம்
என்றும் அன்பால் கூடிடுவோம்.

இருந்திடு கின்றன மதங்களுடன்
இனங்கள் பலவும் உண்மைதான்.
பொருந்தும் இனிய ஒற்றுமையால்
பெற்றிட லாமே நன்மையெல்லாம்.

வேற்றுமை ஒழிக்கும் செயல்களையே
மகிழ்வுடன் ஏற்றுப் பணிபுரிவோம்.
பெருமை தந்திடும் கொள்கைகளைப்
பேணி நாமும் ஏற்றிடுவோம்.

உழைப்பைப் போன்ற உயர்செல்வம்
உண்டோ இந்த உலகமதில்?
உழைப்பை ஏற்று ஒருமையுடன்
ஊக்கத் துடனே நலம்புரிவோம்.

பாரதத் தாயின் மக்களெலாம்
ஒன்றுபட்ட மக்கள் என்றேதான்
பாரினில் நல்ல பெயரெடுப்போம்.
பாரதம் சிறக்க வழிவகுப்போம்.

அன்பு வழி

த. அருள் சிவபாலன்



"வா பாலு... அந்த அரச மரத்து நிழலில் நின்று பேசுவோம்," குமார் பாலுவை அந்த மைதானத்தின் ஓரத்தில் இருந்த அரச மரத்தின் அடியில் அழைத்துச் சென்றான்.

குமாரும், பாலுவும் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவத் தோழர்கள். குமாருக்குக் கோதண்டராமன் என்று நான்காம் வகுப்பு படிக்கும் தம்பியும், பாலுவிற்கு சந்திரன் என்று நான்காம் வகுப்பு படிக்கும் தம்பியும் இருக்கிறார்கள்.

"ஏதாவது பேசு. உம்முன்னு இருக்காதே" குமார் பாலுவைச் சீண்டினான். பாலு எதையோ யோசித்துக் கொண்டிருந்தான். அவனது கைகள் அந்த மைதானத்தில் வளர்ந்திருந்த பசும் புற்களைப் பிடுங்கிக் கொண்டிருந்தன.

"பாலு... நீ என்ன யோசிக்கிறே?"

"ஒண்ணும் இல்லே"

"எதையோ நீ என்கிட்ட மறைக்கிறாய். என்ன விஷயம்னு என்கிட்டே சொல்லு. நான் யார்கிட்டேயும் சொல்ல மாட்டேன்."

பாலு குமாரைப் பார்த்தான். குமார் பாலுவையே பார்த்தான். பிறகு பாலு விரக்தியுடன், "இந்த வாழ்க்கையே எனக்குப் பிடிக்கலே. தற்கொலை செய்துக்கலாம் போல் இருக்கு" என்றான்.

"அட, ஏண்டா பெரியவங்க பேசுற பேச்செல்லாம் பேசுறே?"

"என் தம்பி, நான் சொல்றதைக் கேட்கவே மாட்டேன்கிறான். என்னைத் தன் கால் தூசாக மதிக்கிறான். அதற்காக நான் அவனைத் திட்டியதற்கு என் அப்பா என்னை 'வெட்டிப் போடுவேன்'னு பயமுறுத்துறார்" பாலுவிற்

குக் கண்களிலிருந்து குற்றால அருவி போலக் கண்ணீர் பெருகியது.

''அட விட்டுத் தள்ளு. ஏதோ ஒரு கோபத்தில் சொல்லியிருப்பார். நான் கூட காலாண்டுப் பரீட்சையிலே கணக்குப் பாடத்திலே நூற்றுக்கு முப்பது மார்க் எடுத்து பெயிலானதுக்கு என் அப்பா என்னை, 'எங்கேயாவது போய்த்தொலை'ன்னு சொன்னார். அதுக்காக நான் போய் விஷத்தையா குடிச்சேன்?'' குமார் பாலுவிற்கு ஆறுதல் கூறினான்.

''அதில்லே குமார்... என் தம்பியைத் திட்டுவதற்கு எனக்கு உரிமை இல்லையா?''

''இப்ப என்ன செய்யச் சொல்றே? உன் தம்பி உன் சொல்லைக் கேட்டு நடக்கணும். அவ்வளவுதானே...?''

''ஆமாம் குமார்!''



''நான் ஒரு ஐடியா சொல்றேன்.''

''என்ன ஐடியா?''

''உங்க வீட்டிலே யாரும் இல்லாத நேரத்திலே உன் தம்பியைக் கூப்பிடு. அவன் வரலேன்னா, 'டேய், நான் ஒண்ணுலிருந்து அஞ்சு நம்பர் சொல்றதுக்குள்ள நீ வரணும். இல்லேன்னா முதுகுத் தோலை உரிச்சுடுவேன்'—னு பயமுறுத்து. அப்படியும், அவன் வரலேன்னா, ஒன்... டூ... த்ரீ... இப்படியே ஃபைவ் வரைக்கும் சொல்லு. அப்படியும் வரலேன்னா, இழுத்து வச்சு நாலு அடி கொடு. அப்புறம் நீ ஒண்ணுன்னு ஆரம்பிச்சியானா, ஓட்டமா ஓடி நீ சொல்ற வேலையைச் செய்வான்.''

''குமார்... இது நடக்கிற காரியமா?

''நிச்சயமா நடக்கும். என் தம்பியைக் கூட நான் அப்படித்தான் மிரட்டி வச்சிருக்கேன். நான் சொல்றதை அவன் தட்டவே மாட்டான்''

பாலுவிற்குக் குமாரின் 'ஐடியா' பிடித்திருந்தது. அந்த 'ஐடியா' மூலமே தன் தம்பியிடம் அவன் நடந்து கொண்டான். அன்று முதல் பாலுவின் தம்பி சந்திரன் மந்திரவாதிக்குக் கட்டுப்படும் குட்டிச்சாத்தான் போல பாலுவிற்குக் கட்டுப்பட்டு நடந்தான்.

பாலுவைக் கண்டாலே சந்திரனுக்குக் குலை நடுங்கியது. பாலு எதைச் சொன்னாலும் சந்திரன் அதைச் செய்து முடித்தான். ஆனால், இதற்கு முன் சந்திரன் பாலுவிடம் பழகியது போல் இப்போது பழகுவது இல்லை.

மீண்டும் ஒரு கவலை பாலுவைச் சூழ்ந்தது. குமாரைப் பார்த்துப் பேச வேண்டும் போல் இருந்தது. பாலு குமாரின் வீட்டிற்குச் சென்றான். குமார் தன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து அறிவியல் பாடத்தைப் படித்துக் கொண்டிருந்தான்.

''குமார்... குமார்...'' பாலு குமாரை அழைத்தான்.

''வா பாலு. என்ன விஷயம்?'' குமார் அறிவியல் புத்தகத்தை மூடி வைத்தான்.

''குமார்... கொஞ்ச தூரம் 'வாக்கிங்' போகலாமா? உங்கிட்டே கொஞ்சம் பேசணும்.''

''ஓ...! நான் ரெடி'' குமார் தன் தம்பியை அழைத்தான். ''கோதண்டராமா... கோதண்டராமா...''

''ம்...'' குமாரின் தம்பி கோதண்டராமன் வீட்டிலிருந்து வெளியே வந்தான்.

''ஏய்... இந்த அறிவியல் புத்தகத்தை எடுத்துப் போய் என் அலமாரியில் வை. இல்லேன்னா முதுகுத் தோலை உரிச்சுடுவேன்.'' குமார் தன் தம்பியை மிரட்டினான். அவன் தம்பி பதில் பேசாமல் அவனது அறிவியல் புத்தகத்தை எடுத்துக்கொண்டு உள்ளே சென்றான்.

குமாரும், பாலுவும் தெருவில் நடந்தனர். குமாரிடம், ''குமார்... உன்

ஊடியா ஒழுங்காகவே வேலே செய் யல்லே. நீ சொன்னது போலவே என் தம்பியை மிரட்டினேன்; விரட்டினேன்; அடித்தேன். பெட்டிப் பாம்பா அடங் கிட்டான். ஆனல், என் கிட்ட அவன் அன்பாப் பேச மாட்டேன்கிருன். என் னைக் கண்டா மிருகத்தைப் பார்ப்பது போலப் பயந்து பேசுகிருன்'' என்ருன்.

''அப்படியா...? என் தம்பியும் அப் படித்தான் இருக்கிருன்.''

''இருந்தாலும் என் தம்பி அப்படி இருப்பது எனக்குப் பிடிக்கலே. எப் போதும் என்னிடம் அன்பாப் பேசு பவன் அவன் மட்டும்தான். அவனே என்கிட்டே பேசப் பயப்படுகிருன்.''

''அதெல்லாம் பார்த்தால் ஒண் ணும் நடக்காது. மனசைக் குழப்பிக் காதே. அடுத்த வாரம் அரையாண்டுப் பரீட்சைக்கு நல்லாப் படி. நான் வரட் டுமா?'' குமார் பாலுவிடம் விடை பெற்றுச் சென்ருன்.



மறுநாள்.

குமாரும், பாலுவும் பள்ளிக்குச் சென்றனர். பள்ளி வகுப்புகள் தொடங் கின. குமாரும், பாலுவும் ஒரே வகுப் பைச் சேர்ந்தவர்கள். அவர்களது வகுப்பின் முதல் ப்ரியட் தமிழ்.

தமிழாசிரியர் பாடத்தைத் தொடங் கிஞர்.


''மாணவர்களே... இன்றைக்கு 'அன்பே வெல்லும்' என்ற பாடத்தைப் பார்ப்போம். பெரிய பெரிய சக்தி களால் செய்ய முடியாத காரியத்தைச் செய்யக் கூடிய திறன் படைத்தது அன்பு. அப்படிப்பட்ட அன்பு மனிதர் களுக்கும், விலங்குகளுக்கும், பறவை களுக்கும் இருக்கின்றது. ஆனல், அந்த அன்பை முறையாகப் பயன்படுத் தக் கூடிய ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே இருக்கிறது. ஒருவனை அடித்து, உதைத்து மிரட்டிக் கட்டுப்படுத்துவதை விட அன்பாக, அன்பு வழியில் கட்டுப் படுத்துவது மிகவும் மேலானதாகும். ஒருவனை மிரட்டிக் கட்டுப்படுத்தும்போது அவனிடமிருந்து விரக்தியும், குரோத மும்தான் வெளிப்படுகின்றன. ஆனல், அவனை அன்பாகக் கட்டுப்படுத் தும் போது அவனிடமிருந்து அடக்க மும், மகிழ்ச்சியும், அன்பும் வெளிப் படுகின்றன. கண்ணுடி முன் நின்று நாம் முகத்தைக் கொடூரமாக வைத் துக் கொண்டால், கண்ணுடியில் தெரி யும் பிம்பமும் கொடூரமாக இருக்கும்; முகத்தைச் சாந்தமாக, புன்னகையுடன் வைத்துக் கொண்டால், கண்ணுடி உருவமும் புன்னகையுடன் இருக்கும். அது போல நாம் மற்றவர்களை அன் புடனும், சாந்தமுடனும், புன்னகையு டன் பார்க்கும் போதும், பழகும் போதும் அவர்கள் தாளுக நமது அன் பிற்குக் கட்டுப்படுவார்கள்.''

தமிழாசிரியரின் விளக்கவுரை பாலு வைப் பெரிதும் மாற்றியது. பாலுவின் நெஞ்சில் ஆசிரியர் கூறியது பசுமரத் தாணி போல் பதிந்தது. அவனை அறி யாமல் அவனது கண்களில் கண்ணீர் பெருகியது.

''இத்தனை நாளும் என் தம்பியை எப்படியெல்லாம் மிரட்டினேன். அவ னிடம் நான் அன்பாகப் பழகவில்லை. அவனும் என்னிடம் அன்பாகப் பேச வில்லை. இன்று தமிழாசிரியர் கூறியது என் மனத்தில் கல் மேல் பொறித்த எழுத்தாகப் பதிந்து விட்டது'' பாலு தன் வீட்டை அடைந்ததும் தன் தம்பி சந்திரனை அழைத்தான்.

சந்திரன் பயந்தபடி பாலுவின் முன் வந்து நின்ருன்.

''சந்திரா... பயப்படாதே... என்



னைப் பார்த்து ஏன் பயப்படறே...?'' பாலு சந்திரனிடம் ஆசையுடன் கேட்டான்.

சந்திரனுக்கு ஒரே ஆச்சரியம். ஏனெனில், இதற்கு முன்பு பாலு இப்படி அன்பாகப் பேசியது கிடையாது. சந்திரன் பயத்துடன் பதிலளித்தான்.

''வந்து... வந்து... நீ ஒன்... டூ... த்ரீ...ஃபோர்...ஃபைவ்—னு சொல்வே. அப்புறம் என்னை நீ அடிப்பே...''

பாலு வாய் விட்டு அழுதான்.

''சந்திரன்... என்னை மன்னிச்சுடுடா... இனிமே உன்கிட்டே ஒன் டு திரி ஃபோர் ஃபைவ் சொல்லவும் மாட்டேன். உன்னை அடிக்கவும் மாட்டேன். இத்தனை நாளும் நான் உன்னை மிரட்டினேன்; அடித்தேன். நீ எனக்குப் பின்னாடி பிறந்த சின்னவன்தான். இருந்தாலும், உன் காலில் விழுந்து கேட்டுக்கிறேன். என்னை மன்னிச்சுடு...''

பாலு சந்திரனின் காலைப் பிடித்துக் கொண்டு அழுதான். சந்திரன் ஏதும் அறியாமல் நின்றான். இந்தக் காட்சியைக் கண்ட பாலுவின் பெற்றோர், பாலு இப்படி மாறக் காரணமானது எது என்று தெரியாமல் விழித்தனர்.

பாலுவின் கண்களில் நீர் ததும்ப சந்திரனைக் கட்டித் தழுவினான். சந்திரனின் கன்னங்களில் முத்தமாரி பொழிந்தான். ''சந்திரன்... இனிமேல் நான் எப்போதும் உன்கிட்டே அன்பாப் பழகுவேன். ஒருபோதும் உன்னை நான் திட்ட மாட்டேன்''.

சந்திரனும், பாலுவும் அன்பு மழையில் நனைந்தனர். அப்போது பாலுவின் கையிலிருந்த தமிழ்ப் புத்தகம் நழுவிக் கீழே விழுந்தது. அப்போது அடித்த காற்றில் அந்தப் புத்தகத்தின் பக்கங்கள் விலகி 'செய்யுள் பகுதி' தெரிந்தது.

அந்தச் செய்யுள் பகுதியில் கீழ்க் கண்ட திருக்குறள் பளிச்சென்று தெரிந்தது:

''அன்பிற்கும் உண்டோ அடைக்குந்
தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.



கைரே பைரே

ஒரு ஊரில் சைரே, கைரே, பைரே என மூன்று சகோதரிகள் இருந்தனர். சைரே சாதாரண மனப் போக்குள்ளவள். கைரேவும், பைரேவும் விசித்திர குணமுடையவர்கள். அவசரக் குடுக்கைகள். எந்தக் காரியத்தையும் முன் கூட்டியே செய்ய வேண்டுமென முன் யோசனையில்லாமல் செய்பவர்கள். சைரே இவர்களைத் திருத்த முயன்று தோல்வியே கண்டாள்.

இவ்வாறிருக்கையில், சைரேவுக்குத் திருமணமாகிப் புக்ககம் சென்று கணவருடன் வாழ்ந்து வந்தாள். அவள் கணவர் ஒரு வக்கீல். நாட்கள் சென்றன. சைரே கருவுற்றாள். சகோதரிகள் அது சமயம் தன்னுடன் இருந்தால் உதவியாக இருக்குமென நினைத்தாள். அவர்கள் திருந்தி இருப்பார்களென எண்ணி அவர்களுக்குக் கடிதம் போட்டாள்.

கடிதம் கண்ட கைரேவும், பைரேவும் மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தனர். உடனே கிளம்பி இருவரும் சைரே வீட்டிற்கு வந்தனர். சைரே சகோதரிகளை மகிழ்ச்சியுடன் வரவேற்றாள். அன்றிரவு கைரேவும், பைரேவும் சாமான்கள் வைக்கும் அறையில் படுத்துக் கொண்டனர்.

திடீரென கைரே எழுந்து கொண்டு பைரேவை எழுப்பினாள். "ஏண்டி பைரே, இப்படி நிம்மதியாகத் தூங்குகிறாயே! நாம் இதற்கா ஊரிலிருந்து வந்தோம்? நாளையே நம் சைரேக்கு ஒரு குழந்தை பிறந்தது என்று வைத்துக் கொள். அச் சமயம் நமக்குக் கையும் ஓடாது; காலும் ஓடாது. நம் மாப்பிள்ளையோ வக்கீல். புண்யாஜனத்துக்கு நிறையப் பெரிய மனிதர்கள் வருவார்கள். வா, நாம் இப்பொழுதே புண்யாஜனத்துக்குச் சமைத்து விடு

கி. சீனிவாசன்



காந்தி கொடுத்த பட்டம்

நம் நாட்டுத் தலைவர்களுள் சர்தார் வல்லபாய் பட்டேலும் ஒருவர் என்பது உங்களுக்குத் தெரியும். அவருக்கு 'சர்தார்' என்னும் பட்டத்தைக் கொடுத்தவர் யார் தெரியுமா? மகாத்மா காந்திதான். ஒரு சமயம் பர்தோலி என்ற இடத்தில் விவசாயிகள் வரிகொடா இயக்கம் நடத்தினர். சாட்டையையும் துப்பாக்கியையும் நீட்டிக் கொண்டு ஆங்கிலேயர் அவர்களைத் துன்புறுத்தினர். பட்டேல் அவ்வியக்கத்தை முன்னின்று நடத்தி வெற்றி கண்டார். காந்திஜி அவரைப் பாராட்டி, 'படைத் தலைவர்' என்னும் பொருள்படும் 'சர்தார்' என்ற பட்டத்தை வழங்கினார். பர்தோலியில் நடைபெற்ற அந்த இயக்கமே பின்னர் நடந்த உரிமைப் போர்களுக்கெல்லாம் வழி காட்டியாய் அமைந்தது.

— ஆர்.எஸ். சுப்பிரமணியன்.

வோம்'' எனக் கூறினாள்.

''ஆமாண்டி நீ சொல்வது சரிதான்'' என பைரே கூறினாள். இருவரும் அரக்கப் பரக்கத் தோட்டத்திலுள்ள காய்கறிகளை எல்லாம் பறித்து சைரே வாங்கி வைத்திருந்த வருடாந்திர சாமான்களையெல்லாம் போட்டுப் பெரிய விருந்து தயாரித்து விட்டனர். சாம்பார் மணமும், பாயச மணமும் சைரேவை எழுப்பி விட்டன. சைரே ஓடி வந்தாள். ''யாருக்கு விருந்து? என்ன விஷயம்?'' எனக் கேட்டாள்.

அவர்களோ, ''சைரே, நாளை உனக்குக் குழந்தை பிறந்து அதற்குப் புண்யாஜனம் என்றால், நிறைய பேர் வருவார்கள். அப்போது அவர்களுடன் பேசாமல் சமைத்துக் கொண்டிருந்தால் நன்றாய் இருக்குமா? அதுதான் முன் கூட்டியே சமைத்து விட்டோம்'' எனக் கூறினர். சகோதரிகள் செய்த காரியத்தைப் பார்த்து அழுவதா, சிரிப்பதா என்றே அவளுக்குத் தெரியவில்லை.

மறுநாள் சகோதரிகள் இருவரையும் சைரே வேறு அறையில் படுக்கச் சொன்னாள். அந்த அறையில் கைரேயின் துணி மணிகளும் அவர் கணவரின் ஷர்ட், கோட்டு, வேஷ்டி ஆகியவையும் இருந்தன.

அன்றும் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி தூங்காமல் உட்கார்ந்திருந்தனர். பைரே, கைரேவைப் பார்த்து, ''ஏண்டி நாம் சும்மாதானே இருக்கிறோம். நாளை சைரேவுக்குக் குழந்தை பிறந்தால் அதற்குச் சட்டை வேண்டாமா? சும்மா இருக்காமல் குழந்தைக்குச் சட்டைகளாவது தைத்து வைப்போம்'' எனக் கூறி, இருவரும் சைரேவின் புடவை, அவள் கணவரின் கோட்டு, ஷர்ட்டு, வேஷ்டி யாவற்றையும் கிழித்துச் சிறிய சிறிய சட்டைகளாகத் தைத்து விட்டனர்.


மறுநாள் சைரேயின் கணவர் கோர்ட்டுக்குச் செல்ல, சட்டையையும், கோட்டையும் தேடிய போது எல்லாம் சிறிய சிறிய சட்டைகளாக இருப்பது கண்டு அவருக்குப் பெருத்த கோபம் உண்டாயிற்று. சைரே கணவரைச் சமாதானப்படுத்தினாள்.

அன்றிரவு இருவரையும் கொல்லைத் தாழ்வாரத்தில் படுக்கச் சொன்னாள். படுத்துக் கொண்டிருந்த சகோதரிகள் இருவரும் ஏதோ யோசனை செய்தவர்களாய், கிணற்றுப் பக்கம் சென்றனர். அக் கிணறோ கைப்பிடிச் சுவர் இல்லாதது.

''இந்தக் கிணற்றுக்குச் சுற்றுச் சுவர் இல்லையே! சைரேயின் குழந்தை தவழ்ந்து வந்து கிணற்றில் விழுந்து இறந்து விடுமே!'' என கைரே 'ஓ' என அழுதாள். அதைக் கேட்ட பைரேவும், ''குழந்தை போயிடுமே!'', என ஆரம்பித்து, ''குழந்தை போயிடுத்தே! ஐயோ, குழந்தை போயிடுத்தே!'' என ஒப்பாரி வைத்தாள்.

சத்தம் கேட்டுக் கைரே ஓடி வந்தாள். சகோதரிகள் இருவரும் கிணற்றைச் சுற்றி நின்று கொண்டு, வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு, ''குழந்தை போயிடுத்தே! ஐயோ குழந்தை போயிடுத்தே!'' என ஒப்பாரி வைப்பதைக் கேட்டு மிகுந்த ஆத்திரம் அடைந்தாள்.

''இவர்களைத் திருத்த முடியாது. இவர்களால் நமக்குக் கஷ்டம்தான்'' என, முதலில் இருவரையும் ஊருக்கு அனுப்பி விட்டு நிம்மதியாக வாழ்ந்தாள். (என் பாட்டி சொன்ன கதை.)



ரவி, காரை 'எடுத்துக்' கொண்டு வீட்டுக்குப் 'பறந்தான்'
கதாசிரியரின் வாக்கியங்களுக்குப் பொருள் புரியாமல், நமது ஓவியர் அவசரத்தில் படம் வரைந்து விட்டார். . .
....அந்த இருவரின் 'குடுமியும்' ராமுவின் கையில் சிக்கியிருந்தது....
அப்பாவுக்குப் பயந்து கொண்டு ராஜு 'வாலைச் சுருட்டிக் கொண்டு' உட்கார்ந்தான்.
கமலாவுக்கு 'ரெட்டை நாக்கு' (நம்மிடம் ஒன்றும் பிறரிடம் ஒன்றும் சொல்வாள்)
அவனுக்குக் 'கை கொஞ்சம் நீளம்' எதைப் பார்த்தாலும் திருடி விடுவான்.
செய்தியைக் கேட்டவுடன் அவன் அப்படியே 'உடைந்து போனான்.'

நிகேதன் சொன்ன பதில்

— டி. ஜானகி —

தன் அருமைப் பேரன் நிகேதனிட மிருந்து வந்த கடிதத்தைப் பார்த்ததும் ராஜசேகருக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. தன் மனைவியைக் கூப் பிட்டு, "உன் பேரன் வர்ற திங்கள் கிழமை பம்பாயிலிருந்து வரான். பரீட்சை எல்லாம் முடிஞ்சு லீவு விட் டாச்சாம்" என்றார்.

பிறகு தன் வீட்டில் வேலை பார்க் கும் வேலப்பனிடம் கூறினார். அது மாத்திரமில்லை. நிகேதனின் நண்பன் ரத்தினம், ராஜா, ராமு, மணி எல் லோரிடமும் கூறினார். எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி, இரண்டு வருடங்களுக் குப் பிறகு அவனைச் சந்திப்பதில்.

நிகேதன் ஆறாவது வரை தாத்தா வீட்டில்தான் படித்துக் கொண்டிருந் தான். பிறகு அவனுடைய தந்தை கேச வனுக்கு காஷ்மீரத்திலிருந்து டெல் லிக்கு மாற்றல் கிடைத்து விட்டதால் மகனை டில்லிக்கு அழைத்துக் கொண்டு விட்டார். இரண்டு வருடங் கள் கழித்து இப்பத்தான் நிகேதன் சென்னையிலுள்ள தாத்தா வீட்டிற்கு வருகிறான்.

அன்று திங்கட்கிழமை. காலை ஒன் பது மணிக்கு நிகேதன் தாத்தா வீட் டிற்குள் நுழைந்தான். தாத்தா பேரனை அப்படியே கட்டிக் கொண்டார். தன் காலில் விழுந்து வணங்கிய பேரனை ஆனந்தக் கண்ணீரோடு ஆசிர்வதித் தாள் அவன் பாட்டி.

இரண்டு வருடங்களில் நிகேதனின் உடலில் மட்டும் வளர்ச்சி இல்லை; அறிவிலும் நல்ல முன்னேற்றம் தெரிந் தது. ராஜசேகர் ஓய்வு பெற்ற இரா ணுவ அதிகாரி ஆனதால் பேரனுடன் இந்தியில் உரையாடினார். பஞ்சாபி பாஷையில் பேசினார். ஆங்கிலத்தில் வாத விவாதம் செய்தார். நிகேதன் தமிழ் மொழி போன்று மூன்று மொழி களிலும் தேர்ச்சி அடைந்திருப்பதைப் பார்த்து பூரித்துப் போனார்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. நிகேதன் தன் பழைய நண்பர்களுடன் உட்கார்ந்து கொண்டு டில்லியைப் பற்றி, அங்கு பார்க்க வேண்டிய இடங் களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந் தான். வேலப்பன் உட்பட அவன் நண்பர்கள் அனைவரும் அவன் கூறு வதையே சுவாரசியமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். இடையிடையே அவர்கள் கேட்ட கேள்விகளுக்கும் அவன் பதில் சொல்லிக் கொண்டிருந் தான்.


அந்தச் சமயம்—

அவன் தாத்தா ராஜசேகர் அங்கு வந்தார். தன் பேரனின் புலமையை மற்றவர்கள் மெச்ச வேண்டும், அவ னுடைய ஆங்கில அறிவைக் கண்டு நண்பர்கள் அதிசயிக்க வேண்டும். இந்தியில் பேசுவதைக் கண்டு திகைக்க வேண்டும். பஞ்சாபி மொழி யில் பேசுவதை பிரமிப்புடன் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். எனவே, நிகேதனைப் பார்த்து, "க்யா தும்னே தில்லி மேம், ஹமாரே ப்ரதான் மந்த்ரீகோ தேக்கா ஹை?" (டில்லியில் நீ நம்முடைய பிரதமரைப் பார்த்திருக் கிறாயா?) என வினவினார்: இதற்கு அவன் தமிழிலேயே "ஒரே ஒரு முறை பார்த்திருக்கிறேன்" என்று பதில் சொன்னான். இதேபோன்று மேலும் தாத்தா ஆங்கிலத்தில், இந்தியில், பஞ் சாபியில் கேட்ட கேள்விகளுக்கு அவன் தமிழிலேயே பதில் சொன்னான்.

நண்பர்கள் முன்னிலையில் தன்னி டம் தமிழிலேயே உரையாடியது தாத் தாவுக்கு ஏமாற்றமாக, ஏன்? கொஞ் சம் எரிச்சலாகக் கூட இருந்தது. எனவே, செய்தித்தாளை எடுத்துக் கொண்டு படிப்பது போல் பாவனை செய்தார்.

நிகேதனின் நண்பர்கள் சிறிது நேரத்தில் சாப்பிட வீட்டிற்குச் சென்று விட்டனர்.

அங்கு தாத்தாவும் பேரனும்தான். தாத்தா அவனைப் பார்த்து, "நிகேத்



உன்னிடம் ஒரு கேள்வி கேட்கப்போகிறேன்,'' என்றார்.

''என்கிட்டேயா? தாராளமாகக் கேளுங்க'' என்றான் கண்களை அகல விரித்தபடி.

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நான் இங்கிலீஷ்லே, இந்தியிலே, பஞ்சாபியிலே கேட்ட கேள்விக்கெல்லாம் நீ ஏன் தமிழிலேயே பதில் சொன்னே? உன் அறிவுத் திறமையை உன் நண்பர்கள் பார்த்துப் புகழ வேண்டாமா? அதிசயப்பட வேண்டாமா?''

ஒரு விநாடி தாத்தாவின் முகத்தையே கூர்ந்து பார்த்த நிகேதன் சொன்னான்.

''தாத்தா! மொழிகள் பலவாக இருக்கலாம். ஆனா, பொதுவா மொழிங்கறது நம் கருத்துக்களை வெளிப்படுத்தற ஒரு வாகனம். மற்றவர்கள் புரிந்து கொள்ள உதவும் சாதனம். பேசறவங்களோட, கேட்கறவங்களோட கருத்துக்களை இணைக்கும் பாலம். அப்படிப்பட்ட மொழியை, அந்த மொழியைத் தெரிஞ்சவங்ககிட்டேத்தான் பேசணும். இங்கு இருக்கும் என் நண்பர்களுக்கெல்லாம் தமிழ் தான் நன்றாகப் புரியும். அவங்ககிட்டே நான் வேறு மொழியில் பேசினால், நான் சொல்றதை அவங்களாலே புரிஞ்சுக்க முடியாது. இரண்டாவது, அவங்க முன்னாடி நீங்க கேட்ட கேள்விகளுக்கு இந்தியிலோ, இங்கிலீஷிலோ பஞ்சாபியிலோ நான் பதில் சொன்னா என்ன நெனச்சுப்பாங்க? எனக்கு மண்டைக் கர்வம் இருக்குன்னு சொல்லுவாங்க. அவங்களைப் பத்தித்தான் நீங்களும், நானும் பேசறோம்... அப்படின்னு தப்பா நெனச்சுக்கலாம் இல்லையா? அவங்களை வச்சுக்கிட்டு, அவங்களுக்குப் புரியாத மொழியில் பேசுவது நாகரீகமான செயலாகுமா? அவங்க மனசு புண்படாமல் இருக்கத்தான் நான் தமிழிலேயே உங்களுடன் பேசினேன். தப்பா இருந்தா மன்னிச்சுடுங்க, தாத்தா.''

தாத்தாவால் பதில் சொல்ல முடியவில்லை. இந்தப் பண்பாடு எனக்குத் தெரியாமல் போய் விட்டதே என்று எண்ணியபடி தனக்குப் பாடம் புகட்டிய பேரனை பெருமையோடு பார்த்தார்.



வேண்டாம் வேலை நிறுத்தம்

இரா. வசந்தராசன்

அவசர அவசரமாக உடை உடுத்திக் கொண்டு வேலைக்குக் கிளம்ப மாதவன் சைக்கிளை எடுத்த போது தான் அந்த அதிர்ச்சி தரும் செய்தி வந்தது!

அவசரமாக வீட்டுக்குள் நுழைந்த அந்தப் பள்ளிக்கூடப் பையன், "சார், உங்க பையன் முரளி ஸ்கூலுக்குள்ளே எந்த பையனையும் விடமாட்டேன்னு ஆர்ப்பாட்டம் பண்றான். நீங்க கொஞ்சம் வந்து உங்க மகனுக்குப் புத்திமதி சொன்னால் நல்லது", என்றான் பரபரப்பான குரலில்.

மாதவன் முதல் தடவையாக அதிர்ந்தார்.

தன்னுடைய மகன் முரளியா? பத்தாம் வகுப்பிலேயே முதல் ரேங்க் எடுக்கும் தன் மகனா? இருக்காது. இருக்கவே இருக்காது.

"தம்பி, என் மகன் அப்படியெல்லாம் செய்ய மாட்டானே. வேறு பையன் யாராவது இருக்கும்."

"இல்லே சார். உங்க பையன் முரளியேதான். வேணுமானால் நீங்க இப்பவே என்கூட வாங்க."

மாதவன் சைக்கிளில் ஏறிக் கொள்ள அந்தப் பையன் பின்னால் தொற்றிக் கொண்டான்.

பத்து நிமிடப் பயணம்.

பள்ளி கேட்டுக்கு வெளியே மாணவர்கள் கும்பல் கும்பலாக நின்று கொண்டிருந்தார்கள்.

"நண்பர்களே! நாம் இந்த ஆறு மாதமாக நமக்குக் குடி தண்ணீர் வசதி செய்துதர வேண்டும் என்று கேட்கிறோம். ஆனால், யாரும் செய்து தருகிற மாதிரி தெரியவில்லை. எனவே, நம்முடைய கோரிக்கை நிறைவேறுகிற வரை நாம் பள்ளிக்குப் போகக் கூடாது. மீறி யாராவது போனால், அவர்களைப் போக விடமாட்டோம்" என்று உரத்த குரலில் கத்திக் கொண்டிருந்த, அந்தப் பையனை நன்றாக உற்றுப் பார்த்த மாதவனுக்குத் திக்கென்றது.

அவருடைய மகன் முரளியே தான்!

தாயில்லாத பையன் என்பதால், பாராட்டிச் சீராட்டி வளர்க்கும் முரளியா இந்த மாதிரி நடந்து கொள்கிறான்? மாதவனின் முகம் கோபத்தால்கொஞ்சம்கொஞ்சமாகச்சிவக்க ஆரம்பித்தது.

மாணவக் கூட்டத்தைக் கலைத்துக் கொண்டு, மகனை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தார்.

"டேய், நீ எதுக்கு ஸ்கூலுக்கு வர்றே? படிக்கிறதுக்கா? இல்லே, இந்த மாதிரி படிக்க வர்ற பசங்களைக் கெடுக்கறதுக்கா?"

"அப்பா, இது ஸ்கூல் விஷயம். மேலும் நான் செய்யுறது நல்லதுக்குத்

தான்.''

''எதுடா நல்லது? இந்த மாதிரி ஸ்ட்ரைக் செய்யுறதா? ஒரு நாள் ஸ்ட்ரைக் செஞ்சா எவ்வளவு பாதிப்பு இருக்குன்னு உனக்குத் தெரியுமா? உங்களுக்கு ஏதாவது பிரச்சினை இருந்தா, ஹெட் மாஸ்டர் கிட்டே பேசித் தீர்த்துக்க வேண்டியது தானே! அநாவசியமா இந்த மாதிரியெல்லாம் செய்யாதீங்க.''

''அப்பா, நீங்க என்ன சொன்னாலும் சரி. எங்க ஸ்ட்ரைக்கைக் கைவிட மாட்டோம்.''

மாதவனின் முகம் சிவந்து விட்டது.

''ஏண்டா, அயோக்கிய ராஸ்கல், உனக்கு எவ்வளவு திமிர் இருந்தால், என்னை எதிர்த்துப் பேசுவே!'' என்று சொல்லிக்கொண்டே, முரளியின் கன்னத்தில் மாறி மாறி அறைய ஆரம்பித்தார் மாதவன்.

இரண்டு நிமிடங்கள் பறந்து விட்டன.


''மாணவர்களே, நீங்க ஸ்கூலுக்குப் போய் ஒழுங்காப் படிங்க. இந்த ராஸ்கல் சொல்றதைக் கேக்காதீங்க. உங்களை நம்பித்தான் நம்ப நாடு இருக்குது. அதை மறந்துடாதீங்க. நீங்க போங்க.''

மாணவர்கள் கேட்டைத் திறந்து கொண்டு ஸ்கூலுக்குள் நுழைய ஆரம்பித்தார்கள்.

மாலை மணி ஐந்து.

ஒலிம்பிக் போட்டிகளில் ஒலிம்பிக் சுடரைப் பொதுவாக ஆண்கள் தான் ஏற்றுவது வழக்கம். ஆனால் 1968ம் ஆண்டில் மெக்சிகோ நகரில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி துவங்கிய போது என்ரிக்யூடா பேசிலோ என்ற பெண் ஒலிம்பிக் சுடரை ஏற்றினார். ஒலிம்பிக் சுடரை ஏற்றிய முதல் பெண் அவர் தான்!

— பாகன்.



மாதவனுக்கு மனம் கஷ்டமாக இருந்தது. என்ன இருந்தாலும் முரளியை அப்படிக் கண் மண் தெரியாமல் அடித்திருக்கக் கூடாது.

வெளியே காலடிச் சப்தம் கேட்டது.

முரளிதான்!

வீட்டுக்குள் நுழைந்த முரளியின் கண்கள் கலங்கி இருந்தன. புத்தகப் பையைக் கீழே வைத்து விட்டு, துண்டை எடுத்துக் கொண்டு பாத்ரூம் சென்று விட்டான். மாதவனிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

இரண்டு நாட்கள் பறந்து விட்டன.

முரளி, தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருந்தான். அப்பாவிடம் எதுவும் அநாவசியமாகப் பேசவில்லை. மகன் பேசாததால், மாதவன் ஏகப்பட்ட வருத்தத்தில் மூழ்கி இருந்தார்.

இன்று முரளியிடம் பேசி எப்படியும் அவனைச் சமாதானப்படுத்தி விட வேண்டும் என்று மாதவன் நினைத்துக் கொண்டிருந்தபோது, கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது.

மாதவன் கதவைத் திறந்தார்.

பெருமாள், நடராஜ் — அவருடன் வேலை செய்பவர்கள் வெளியே நின்று கொண்டிருந்தார்கள்.

''வாங்க, வாங்க. உட்காருங்க. என்ன விஷயம்?''

''உங்களை நம்ம யூனியன் லீடர் உடனே வரச் சொன்னார்.''

''என்ன விஷயம்?''

''உங்க கிட்டே நேரிலே சொல்றேன்னு சொன்னார்.''

''சரி, அதுக்கென்ன வர்றேன்'', என்று சொல்லிக் கொண்டே மாதவன் சட்டையைப் போட ஆரம்பித்த போது, ''அப்பா, ஒரு நிமிஷம் உள்ளே வாங்க,'' என்று முரளி கூப்பிட்டான்.

மாதவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இரண்டு நாட்களாக எதுவுமே பேசாமல் இருந்த முரளி இப்பொழுது எதற்கு உள்ளே கூப்பிடுகிறான்? மாதவனுக்கு எதுவும் புரியவில்லை.

''ஒரு நிமிஷம் பேசிக்கிட்டு இருங்க. வந்துடறேன்,'' என்று சொல்லிவிட்டு அறைக்குள் நுழைந்தார்.

''என்ன முரளி? என்ன விஷயம்?''

''உங்க யூனியன் லீடர் உங்களை எதுக்குக் கூப்பிட்டிருக்கார்னு எனக்



குத் தெரியும்.''

மாதவனுக்கு 'ஷாக்' அடித்தது போல இருந்தது.

''எதுக்குக் கூப்பிட்டிருக்கிறார்?''

''வருகிற திங்கட் கிழமையிலேயிருந்து உங்க பேக்டரியிலே நீங்களெல்லாம் ஸ்ட்ரைக் ஆரம்பிக்கப் போறீங்க. விசுவாச ஊழியர்கள் யாராவது வேலைக்குப் போனால் அவங்களைத் தடுத்து நிறுத்தணும். அதுக்குத் தகுதியான ஆள் நீங்கதான்னு உங்க யூனியன் லீடர் நினைக்கிறார். அதனாலேதான் உங்களுக்கு அழைப்பு வந்திருக்கு.''

''இந்த விஷயம் உனக்கு எப்படித் தெரியும்?''

''அன்னைக்கு மாணவர்களை ஸ்கூலுக்குப் போக விடாமே நான் தடுத்தேன் பாருங்க. அதுக்கு முதல் நாள் நீதி போதனை பீரியடுக்கு எங்க ஹெட்மாஸ்டர் வந்தார். மத்த நாட்டு பேக்டரிங்களைப் பற்றியும், அதுங்களிலே வேலை செய்கிற தொழிலாளர்களைப் பத்தியும் நிறைய சொன்னார்.''

''என்ன சொன்னார்?'' ஆச்சரியத்தோடு கேட்டார் மாதவன்

''ஸ்ட்ரைக் செய்யணும்னு நினைச்சாங்கன்னா, நம்ப நாடு மாதிரி வேலைக்குப் போகாம இருந்து நேரத்தை வீணடிக்கிறதில்லை. 'ஸ்ட்ரைக்' அப்படின்னு எழுதப்பட்ட பேட்சுகளை அணிஞ்சுக்கினு வழக்கமான வேலையைச் செய்வாங்களாம். வேறு சில நாடுகளிலே, தங்களுடைய கோரிக்கைங்களை வலியுறுத்த, எட்டு மணி நேரம் வேலை செய்யுறதுக்குப் பதிலா ஒன்பது மணி நேரம் வேலை செய்வாங்களாம். எந்தக் காரணத்தை முன்னிட்டும், வேலைக்குப் போகாமே நேரத்தை வீணடிச்சி உற்பத்தியைக் குறைக்க மாட்டாங்களாம். ஸ்ட்ரைக் என்ற பேரிலே மனித சக்தி அதிகம் விரயம் ஆகிற நாடு' நம்ப நாடுதான்னு எங்க ஹெட்மாஸ்டர் சொன்னார்.''

''இப்ப அதுக்கு என்னா?''

''சொல்றேம்பா. அன்னைக்கு நீதி போதனை பீரியடு முடிஞ்சு நானும் என் நண்பர்கள் நாலைந்து பேரும் வீட்டுக்கு வரும்போது, இப்ப வந்திருக்காங்களே அந்த இரண்டு பேரும் பேசிக்கினு போனது எங்க காதிலே

விழுந்தது. எல்லாரையும் வேலைக்குப் போகாம தடுத்து நிறுத்த நீங்கதான் லாயக்குன்னு யூனியன் லீடர் சொன்னதாப் பேசிக்கிட்டே போனுங்க. நாங்க கூர்ந்து கேட்டுக்கிட்டே வந்தோம். எல்லா விஷயமும் புரிஞ்சிடிச்சு. உடனே எங்க ஹெட்மாஸ்டர் கிட்டப் போய் இந்த விஷயத்தைச் சொல்லி, அவருடைய அனுமதியோடதான் அன்றைக்கு ஸ்ட்ரைக் செய்யற மாதிரி நடிச்சோம். அன்றைக்கு உங்க கிட்ட வந்து நான் மாணவர்களை ஸ்கூலுக்கு போகாமே தடுத்து நிறுத்தறேன்னு ஒரு பையன் சொன்னனே, அந்தப் பையனை உங்ககிட்டே அனுப்பினதே நான்தான்.''

நீண்ட பேச்சால் முரளியின் குரல் கரகரத்தது.

''இப்ப சொல்லுங்கப்பா ஸ்ட்ரைக்கிலே நீங்க கலந்துக்கினு, மத்தவங்களை வேலைக்குப் போக விடாமல் தடுத்து, உற்பத்தியைக் குறைச்சு, ஏற்கெனவே வறுமையிலே இருக்கிற நம்ப நாட்டை இன்னும் வறுமைக்குத் தள்ளப் போறீங்களா? சாதாரணமாச் சொன்னால் நீங்க ஏத்துக்க மாட்டீங்கன்னுதான். அன்றைக்கு ஸ்ட்ரைக் செய்யற மாதிரி நடிச்சு உங்ககிட்டே ஏகப்பட்ட அடி வாங்கினேன். நல்லா யோசிச்சு உங்க முடிவு என்னன்னு சொல்லுங்கப்பா.

இரண்டு நிமிடம் நிசப்தம்.


மாதவன் எதுவும் பேசவில்லை. அறையை விட்டு அமைதியாக வெளியே வந்தார்.


''யூனியன் லீடர்கிட்டே போய் அவரைப் பாக்கிறதுக்கு நான் வர முடியாதுன்னு சொல்லிடுங்க,'' என்றார், அவருக்காகக் காத்துக் கொண்டிருந்த பெருமாளிடமும் நடராஜிடமும்.


இருவரும் அவரை அதிர்ச்சியோடு பார்த்தார்கள்.


முரளியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிய ஆரம்பித்தது!

ஓவியராகலாம்







மூன்று மீன்கள்
ஓவியர்- S.K.ராமானுஜம் (ராணு÷)
ஒரு குட்டையில் மூன்று மீன்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன.
அந்த மூன்று மீன்களில் இது மிகவும் சுறு சுறுப்பானது
இதன் பெயர் வரு முன்- -காப்போன்.
இது மந்த புத்தியுள்ள மீன் இதன் பெயர் வந்த பின்- -காப்போன்
இது மிகவும் சோம்பேறியான மீன் இதன் பெயர் வந்த பின்னும்- -காவாதான்
ஒரு நாள் குட்டையின் அருகே இருவர் பேசிக் கொண்டிருப்பதை... வரு முன் காப்போன் கூர்ந்து கவனித்தது.
நாளைக்கு இக்குட்-டையைத் தூர்ந்து விட வேண்டும்.
உடனே நம் நண்பர்களுக்கு இதைத் தெரிவிக்க வேண்டும்
நண்பர்களே! நமக்கு ஆபத்து வந்து விட்டது. ஆகையால் நாம் இக்குட்டையிலிருந்து உடனே வெளியேற வேண்டும்


வரு முன் காப்போன் எவ்வளவு சொல்லியும் மற்ற இரண்டு மீன்களும் அதைப்பற்றிக் கவலைப்படவேயில்லை
ஒரு சிறிய கால்வாயின் வழியாக வரு முன் காப்போன் குட்டையை விட்டு வெளியேறி விட்டது...
மறு நாள் காலை குட்டையை நிரப்ப மணல் மூட்டைகள் வண்டியில் வந்து இறங்கின. அதை வந்த பின் காப்போன் பார்த்து விட்டது.
இனி இக்குட்டையில் உயிர் வாழ முடியாது நாம் இருவரும்.... இந்தக்கால்வாயின் வழியாகத் தப்பி ஓடி விடலாம்
நான் வர மாட்டேன். நீ, வேண்டு-மானால்..போ
வந்த பின் காப்போன் குட்டையை விட்டு ஓடி விட்டது.
மணல் மூட்டைகளை முதலில் கால்வாயில் போட்டுக்குட்டைக்குள் வரும் நீரையடைத்தனர்
பாவம் வந்த பின்னும் காவாதான் தன் நண்பர்கள் தப்பித்துச் சென்ற கால் வாயில் புகுந்து மணல்மூட்டையில் சிக்கி இறந்து விட்டது.
ஐய்யோ! என் சோம்பேறித்தனத் திற்கு கடவுள் எனக்கு கொடுத்த தண்டனை

அறிவீனம்.

சாமியைக் கும்பிட்டுக் கோவிலிலிருந்து வெளியே வந்தார், ஒரு பெரியவர். அப்போதுதான் கோவிலுக்குள் நுழையும் முனுசாமியைப் பார்த்தார். தமது மகனுடன் ஒரே வகுப்பில் படித்த முனுசாமியைப் பார்த்ததும், என்னடா, முனுசாமி... சௌக்கியமா...?' என்று விசாரித்தார், பெரியவர்.

'வணக்கம், தாத்தா...' எனப் பெரியவரை அன்புடன் வணங்கிய



முனுசாமி, சொன்னான். ''தாத்தா... நோயாய்ப் படுத்துவிட்ட என் அப்பா, வேலைக்குப் போய் பல மாதங்களாகி விட்டன சாப்பாட்டுக்கு ரொம்ப கஷ்டம்...! அதனாலே... தமிழோங்கிபுரக் காட்டுக்குள்ளே, மரம் அறுக்கிற தொழில் நடக்கிறதாம். அங்கே, என்னுடை மாமா வேலை செய்கிறார். அவரைச் சந்தித்து, அங்கே ஏதாவது வேலை செய்து சம்பாதித்துக் குடும்பத்துக்கு உதவலாமே — என்று புறப்பட்டிருக்கிறேன்...''

''சரி.. சாமி கும்பிட்டுவிட்டுப் போய் வா... உங்களுக்குக் கடவுள் உதவி செய்வார்..'' எனப் பரிவும், பச்சாத்தாபமுமாகச் சொல்லி ஒரு பத்து ரூபாயை முனுசாமியிடம் கொடுத்துவிட்டுச் சென்றார், பெரியவர்.

பத்துப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு — தபால் அலுவலகத்திலிருந்து வெளியே வந்த அந்தப் பெரியவர், வாசலில் நிற்கிற முனுசாமியைப் பார்த்துத் திகைத்தார். 'என்னடா, முனுசாமி... காட்டுக்குள்ளே மரம் அறுக்கிற வேலைக்குப் போகிறேன் என்றாயே, என்ன ஆயிற்று...? எனக் கரிசனத்துடன் கேட்டார்.

முனுசாமி கூறினான்: 'தாத்தா... திட்டமிட்டபடியே, காட்டுக்குப் போனேன், போகும் வழியில், முன்னங் கால்களில் முழங்கால் வரை இழந்த ஒரு மான், பின்னங் கால்களால் தத்தித் தாவி, அங்கும் இங்குமாக மேய்ந்து கொண்டிருந்தது. இந்த விசித்திரத்தைப் பார்த்ததும், வீட்டுக்கு வந்து விட்டேன்...!

'ஏன்...?' என்றார், தாத்தா.

'' ''ஊனமுற்ற மானை ஊக்கமூட்டி உயிர் வளர்க்கிற கருணை மிகுந்த கடவுள், நம்மையும் கருணையுடன் வாழ வைக்க மாட்டாரா...? என்கிற நம்பிக்கையுடன் வீட்டுக்கு வந்து, வேலைக்காக அலைந்து கொண்டிருக்கிறேன்...' என்றான், முனுசாமி.

இதைக் கேட்டதும்— 'போடா, முட்டாள்...! காலில் ஊனமுற்ற மானுக்குக் கடவுள் கருணை காட்டினார், ஆனால், நீ...' ஊனமுற்றவனா நீ...? புத்தியில் ஊனப்பட்ட சோம்பேறிக்குக் கடவுளானாலும் கருணை செய்யமாட்டார்! அங்கஹீனமுற்றவனல்ல, அறிவீனப்பட்டவன் நீ! போய்... மரம் அறுக்கிற வேலையைச் செய்து, பாடுபட்டுச் சம்பாதித்து, உனது பெற்றோர்களைக் காப்பாற்று. இந்த நல்ல முயற்சிக்குக் கடவுள் கட்டாயம் உதவி செய்வார்...!' என்று எரிச்சலும், பரிதாபமுமாக அறிவுறுத்தினார், தாத்தா.

— ஆர். குமரன்

பிருந்தாவனக் கதையரங்கம்



ஓர் ஆற்றின் கரையிலே இரு முயல் குட்டிகள் விளையாடி மகிழ்ந்து கொண்டிருந்தன. அப்போது தாய் முயல், "நான் உங்களுக்கு உணவு கொண்டு வரச் செல்கிறேன். நீங்கள் இருவரும் புதருக்குள் பத்திரமாக இருங்கள்" என்றது. உடனே இரு முயல்களும் சரியெனத் தலையாட்டிவிட்டு மும்முரமாக விளையாடிக் கொண்டிருந்தன. அதனைப் பார்த்தவாறு இருந்த ஆறு மெல்லிய குரலில் "ஏ குட்டி முயல்களே, உங்கள் தாய் சொல்லைத் தட்டாதீர்கள் புதருக்குள் மறைந்து கொள்ளுங்கள்" எனக் கூறியதை முயல்கள் கேட்காமல் விளையாடிக் கொண்டிருந்தன. அப்போது ஆறு, "முயல்களே, உங்களுக்கு ஒரு கதை சொல்கிறேன்; கேளுங்கள்" என்றது. உடனே முயல்கள் இரண்டும் ஓடி வந்து "சீக்கிரம் கூறு" என்றன.

"உங்களைப்போல ஒரு முயல் குட்டி இப்படி விளையாடிக் கொண்டிருந்தது. அந்தச் சமயம் அதன் தாய் கூறியது: "நான் உணவு எடுத்து வரப் போகிறேன். நரி வந்தால் உன்னை விடாது. அதனால் புதருக்குள் ஒளிந்து இரு" என்றது.


உடனே குட்டி முயல்,... "நரி என்றால் என்னம்மா? அது எப்படி இருக்கும்? என்ன செய்யும்?" என்று கேட்டது.

"நரியின் முகம் நாயின் முகம் போல இருக்கும். உடல் ஆட்டின் உடலைப் போல இருக்கும். அது நம்மை ஏமாற்றிக் கொன்றுவிடும். எனவே ஜாக்கிரதையாக இரு" எனக் கூறிவிட்டுத் தாய் முயல் சென்றது. பாவம், குட்டி முயலுக்கு நாயின் முகமும் தெரியாது; ஆட்டின் உடம்பும் தெரியாது.

தாய் முயல் சொன்னதையெல்லாம் தூரத்திலிருந்தே ஒளிந்திருந்த நரி கேட்டு விட்டு, தாய் முயல் சென்றவுடன் ஏமாற்ற நினைத்து மெல்ல, குட்டி முயல் அருகே வந்தது. குட்டி முயல் பயந்த போது, "பயப்படாதே, நான் நரியல்ல. நான் குதிரைக் குட்டி" எனக் கூறி தன் வாலை ஆட்டிக் காட்டியது. முயல் குட்டிக்கு நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. ஏனென்றால், நரிக்கு வால் உண்டா? இல்லையா? பெரியதா? சிறியதா? எனவும் அதற்குத் தெரியவில்லை. தன் தாயும் கூறவில்லையே! என்ன செய்வது? எனப் புரியாமல் திகைத்தது. நரி வஞ்சகமாக முயலை ஏமாற்ற நினைத்து, "குட்டி முயலே... நாம் ஓடிப் பிடித்து விளையாடுவோமா? எனக்குப் பொழுதே போகவில்லை" என்றது. முயல் குட்டி இதனிடமிருந்து எப்படித் தப்பிக்கலாம் என்று சற்று யோசித்து

விட்டு,சரியெனக் கூறி, ''குட்டிக் குதிரையே,நீ சற்று முன்னால் ஓடு. நானும் வருகிறேன்'' என்று நரியைச் சற்று முன்னால் ஓடவிட்டு மெதுவாக ஓடுவது போல ஓடி ஒரு புதருக்குள் மறைந்து, 'இது நரியா? குதிரையா?' என அறிய, ''ஏ.... நரியே, சற்று நில்லு'' என்று குரல் கொடுத்தது. உடனே நரி, சட்டென்று நின்றது. உடனே முயல் நினைத்துக் கொண்டது 'இது நரியாக இருப்பதனால்தான் நான் கூப்பிட்டவுடன் நின்றது. குதிரையாக இருந்தால் ஏன் நிற்க வேண்டும்? ஓடி இருக்குமே!' என்று மனதினுள் நினைத்துக் கொண்டு புதர்களுக்குள் புகுந்து ஓடி அம்மா இருக்கும் இடத்தை அடைந்தது. 'நல்ல காலம், அம்மா பேச்சைக் கேட்காமல் ஆபத்தில் மாட்டிக் கொண்டோம். ஆனாலும், எப்படியோ தப்பி விட்டேன்' என்று மகிழ்ந்தது முயல் குட்டி. நரி சிறிது நேரம் தேடி விட்டு ஒரு முயலிடம் ஏமாந்து விட்டோமே என்ற கோபத்துடன் சென்றது.

இவ்வாறு ஆறு கதையைக் கூறி முடித்தது. கதை கேட்டுக் கொண்டிருந்த இரு முயல்களும், ''நாங்களும் இனி,தாய் பேச்சைத் தட்ட மாட்டோம்'' எனக் கூறி புதருக்குள் மறைந்து கொண்டன.



சோலையூர் என்ற கிராமத்தில், ஒரு குறும்புக்காரன் இருந்தான். அவன் செய்யும் சேஷ்டைகள் ஏராளம், ஏராளம். அவனால் பாதிக்கப்பட்டவர்கள் பல பேர். ஆனால், அவனை யாரும் திருத்த முன்வரவில்லை. அக் கிராமத்தார் அவனை குறும்புக்காரன் என்றே அழைத்தனர். அந்தக் குறும்புக்காரனின் மனத்தில் ஏகப்பட்ட கனவுகள். யாரை எப்படி ஏமாற்றி எப்படித் தவிக்க விடுவது, திடீரென ஒருவரைப் பதற வைத்து வேடிக்கை பார்ப்பது எப்படி? இதுவே அவனது தொழில்.

இந் நிலையில் அக் கிராமத்திற்கு வந்த ஒரு புதிய வயதான பெரியவர், இவனைப் பற்றிக் கேள்விப்படவே இல்லை. அந்தப் பெரியவர் ஒரு பலசரக்குக் கடை வைத்தார். அதில் வரும் சிறு தொகையை வைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

குறும்புக்காரன் சும்மா இருப்பானா? இப் பெரியவரைப் பற்றிச் சிலவற்றை அறிந்து வைத்துக் கொண்டான். பெரியவரை எப்படி ஏமாற்றுவது என்று யோசித்துக் கொண்டிருந்தான். அப்போது அவனுக்குப் புதிய எண்ணம் ஒன்று பிறந்தது. அதன்படி நடக்க முடிவு செய்தான்.

திட்டப்படி அவரது கடைக்குச் சென்றான். பெரியவரைப் பார்த்தான். மனத்தில் எளிதாக இவரை ஏமாற்றலாம் என்று நினைத்துக் கொண்டான். பெரியவர் குறும்புக்காரனைப் பார்த்து, ''என்னப்பா, வேணும்?'' என்று கேட்டார்.

''எனக்கு நிறையப் பொருள்கள் வேண்டும், எண்ணெய் அரை லிட்டர் உளுத்து. துவரம் பருப்பு அரை கிலோ, பாசிப் பருப்பு ஒரு கிலோ, அரிசி பத்து கிலோ, இன்னும் சொல்லுகிற பொருளையெல்லாம் எடுத்து வை,'' என்று அதிகாரக் குரலில் பேசினான். பெரியவர் மனத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆஹா! இன்றைக்கு நல்ல வியாபாரம்தான் என்று எண்ணி, அந்த அப்பாவிப் பெரியவர் அவன் சொன்னவற்றையெல்லாம்எடுத்துக்கொடுத்தார். அவன் சொன்ன பொருள்கள் மொத்தம் எழுபது.

அப் பெரியவர் குறும்புக்காரனைப் பார்த்து, ''தம்பி, நீ வாங்கியிருக்கிற சாமான்கள் எல்லாம் சேர்த்து 175 ரூபாய்! இருந்தாலும் 160 ரூபாய் கொடுத்தால் போதுமானது! இவ்வளவு

பொருள்கள் யாரும் என் கடையில் வாங்கவில்லை. அதனால்தான்..'' என்று இழுக்கும் போதே குறும்புக்காரன் பெரிதாகச் சிரித்து விட்டு, ''இந்தப் பொருள்கள் எல்லாம் எவனுக்கு வேணும்? சரிதான் போய்யா!'' என்று சொல்லி விட்டு ஓடியே போய் விட்டான். பெரியவர் சற்றும் எதிர்பார்க்க வில்லை இப்படி நடக்கும் என்று!

அன்று குறும்புக்காரன் அப் பெரியவர் கடை வழியே போய் கொண்டிருக்க, பெரியவர் அவனைப் பார்த்துக் கூப்பிட்டார். குறும்புக்காரன் தயங்காமல் போய், ''ஏன் அழைத்தீர்கள்?'' என்று கேட்டான். பெரியவர் குறும்புக்காரனைப் பார்த்து, ''உன்னைப் பார்த்தால், நல்லவனாகத் தெரிகிறாய்! நீ அன்றைக்குச் செய்த காரியத்தை நான் மறந்து விட்டேன்! தம்பி, நான் சொல்கிறபடி நீ செய்தால் போதும். இதோ இப்பெட்டியை அடுத்த ஊரிலுள்ள பட்டணத்திற்குக் கொண்டு போய்க் கொடுத்து விடு! இதோ என் சன்மானம்'' என்று சொல்லிச் சில காசுகளைக் கொடுத்தார். குறும்புக்காரனிடம் பெட்டியைக் கொடுத்து, ''இப்பெட்டியை யாதொரு காரணம் கொண்டும் திறக்காதே! இதில் விலை மதிப்பில்லாத பொருள்கள் உள்ளன. பெட்டியிலே விலாசம் இருக்கிறது'' என்று அவனிடம் கூறினார். அவனும் 'சரி' என்றான்.

பாதித் தூரம் வந்தாகி விட்டது. குறும்புக்காரனுக்கு ஆவல் தாங்க முடியவில்லை. அந்தப் பெட்டியில்தான் என்ன இருக்கிறது? விலையுயர்ந்த பொருள் என்று சொன்னாரே, ஒரு வேளை பொன், முத்து, வைரமாக இருக்குமோ? அந்தப் பெட்டியைக் குலுக்கிப் பார்த்தான். 'டொக், டொக்' என சப்தம் கேட்டது. நிச்சயம் வைடூரியம்தான் என்று நினைத்துப் பெட்டியை உடைத்தான். உடனே அதிலிருந்து நூற்றுக்கணக்கான தேனீக்கள் 'மள''மள'வென வந்து குறும்புக்காரனை ஒரு கை பார்த்து விட்டன! குறும்புக்காரன் இதைச் சற்றும் எதிர்பார்க்க முடியாமல் 'யப்போ' அய்யோ, அம்மா!' என்று சத்தம் போட்டுக் கொண்டே வந்த வழியே திரும்பி ஓடினான்.

கேளுங்கள்;

* கிறிஸ்துமஸ் வாழ்த்து அனுப்புகிறீர்களே, இதை முதல் முதலாக அனுப்பியவர் யார் என்று தெரியுமா?

— வெ. சிலம்பன், வேலூர்.

முதல்முதலாக கிறிஸ்துமஸ் வாழ்த்தை ஓர் அட்டையில் அழகாகத் தயாரித்தவர், இங்கிலாந்தைச் சேர்ந்த ஜே. சி. ஹார்ஸ்லி என்பவர்தான். 1843 - ஆம் ஆண்டில் தம் நண்பரான ஹென்றி கோல் என்பவருக்காகத் தயாரித்தாராம். எல்லாரும் அதைப் பாராட்டவே, 1000 கார்டுகள் அதுபோல அச்சிட்டு விற்பனை செய்தாராம்.

* சென்னையிலும் சில முக்கிய நகரங்களிலும் போக்குவரத்து அதிகமாக உள்ள இடங்களில்சிவப்பு,ஆரஞ்சு,பச்சை விளக்குகளைப் பார்த்து வண்டிகளை ஓட்டுவதைப் பார்த்திருக்கிறேன். இந்த மாதிரி விளக்குகளைக் கண்டுபிடித்தவர் யார்?

— என். மாலா, உடுமலைப்பேட்டை.

கண்டுபிடித்தவர் பெயர் தெரியவில்லை. ஆயினும், முதல்முதலாக இந்தவிளக்குகளைப் பயன்படுத்தியவர்கள் அமெரிக்காவிலுள்ள நியூயார்க்கைச் சேர்ந்தவர்கள்தான். 1918 — இல் கண்டுபிடித்த இந்த முறையில் எட்டு ஆண்டுகள் சென்று சில மாற்றங்களை ஒரு குழு செய்தது. அநேகமாக எல்லா நாடுகளும் அந்த முறையையே பின்பற்றுகின்றன.

* இப்போது நூற்றாண்டு விழாக் கொண்டாடுகிறோமே நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை, அவர் இளம் வயதில் ஓவியராக இருந்தார் என்று படித்திருக்கிறேன். ஆசிரியராகவும் அவர் வேலை பார்த்ததாக என் நண்பன் சொல்கிறான். அது உண்மையா?

— ப. கிர்த்திவாசன், கோவை — 2.



உண்மைதான். அவர் நாமக்கல் போர்டு உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த தொடக்கப்பள்ளியில் மூன்றாவது வகுப்பு ஆசிரியராக வேலை பார்த்தார். எவ்வளவு காலம் தெரியுமா? மூன்று மாதங்கள்தான்! அவர் அரசியலில் தீவிரமாக இருந்ததால், அப்பள்ளித் தலைமை ஆசிரியருக்குப் பிடிக்கவில்லை. அதனால், வேலையை ராஜிநாமாச் செய்து விட்டார்.

* சிறுவர் கலைக்களஞ்சியம் தயாரித்த ம. ப. பெரியசாமித்தூரன் அவர்களை நான் இரண்டு மூன்று முறை பார்த்திருக்கிறேன். அழகாக இருப்பார். கிராப்பு வைத்திருப்பார். ஆனால், ஆரம்ப காலத்தில் அவர் குடுமி வைத்திருந்தாராமே!

— வி. வேலப்பன், ஈரோடு.

தூரன்மட்டுமா? அறிஞர் அண்ணாபோன்றவர்களும் குடுமிதான் வைத்திருந்தார்கள். அவர்கள் பள்ளியிலும் கல்லூரியிலும் சேர்ந்தபோது கிராப் வைத்துக் கொள்வதுதான் நாகரிக வளர்ச்சியாகக் கருதப்பட்டதால், பெரும்பாலான மாணவர்கள் கிராப் வைத்திருந்தார்கள். அவர்களின் கேலிக்குப் பயந்ததாலும், தலை குளிப்பதும் தலை மயிரை உலர்த்துவதும் சிரமமாக இருந்ததாலும், கிராப் வைத்துக் கொண்டார்கள்.

* குயில் கறுப்பாக இருப்பதைப் பார்த்திருக்கிறேன். ஆனால், குயிலைப் போலவே இன்னொரு பறவை இருக்கிறது. அதன் உடலில் புள்ளி புள்ளியாக இருக்கிறது. அதன் பெயர் கூற முடியுமா?

— ஹ. கரீம், பள்ளிவாசல்.

புள்ளி புள்ளியாக இருக்கிறதே, அதுவும் குயில்தான். கறுப்பாயிருப்பது ஆண். புள்ளியுடன் இருப்பது பெண். இரண்டும் ஒரே வகையைச் சேர்ந்தவைதான்.

* கரடிகளில் 'பன்றிக் கரடி' என்று ஒன்று இருக்கிறதாமே, அது எந்த நாட்டில்?

— க. வேதாசலம், திருவண்ணாமலை.

நம் நாட்டிலும் இலங்கையிலும்தான் இருக்கிறது. சாதாரணமாக நாம் காணும் கறுப்புக் கரடியைத்தான் பன்றிக் கரடி என்கிறார்கள். நீண்ட முகம், முரட்டு உரோமம், குட்டையான பின் கால்கள், முன் கால்களில் தந்தம் போல வெள்ளை நிறத்தில் நகங்கள், மார்பிலே V போல வெள்ளை அடையாளம் — இவை களுடன் கூடியதுதான் பன்றிக் கரடி. இதற்

சொல்லுகிறோம்



கும் பன்றிக்கும் என்ன சம்பந்தம்? ஆனாலும் ஏன்தான் இதைப்பன்றிக்கரடி என்று அழைக்கிறார்களோ தெரியவில்லை.

* ரட்யார்டு கிப்ளிங் எழுதிய ஜங்கில் புக் (Jungle Book) என்ற புத்தகத்தைப் படித்தேன். மிக நன்றாக இருந்தது. கீழே வைக்கவே மனம் வரவில்லை. இவர் ஆங்கிலேயரா, அமெரிக்கரா?

— என். சேதுமாதவன், சென்னை — 4.

அவர் நம் இந்தியாவிலே பம்பாய் நகரில் பிறந்த ஆங்கிலேயர். ஆங்கிலேயரே உலகம் முழுவதையும் வென்று ஆட்சி புரிய வேண்டும் என்று கனவு கண்டவர். யுத்தங்களைப் புகழ்ந்து எழுதியவர். முதலில் நம் நாட்டில் பத்திரிகையாளராகத் தொழிலைத் தொடங்கி, பிறகு கதாசிரியராகவும் கவிஞராகவும் விளங்கியவர்.

* கற்றுப்புறச் சூழலை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று அடிக்கடி கூறுகிறார்கள். அண்ணா நகருக்கும் அரும்பாக்கத்திற்கும் இடையிலே உள்ள கூவம் ஆற்றை வந்து பாருங்கள். சாக்கடை நீரையெல்லாம் அதிலே விட்டு, கொசு வளர்க்கும் பண்ணையாக்கி விட்டார்கள். அந்தப் பக்கம் போகும் போதே, மூக்கைப் பிடித்துக் கொண்டு போக வேண்டும். அவ்வளவு துர்நாற்றம்! இப்படிச் செய்வது நியாயமா?

— மா. கோவிந்தராஜன்,
சென்னை — 106.

நியாயமில்லைதான். அதிகாரத்தில் உள்ளவர்கள் காரணத்தைக் கண்டறிந்து, உடனே தூய்மைப்படுத்துவதுதான் முறை.

* 'ஆஜானுபாகு' என்கிறார்களே, அப்படியென்றால்...?

— சி. குமாரசாமி, கும்பகோணம்.

'முழங்காலளவு நீண்ட கைகளை உடையவர்' என்று பொருள். கம்பீரமான ஒரு சிலருக்குத்தான் அப்படி இருக்கும். மற்றவர்களுக்குக் கைகளைத் தொங்க விட்டால், முழங்காலுக்கு 4, 5 அங்குலங்கள் மேலே நின்று விடும்.

* குழந்தைப் புத்தக டிரஸ்ட் ஏற்படுவதால் என்ன நன்மை? நம் தமிழகத்தில் எப்போது ஏற்படுத்தப்படும்?

— சீனிவாச பாரத், தே. கல்லுப்பட்டி.

குழந்தைகளுக்காக எழுதுவோரில் பலர், தங்கள் எழுத்தோவியங்களைப் புத்தகங்களாக வெளியிட முடியாமல் தவிக்கிறார்கள். எழுத்தாளர்களின் கையெழுத்துப் பிரதிகளை வரவழைத்து, அவற்றில் நல்லனவற்றைத் தேர்ந்தெடுத்து 5,000 முதல் 10,000 பிரதிகள் வரை அச்சிட்டுப் பள்ளிகளுக்கும், நூலகங்களுக்கும் கொடுக்கலாம். தரமான புத்தகங்களைச் சிறப்பாக அச்சிட்டு, குறைந்த விலையில் கொடுக்க முடியும். இதையெல்லாம் செய்ய குழந்தைப் புத்தக டிரஸ்ட் வேண்டும். விரைவிலே தமிழகத்தில் அத்தகைய டிரஸ்ட் ஒன்றினைத் தமிழக அரசு ஏற்படுத்தும் என நம்புகிறோம்.

* ஒட்டகச்சிவிங்கி மிகவும் உயரமாக இருக்கிறதே, அது எத்தனை ஆண்டுகள் உயிரோடு இருக்கும்?

— சி. குமார், ஆலந்தூர்.




உயரத்திற்கும் உயிரோடிருக்கும் ஆண்டுகளுக்கும் சம்பந்தமே இல்லை. ஒட்டகச்சிவிங்கி சுமார் 30 ஆண்டுகள்தான் உயிரோடிருக்கும்.

பருந்தாவனம்



தேவலை

உங்களில் பலருக்குத் 'தேவலை' என்ற சொல் எப்படி வந்தது என்பது தெரியாது. பழங்காலத்தில் 'தாவில்லை' என்னும் சொல்லை அடிக்கடி பயன்படுத்தி வந்தனர். தா என்ருல் துன்பம். தாவில்லை என்ருல்



துன்பமில்லை. இந்தத் தாவில்லை, 'தாவலை' என்று மாறி, இப்போது 'தேவலை' என்ருகிவிட்டது.

ஆதாரம்: நாமக்கல் கவிஞர் எழுதிய 'சங்க காலத் தமிழ்' என்ற புத்தகம்.

தகவல்: தே.சீனிவாசன் (6459), சென்னை — 18.

வலிமை எது?

''என்ன, நம் அரசர் கத்தியால் போரிடாமல் பேஞவால் போரிடுகிருரே!''

''கத்தி முனையை விடப் பேஞ முனைக்கு வலிமை அதிகம் என்று யாரோ சொன்ஞங்களாம்.''

— க. ஜெயக்குமார் (18,527), அம்மாப்பேட்டை.

மதுரையில் அதிசயம்!

மதுரை மீனுட்சி அம்மன் கோவிலுக்கு நாங்கள் போனபோது, தெப்பக் குளத்தின் கரையில் ஒரு சதுரமான பித்தளைத் தகடு பதித்திருந்தது. அதிலிருந்து பார்த்தால் ஒரே சமயத்



தில் 6 கோபுரங்களையும் பார்க்க முடியும் என்றார்கள். நின்று பார்த்தோம். 6 திசைகளில் உள்ள 6 கோபுரங்களையும் கண்டு மகிழ்ந்தோம்

— ஜெ. மூகாதேவி (19,102),
திருமழபாடி.



இரு பெரும் பிறப்புகள்

தமிழகத்தில் அண்ணா அவர்கள் பிறந்தது செப்டம்பர் 15. கர்நாடக மாநிலத்தில் அந்த மாநிலத் தொழில் வளர்ச்சிக்குக் காரணமாயிருந்த பாரதரத்னம் விஸ்வேஸ்வரய்யா பிறந்ததும் அதே செப்டம்பர் 15 இல் தான்! வருடங்கள் தான் வெவ்வேறு.

— இராம. சுரேஷ்குமார் (18,023),
திருக்கடையூர்.

கூறியவர் யார்?




கீழே சில பொன்மொழிகள் தரப்பட்டுள்ளன. அவற்றைக் கூறிய தலைவர்கள் யார்?

1. இரண்டு உள்ளங்களை எளிதில் இணைக்கும் பாதையே அன்பு.
2. எளிமைதான் நமது பண்பு.
3. ஒழுக்கம், நாணயம், நேர்மை இவை கடவுளை விட மேலானவை.

விடைகள்:

1. ராஜாஜி, 2. அறிஞர் அண்ணா.
3. பெரியார் ஈ. வெ. ரா.

— மு. பூபாலன் (18,895),
மூஞ்சூர் பட்டு.



இன்று கண்டேன்

இரண்டு நாட்களிலே
இந்தியாவின் மான்செஸ்டரில்
(கோவை)
இனிதாக நடந்திட்ட
இன்பமான மாநாட்டை
இன்று நான் கண்டிட்டேன்
(27.11.87)
இன்பமுற்றேன் மிகமிகவே.
இத்தகைய காட்சிதனை
இன்று நான் கண்டது என்
இல்லத்தில் இருந்தபடி.
ஆமாம் — தொலைக்காட்சியில்

— கொ. மா. கோ. இளங்கோ
கோகுலம் சிறுவர் சங்கம்,
இராஜபாளையம்.

எச்சரிக்கை அடி

சிறுவன் ஒருவன் தெனாலிராமன் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தான். அவனிடம் ஒரு பானையைக்



கொடுத்து, கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வரும்படி கூறினார் தெனாலி ராமன். தண்ணீர் கொண்டு வரச் சிறுவன் புறப்பட்டான். "பானையை உடைக்காமல் கொண்டு வர வேண்டும்" என்று கூறிவிட்டுச் சிறுவனின் முதுகில் ஓங்கி ஓர் அடி அடித்தார். முதுகைத் தடவிக் கொண்டே சிறுவன் நீர் எடுக்கச் சென்றான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர், "பையன் பானையை உடைத்தால்தானே அடிக்க வேண்டும்? அதற்கு முன்னதாகவே ஏன் அடித்தீர்?" என்று கேட்டார்.

"உமக்கு ஒன்றும் புரியவில்லை. பானையை உடைத்தபிறகு அடி கொடுத்தால், பானை மீண்டும் கிடைத்துவிடுமா? ஆனால், முன்னரே கொடுக்கும் அடி, அவனுக்கு எச்சரிக்கை தந்து, பானையைப் பாதுகாக்கும்" என்றார் தெனாலிராமன்.

— ஜெ. அலெக்சாண்டர் (19,004), புதுவை — 1.

விடை என்ன?

1. தன்னைத் தானே பலி கொடுப்பான்; பிறருக்கு ஒளி கொடுப்பான். அவன் யார்?



2. வெள்ளை நிறக் கல். வெயில் பட்டால் உருகுது; கையில் பட்டால் கரையுது. அது என்ன?
3. எல்லாச் சட்டியும் மூடியிருக்க ஊறுகாய்ச் சட்டி திறந்து கிடக்குது. அது என்ன?
4. சின்னஞ்சிறு வீட்டிலே சிப்பாய்கள் பல பேரு.

விடைகள்: 1. மெழுகுவர்த்தி; 2. பனிக்கட்டி; 3. கிணறு; 4. தீப்பெட்டி.

— எஸ். சோமசுந்தரம் (13,225), வீரவநல்லூர்.

பெற்றோர் பக்தி




மகாத்மா காந்தியிடம் கோபால கிருஷ்ண கோகலே ஒரு கேள்வி கேட்டார். "நீங்கள் உங்கள் அப்பா அம்மாவுடன் காட்டு வழியே போய்க் கொண்டு இருக்கிறீர்கள். எதிரில் ஒரு சிங்கம் வருகிறது. அப்பொழுது நீங்கள் அப்பா, அம்மா இருவரில் யாரை முதலில் காப்பாற்றுவீர்கள்?" என்று கேட்டார்.

உடனே மகாத்மா காந்தி, "முதலில் நான் சிங்கத்தின் வாய்க்குள் புகுந்து விடுவேன். சிங்கம் என்னைக் கொன்று தின்பதற்குள் என் அப்பா, அம்மா தப்பி ஓடி விடலாம் அல்லவா?" என்று பதிலளித்தார்.

— க. ஸ்ரீராம் (8477), நெய்வேலி—1

விண்வெளிச் சாதனை

முதன் முதலில் விண்வெளியில்



பறந்து சாதனை புரிந்தவர் யூரி ககாரின் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனாலும், அதிக நாட்கள் விண்வெளியில் இருந்து சாதனை புரிந்தவர் யார் தெரியுமா?

சோவியத் யூனியனைச் சேர்ந்த யூரி ரொமனென்கோ என்பவர்தான். அவர் விண்வெளியில் இருந்த நாட்கள் எத்தனை தெரியுமா? 238 நாட்கள்!

— நா. சுஜாதா (10,114),
குரும்பப்பட்டி.

உயிர் எழுத்து இல்லாத சொல்




ஆங்கிலத்தில் ஏறக்குறைய எல்லாச் சொற்களிலும் உயிரெழுத்துக்கள் வருகின்றன. **Fly, Cry** போன்ற சொற்களில் உயிரெழுத்து வருவதில்லை. அதே போல், **Rhythm** என்ற 6 எழுத்துச்சொல்லிலும் உயிரெழுத்து இல்லை.

— பு. கணேஷ் நியூட்டன் (11,818),
திண்டுக்கல்.

காரம்

காரம் இல்லாத ஐந்து காரங்கள்:

1. புகழ் வாய்ந்த நூல் சிலப்பதிகாரம்.
2. பள்ளிச் செல்லுமுன் பார்ப்பது கடிகாரம்.



3. காலையில் உண்பது பலகாரம்.
4. ஆணும் பெண்ணும் செய்து கொள்வது அலங்காரம்.
5. பிள்ளைகள் தப்புச் செய்தால் பெற்றோர்க்கு வருவது ஆங்காரம்.


— ர. பெருமாள் (12,072),
சர்க்கார் கொல்லப்பட்டி.

அதிக நூல்கள்



உலகிலேயே மிகவும் அதிகமான நூல்களை இயற்றிய நூலாசிரியர் அலெக்சாண்டர் டூமாஸ் என்பவராவார். இவர் இயற்றியுள்ள மொத்த நூல்கள் 1200 ஆகும்.

— கே. நரசிம்மன் (7378), ஓசூர்.



வந்தே மாதரத்தின் கதை

ஜானகி மணாளன்



குழந்தைகளே! உங்களுக்கு 'ஜன கண மன' பாடல் தெரியும் அல்லவா?

தினசரி மாலையில் பள்ளி முடியும் போது பாடுவீர்களே! மற்றும் முக்கிய விழாக்களின் முடிவிலும் அதைப் பாடுகிறோம். அப்போது என்ன செய்கிறீர்கள்? இடத்தை விட்டு எழுந்து, ஆடாமல் அசையாமல் நிமிர்ந்து நிற்கிறீர்கள். அல்லவா? ஏன் இப்படிச் செய்கிறீர்கள் தெரியுமா? அந்தப் பாடலுக்கு மரியாதை செலுத்துவதற்குத்தான்.

எத்தனையோ பாடல்கள் இருக்க, அதற்கு மட்டும் ஏன் அத்தனை மரியாதை?

ஏனெனில், அதில் நமது நாட்டின் உயர்வையும் சிறப்பையும் கூறி, நம் அன்னை பாரத மாதாவை, நாம் போற்றிப் புகழ்கிறோம். எனவேதான் அந்த மரியாதை! அதுதான் நமது தேசிய கீதம்!

தேசியச் சின்னம், தேசியக் கொடி, தேசியப் பறவை, தேசிய மிருகம் என்கிறோம்.

தேசிய கீதமும் இப்படிப்பட்ட ஓர் உயர் சிறப்புமிக்க ஒன்றுதான். எனவேதான் அதைப் பாடும் போது எழுந்து நின்று மரியாதை செலுத்துகிறோம். அது நம்முடைய நாட்டு வணக்கப் பாடல்!

பொதுவாக எல்லா நாடுகளிலும், ஒரே ஒரு தேசியகீதப் பாடல்தான் இருக்கும். ஆனால், நமது பாரத நாட்டிற்கு மட்டும் இரு தேசிய கீதங்கள் உள்ளன!

ஒன்று நீங்கள் தினசரி பாடும் 'ஜன கண மன'... சரி... மற்றொன்று எது? சொல்கிறேன்.

நீங்கள் எல்லாம் அதிகாலையில் துயில் எழும் பழக்கம் உள்ளவர்கள் தானே? அப்படியானால் அப் பாடலை நீங்கள் கேட்டிருக்கலாமே!

எங்கே என்கிறீர்களா?

வானொலி அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தொடங்குவதற்கு முன்பு தினசரி ஒரு பாடலின் முதல் அடியை ஒலிபரப்பி விட்டுத் தொடங்குகிறார்களே! கேட்டதில்லையா நீங்கள்?

இப்போது நினைவுக்கு வந்திருக்குமே! ஆம்! 'வந்தே மாதரம்...' என்று தொடங்கி ஒரு பாடல் ஒலிக்கிறது அல்லவா? அதுதான் நமது நாட்டின் இன்னொரு தேசிய கீதம்! அப்பாடலின் துவக்க வரிகள் இவைதான்.

வந்தே மாதரம்... வந்தே மாதரம்...
ஸுஜலாம் ஸுபலாம் மலயஜ சீதளாம்
ஸஸ்ய ஸ்யாமளாம் மாதரம்
— வந்தே மாதரம்

இப்பாடலில் மொத்தம் ஐந்து பத்திகள் உள்ளன. இதன் பொருள் என்ன என்று தெரிந்து கொள்ள ஆர்வமாக உள்ளது அல்லவா? அதற்கு ஒரு வழி

சொல்கிறேன். அதன்படி செய்யுங்கள். உங்கள் வீட்டில் 'பாரதியார் கவிதைகள்' என்ற நூல் இருக்குமே! அதில், 'தேசிய கீதங்கள்' என்ற முதல் தொகுதியில் 'ஜாதீய கீதம்' என்ற தலைப்பில் இரண்டு பாடல்கள் இருக்கும். அவை, இந்த வந்தே மாதரம் பாடலின் மொழி பெயர்ப்புத்தான். பாரதியார் இரண்டு விதமாக இதை மொழி பெயர்த்துள்ளார். படித்து அறிந்து கொள்ளுங்கள்.

இந்தப் பாடலுக்கே 'வந்தே மாதரம்' என்றுதான் பெயர். 'வந்தே மாதரம்' என்பதன் பொருள் என்ன தெரியுமா?

'வந்தே மாதரம்' என்ற இரு சொற்களையும் முன் பின்னுக மாற்றிச் சொல்லுங்கள். 'மாதரம் வந்தே' என்று ஆகும். 'மாதரம்' என்றால் மாதாவை 'வந்தே' என்றால் வணங்குகிறேன். அதாவது, 'இந்தியத் தாயை வணங்குகிறேன்' என்று பொருள்.

இதைப் பாரதியார் இப்படிப் பாடுகிறார்:

"வந்தே மாதரம் என்போம் —
— எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும்
என்போம்!"

என்றும், வேறொரு பாடலில்,

"தாய்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா!"

என்றும் பாடியுள்ளார்.

இந்த 'வந்தே மாதரம்' என்ற சொல் முதன் முதல் பிறந்த இடம் எது தெரியுமா? வங்காளம். அங்கு பங்கிம் சந்திர சட்டர்ஜி என்று ஒருவர். வங்க மொழியின் தலைசிறந்த நாவலாசிரியர். அவரால் இயற்றப்பட்டதுதான் இந்த 'வந்தே மாதரம்' என்ற பாடல்.

அவர் ஆங்கில அரசாங்கத்தின் துறை ஒன்றில் பணியாற்றி வந்தார். அவர் இந்த 'வந்தே மாதரம்' பாடலை 1875 ஆம் ஆண்டிலேயே எழுதி விட்டார். ஆனால் வெளியிடவில்லை.

பிற்பாடு, அவர் ஒரு நாவல் எழுதினார். அதற்கு 'ஆனந்த மடம்' என்று பெயர். அதைக் கல்கத்தாவிலிருந்து வெளியாகிக் கொண்டிருந்த 'வங்க தர்ஷன்' என்ற பத்திரிகை, 1880-ஆம் ஆண்டு, தொடர் நாவலாக வெளியிட்டது. பங்கிம் சந்திரர் என்ன செய்தார் தெரியுமா? இந்த 'வந்தே மாதரம்' பாடலை அந்த நாவலில் புகுத்தி வெளியிட்டு விட்டார். எனவே, இப் பாடல் முதன் முதல் அந்த 'வங்க தர்ஷன்' பத்திரிகையில் அச்சாகி வெளியாயிற்று. பிற்பாடு 1882ல் அந்த நாவல் தனிப் புத்தகமாக வெளி வந்தது. அப்போது, 'அகில இந்திய காங்கிரஸ்' ஸ்தாபனம்கூட ஏற்பட்டிருக்கவில்லை. அது 1885ல் தான் நிறுவப்பட்டது.

சரி. அந்த 'ஆனந்த மடம்' நாவலின் கதை என்ன தெரியுமா? அதையும் தெரிந்து கொள்ளுங்கள்.


அது சந்தானர்கள் என்ற துறவிகளைப் பற்றிய கதை. சந்தானம் என்றால் என்ன? புத்திர பாக்கியம். அதாவது மக்கள் செல்வம். அந்தத் துறவிகள் நமது பாரதத் தாயின் புதல்வர்கள். தேசத் தொண்டுக்காக அனைத்தையும் துறந்தவர்கள். தன் வீடு, தன் மனைவி, தன் மக்கள் என்ற பாசத்தைத் துறந்து, நாட்டுக்காக உயிரையும் துறக்கத் தயாராகித் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட உத்தமர்கள். அவர்கள், நமது பாரத அன்னையைப் பெண் தெய்வமாக உருவகித்து வழிபட்டார்கள். பாடிப் போற்றினார்கள். பணிந்து ஏத்தினார்கள். அவர்கள் பாடிய பாடல் தான் இந்த 'வந்தே மாதரம்' என்று தொடங்கும் நமது மற்றொரு தேசிய கீதம்!

சரி குழந்தைகளே! இந்த வந்தே மாதரம் பாடலுக்கு முதன் முதல் இசையமைத்துப் பாடியவர் யார் தெரியுமா? குருதேவர் ரவீந்திர நாத் தாகூர் தான். எந்த தாகூர்? 'ஜன கண மன'



பங்கிம் சந்திர சட்டோபாத்யாயா





பாடலை எழுதிய அதே தாகூர்தான்.

1886 ஆம் ஆண்டு, இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் கல்கத்தாவில் நடந்தது. அதன் தலைவர் தாதாபாய் நௌரோஜி. அந்த மாநாட்டு மேடையில்தான் தாகூர் இந்த வந்தே மாதரம் பாடலுக்கு, தாமே இசையமைத்துப் பாடினார். 1896ல் மீண்டும் அங்கு காங்கிரஸ் மாநாடு நடந்தது. அதிலும் இரண்டாவது தடவையாக அவரே இப் பாடலை மேடையேறிப் பாடினார். அதன் பிறகு, எப்போது இந்தப் பாடல் எங்கு பாடப்பட்டாலும் சரி... மக்கள் மிகுந்த பயபக்தியுடன் எழுந்து நின்று அதற்கு மரியாதை செலுத்தத் தொடங்கி விட்டனர். அது மட்டுமல்ல, எங்கு கூடினாலும், அல்லது ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டாலும் சரி. 'வந்தே மாதரம்' என்று ஒருவருக்கு ஒருவர் கூறிக் கொள்ளத் தொடங்கினர். கூட்டங்களில் பேசத் தொடங்குவதற்கு முன்பு, உரத்த குரலில் 'வந்தே...... மாதரம்' என்று கூவி விட்டுத்தான் பேச்சைத் தொடங்குவது என்ற வழக்கமும் ஏற்பட்டுவிட்டது. அவ்வாறு உரக்கக் கூறும் போது, அவர்களிடமும் சரி, கூட்டத்தினரிடமும் சரி... ஓர் உத்வேசம் பிறக்கும்... அவர்கள் வீறு கொண்டு எழுந்தனர்.



• தாதாபாய்

விடுதலைப் போராட்ட காலத்தில், நமது மக்களை ஒன்றுபடுத்தி அவர்களைத் தட்டியெழுப்பிய பாடல், இந்த வந்தே மாதரம் பாடல்தான்! 'வந்தே மாதரம்' என்ற குரலைக் கேட்டதுமே நடுநடுங்கிப் போகும் அளவுக்கு ஆங்கிலேயர்களை அச்சுறுத்தியது இந்தப் பாடல்தான். எனவே ஆங்கில அரசாங்கம் இப்பாடலுக்குத் தடை விதித்தது. 'வந்தே மாதரம்' என்ற சொல்லை உச்சரித்தால் போதும். அவ்வளவுதான்; உடனே அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். பல்லாயிரக்கணக்கானவர்கள் சிறை புகுந்தனர். இதனால் எல்லாம், விடுதலை வீரர்களின் ஆவேசம் மேலும் பெருகியதே தவிரக் குறையவில்லை. ஆங்கிலேயர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது 'குட்மார்னிங்' என்று கூறிச் சந்திப்பதைப் போன்று, இந்திய மக்கள், 'வந்தே மாதரம்' என்று கூறிச் சந்தித்துக் கொள்ளத் தொடங்கினர். இங்கிலாந்து நாட்டின் பத்திரிகைகள் எல்லாம் இந்தப் பாடலைப் பற்றி எழுதின. 'டைம்ஸ்' என்று ஒரு பத்திரிகை. அது என்ன எழுதியது தெரியுமா?

'காளி இந்தியர்களின் தெய்வம். சம்ஹாரம் செய்பவள். சர்வநாசத்தை உண்டாக்குபவள். வந்தே மாதரம் பாடல் அந்தக் காளி மீதுதான் பாடப்படுகிறது. ஆங்கில அரசாட்சிக்கு முடிவு கட்டி, சர்வநாசத்தை உண்டாக்க வேண்டும் என்றுதான், இந்தியர்கள் இந்த 'வந்தே மாதரம்' பாடல் மூலம் காளியிடம் வேண்டுகிறார்கள்' என்று எழுதியதாம்.



• மகாகவி பாரதியார்

1947 ஆகஸ்ட் 15 நம் நாடு விடுதலை பெற்றது. அது வரையில் இந்த 'வந்தே மாதரம்' பாடல்தான் விடுதலைப் போராட்ட வீரர்களிடம் வீர உணர்வை ஊட்டும் தாரக மந்திரமாக இருந்தது. விடுதலைக்குப் பிறகு, இந்திய நாட்டுக்கு என்று ஒரு தேசிய கீதம் வேண்டும் அல்லவா? அதற்கு இந்த 'வந்தே மாதரம்' பாடலே இருக்கலாம் என்று முதலில் கருதினார்கள். ஆனால், அவ்வாறு இதை ஏற்றுக் கொள்வதில் ஒரு சிரமம் இருந்தது. என்ன தெரியுமா?

ஒரு நாட்டின் தேசிய கீதம் என்பது அந்த நாட்டின் படித்தவர், படிக்காத பாமரர்கள் யாராக இருந்தாலும் சரி.. எளிதில் மனனம் செய்து,சிரமம் இன்றிப் பாடக் கூடியதாக இருக்க வேண்டும் என்பது மரபு. அத்துடன் எளிய மெட்டு அமைப்பதற்கு ஏற்றதாகவும் இருத்தல் வேண்டும். இப்படிப் பார்த்தால் 'வந்தே மாதரம்' பாடலை அவ்வாறு பயன்படுத்த முடியாது. ஏனெனில் அது சற்றுக் கடினமான பாடல். ஆகவேதான், இந்திய அரசு 'ஜன கண மன...' என்று தொடங்கும் ரவீந்திரநாத் தாகூரின் பாடலை தேசிய கீதமாக ஏற்றுக் கொண்டு விட்டது. அது எளிய பாடல். அத்துடன் மெட்டமைப்புக்கும் ஏற்ற ஒன்று. சிறு குழந்தைகள் கூடச் சில தடவைகள் கேட்டால் போதும். கூடப் பாடி, எளிதில் மனனம் செய்து கொண்டு விடுவார்கள். அத்தனை எளிமையானது!

ஆயினும், விடுதலைப் போரில் நம் மக்களை வீறு கொண்டு எழச் செய்த 'வந்தே மாதரம்' பாடலை ஒரேயடியாக ஒதுக்கித் தள்ளி விட முடியுமா? கூடாது அல்லவா?

எனவே, இந்திய அரசு, இந்த 'வந்தே மாதரம்' பாடலுக்கும், 'ஜன கண மன...' என்ற பாடலுக்குரிய சம அந்தஸ்தை வழங்கியுள்ளது. இதுவும் நமது நாட்டின் இன்னொரு தேசிய கீதம்தான்! ஆகவேதான், நம் நாட்டு வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தொடங்கும் போது, 'வந்தே மாதரம்' பாடலை ஒலிபரப்பி விட்டுப் பிற நிகழ்ச்சிகளைத் தொடர்கிறார்கள். இது மட்டுமல்ல, நமது இந்திய அரசு, இந்த 'வந்தே மாதரம்' பாடலின் துவக்க வரிகள் சிலவற்றைத் தபால் தலையில் அச்சிட்டு வெளியிட்டுப் பெருமைப்படுத்தியது.

குழந்தைகளே! இப்போது 'வந்தே மாதரம்' பாடலின் கதையை நன்கு புரிந்து கொண்டிருப்பீர்களே!

இனியாவது, வைகறைத் துயில் எழுங்கள். மறக்காமல், வானொலி அல்லது தொலைக்காட்சிப் பெட்டியை இயக்குங்கள். 'வந்தே மாதரம்' பாடலைக் கேட்டு, உடன் பாடிப் பழகிக் கொள்ளுங்கள்.

என்ன செய்கிறீர்களா? சரி! 'வந்தே மாதரம்!'



பிருந்தாவனக் கவியரங்கம்



அணில் பிள்ளை

அணில் பிள்ளையாம் அணில் பிள்ளை!
அழகான அணில் பிள்ளை;

எங்கள் வீட்டில் தினம் தினம்
எகிறிக் குதிக்கும் அணில் பிள்ளை.

சோலையிலே காலை மாலை
சுற்றித் திரியும் அணில் பிள்ளை.

கனிகள் பலவும் இன்று மிகக்
களித்து வாழும் அணில் பிள்ளை.

கொட்டை பலவும் கொறித்து இங்கே
குதூ கலிக்கும் அணில் பிள்ளை.

மண்ணைச் சுமந்து இராமருக்கு
மகிழ்வுடன் உதவிய அணில் பிள்ளை.

சிறுசிறு செயலை ஆனாலும்
செம்மையாய்ச் செய்யும் அணில்பிள்ளை.

அணிலைப் போல உதவிடுவோம்
அனைவரும் போற்ற வாழ்ந்திடுவோம்.

— எம். பெரியசாமி (18,892),
கபிலர் மலை — 4.

தோட்டம் போட்டனர்

தங்கள் வீட்டைச் சுற்றியே
தோட்டம் ஒன்றை அமைத்திட,
தங்கையோடு அண்ணனும்
திட்டம் ஒன்று தீட்டினான்!

கருத்தாய் நிலத்தைக் கொத்தியே
கட்டிப் பாத்தி பிரித்தனர்!
இருவர் கூடி நிலத்தினை
எழில் குலுங்க மாற்றினர்!

நிலமும் எளிதாய் ஆகிட
நீரைப் பாயச் செய்தனர்!
பலவகை யாம்விதை களைப்
பாத்தி யெங்கும் விதைத்தனர்!

தோட்டம் காக்கும் நோக்கிலே
வேலி ஒன்று போட்டனர்!
வாட்டம் போக்கும் வகையிலே
வாசச் செடிகள் வளர்த்தனர்!

நாளும் நீரைப் பாய்ச்சினர்!
நல்ல உரமும் இட்டனர்!

மூனும் களையை நீக்கினர்!
முளைத்துச் செடிகள் தழைத்தன!



பருவம் அதுவும் வந்ததே!
பூத்து யாவும் காய்த்ததே!
இருவர் சேர்ந்து பறித்தனர்!
விற்றே பணமும் ஆக்கினர்!

வம்புப் பொழுது இல்லையே!
வளர்த்த தோட்டம் செழித்ததே!
தெம்பும் பணமும் கூடின!
இருவர் மனமும் மகிழ்ந்ததே!

— க. ஸ்ரீராம் (8477),
நெய்வேலிபுதூர்.

எங்கள் வீட்டு வெள்ளைப் பசு



எங்கள் வீட்டு வெள்ளைப் பசு
எனக்கு இனிய நல்ல பசு

காலை மாலை பால் கொடுக்கும்
கறந்த பிறகு கன்றை நக்கும்.

சின்னத் தம்பி அருகில் வந்தால்
செல்ல மாக முட்டும் பசு.

என்னைக் கண்டால் பாசத் தோடு
ஏற இறங்கப் பார்க்கும் பசு.

மேய்ச்ச லுக்கு ஓட்டும் போது
வேக மாகச் செல்லும் பசு.

காலை மாலை 'அம்மா' என்று
கத்தும் எங்கள் வெள்ளைப் பசு.

— இரா. பரமசிவம் (16,320),
புதுமாத்தூர்.

வருணனுக்கு வணக்கம்



உனக்காக வேண்டினோம்;
ஊர் முழுக்கக் கூடினோம்;
எமக்காக வந்தாயே!
இன்பமழைத் தந்தாயே!

வெள்ளியில் நீ மகிழ்ந்தாயோ?
வேண்டுதலில் களித்தாயோ?
யாகத்தில் குளிர்ந்தாயோ?
தாகத்தை நீ தணித்தாயே?

பாரிலுள்ளோர் சார்பாக
பல்லுயிரின் சார்பாக
பாலகன் நான் நன்றியைப்
பகர்ந்துரைத்து வணங்குகிறேன்.

— ராஜ். திருப்பதி (16,238),
சென்னை — 600 005.

சார், தபால்!

எலி, ஒலி இனி புலியா?

* அருமைச் சிறுவர் சிறுமியர் பகுதியிலே ஒருமைப் பாட்டைக் காண்கிறேன். ஒரு பக்கம் இந்துக் கடவுள்களான பிள்ளையாரும், கண்ணனும், இன்னொரு பக்கம் ஏசு நாதரின் திருஉருவப் படம். அந்தப் படத்தை எடுத்தவரோ, எம்.எம். இப்ராஹிம். இந்து, கிறிஸ்து, முஸ்லிம் மூவரும் இணைந்தது அற்புதமே.

என். பிரதபதீஸ்வரன், கும்பகோணம்.

* டாக்டர் பூவண்ணன் எழுதிய 'புதையல் வீடு' டிசம்பரில் முடிவுற்றாலும், எங்கள் மனத்தை விட்டு அகலாதிருக்கிறது. 15 மாதங்களும் தம் கதையில் 15 வைரக் கற்களைப் பதித்து விட்டார். இறுதியில் சுமதியின் வரம் மனத்தை உருக்கி விட்டது.

— என். பாபு (1707), வேலூர்—1.

* புதையல் வீட்டையும், தங்கமணி எழுதிய 'அக்னி பூதம்' போலவே ஒன்றாகச் சேர்த்து பைண்ட் செய்து, கோகுலம் அட்டையை ஒட்டி நூலகத்தில் வைத்துள்ளேன்.

— எம்.ஏ. சுப்ரமணியன், முருகன்புதூர்,

— கோபி.

* சுமதிக்கு மட்டும் எத்தனை சிறப்பு! ஆனால், அவளுடன் சேர்ந்து உட்கோயிலின் வழியைக் கண்டுபிடித்த செங்கோடனுக்கு ஒரு பாராட்டோ பெருமையோ இல்லையே! மனம் வருந்தினேன்.

— செல்ல செந்தில்குமார், கீழ்வேளூர்.

* 'பேரொளி ஏசு' காவியன் கைவண்ணத்தில் வானவில்லாய் ஜொலித்தது.

— க. ஸ்ரீராம், நெய்வேலி புதுநகர்—1.

* குழந்தை ஏசு ஆசீர்வதிக்க, மேரியும், ஜோசையும் வணங்கி நிற்க அமலா வரைந்த ஓவியமும், 'காவியன்' எழுதிய 'பேரொளி ஏசு' கவிதையும் எங்கள் இல்லங்களின் கிறிஸ்துமஸ் பண்டிகையைத் தொடங்கி வைத்து விட்டன!

— பு. ஆல்பர்ட், திருப்பூண்டி.

* 'பேரொளி ஏசு' என்ற எனது பாடலில் 'ஏசு நாமம்' என்பதற்குப் பதிலாக 'ஏசு நாம்' என்று உள்ளது. அச்சுப் பிழை என நினைக்கிறேன்.

— காவியன், நாகப்பட்டினம்.

* சின்னஞ் சிறு வயதிலேயே அகிலனுக்கு எத்தனை பெரிய அனுபவங்கள்! அப்பப்பா! நினைத்தாலே சிலிர்ப்பு ஏற்படுகிறது.

— ஆர்.கே. அருள் செல்வன், விக்கிரபாண்டியம்.

* நாட்டில் அமைதி நிலவ அன்பு வழியைப் பின்பற்ற வேண்டிய அவசியத்தை தலையங்கத்தின் மூலம் உணர்த்தியுள்ளீர்கள். 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதியில் 'இந்த வயதிலே பணத்தை மட்டும் குறியாகக் கொண்டு எழுதுவது நல்லதல்ல' என்று அறிவுரை கூறியுள்ளீர்கள். தனி மனித வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் வழி வகுக்கும் கோகுலத்தின் பணி சிறக்க அன்பு வாழ்த்துக்கள்.

— பாலை அசோக், திருச்சி—2.

* 'கடவுளைக் கண்டவர்கள்' பகுதியில் வரும் கதைகள் பார்க்க, படிக்கச் சுவையாக இருக்கின்றன. தொடர்ந்து வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

— இரா. ச. வெற்றிச் செல்வன், திருப்பராய்த் துறை.

* 'முரட்டுக் கதாநாயகன்' அருமையான படைப்பு வி. ர. வசந்தனுக்குப் பாராட்டுதல்கள்.

— ப்ரிய பாரதி, போடி நாயக்கனூர்.

* திப்பிலி ராஜா எலி வேட்டையிலிருந்து ஒலி வேட்டைக்குச் சென்று விட்டாரே! அடுத்தது புலி வேட்டையாக இருக்குமோ!

— பி. கோவிந்தசாமி (5703) போதாம்பட்டி.

* மூக்கில் ரத்தம் வருவதைப் பற்றி எங்களுக்குத் தெரியாத பல உண்மைகளைத் தெரிந்து கொண்டோம். விளக்கமளித்த டாக்டர் கணேசன் அவர்களுக்கு நன்றி.

— கை. வேடியப்பன், சின்னக்குப்பம்.

* 'கிறிஸ்துமஸ் பரிசு' கதையைத் தமிழில் தந்த எச். கிருஷ்ணமூர்த்திக்கும், அதற்குக் கிரீடம் வைத்தது போல் படங்கள் வரைந்த ஓவியர் கல்பனாவுக்கும் பாராட்டுக்கள்.

— சிவ. இளங்கோவன், (3652), கீழப்பெருமழை.

* 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதியைப் புத்தகமாகத் தொகுத்து வருகிறேன்.

— மா. துர்க்காமணி (18324), வேதாரண்யம்.

* 'தந்தை மகளுக்கு எழுதிய கடிதங்கள்' என்ற தொகுப்பிலிருந்து 'கூழாங்கல்லின் கதை'யை எடுத்துக் கூறியிருப்பது பயனுள்ளதாக இருந்தது.

— ஜியென். சரவணன் (14362), பழநி—2.

* 16 பக்க வண்ணப் படக்கதை சிறுவர் சிறுமியர் பொக்கிஷமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. 'இந்திரனை வென்ற இளவரசன்' — ரகுவம்சம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், இவ்வளவு விளக்கமாக இக் கதையைப் படித்தவுடன்தான் அறிய முடிந்தது.

— வி.கே. சாந்தகுமாரி, விழுப்புரம்.

பாரதன் அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக, அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் ரோடு, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 3154 3, 4 34 157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 28, [illegible] தெரு, [illegible], நுங்கம்பாக்கம், சென்னை — 600 034. போன்: 4 73389.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—.
அரை மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.



மயிலை சிவமுத்து

தோற்றம்: 14-1-1892 மறைவு: 6-7-1968


இனிய
நேரங்கள்
மனதிலே
பதிந்து
இனிப்புடன்
கலந்திட...
nutrine Chocolate Eclairs
...நியூட்ரின்
சாக்லேட்
எக்லேர்ஸ்
நியூட்ரின்
இன்சுவை இயற்கையிலேயே!
பாலும், வெண்ணெயும், சாக்லேட்டும் திரண்டு அளிக்கும் அறுசுவை பேரின்பம்
நியூட்ரின்
– இந்தியாவில் மிக அதிகமாக விற்பனையாகும் மிட்டாய்கள்
வாங்குங்கள்
nutrine Chocolate Eclairs
nutrine